விலை: 30.00 Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 ஆவணி 10 புதன்கிழமை (26.08.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 251

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
T.P: 021 720 1005

இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம் 1000/= + 300/= மட்டுமே

## தீக்காயத்துக்குள்ளான குடும்பஸ்தர் உயிரிழப்பு

(மன்னார்)
தீக்காயத்துக்குள்ளான குடும்பஸ்தர் ஒருவர் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.
இச்சம்பவத்தில் 23

## புதிய அரசியலமைப்பை உருவாக்க அனைவரது ஒத்துழைப்பும் பெறப்படும்

### பிரதமர் மகிந்த தெரிவிப்பு



(கொழும்பு)
புதிய அரசியலமைப்பொன்றை உருவாக்க, கட்சி பேதங்களைக் கடந்து அனைவரது ஒத்துழைப்பும் பெற்றுக் கொள்ளப்படும் என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ அறிவித்துள்ளார்.
பாராளுமன்றில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற பாராளு 23

## கடும் எதிர்ப்புகளுக்கு மத்தியில்

# விக்னேஸ்வரனின் உரை ஹன்சார்ட்டில் இணைப்பு



(கொழும்பு)
**தென்னிலங்கையில் கடும் எதிர்ப்புகளுக்கு மத்தியில் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனின் பாராளுமன்ற கன்னி உரை ஹன்சார்ட்டில் இணைக்கப்பட்டுள்ளது.**

உலகில் உயிர் வாழும் மூத்த மொழிகளில் ஒன்றும், இந்நாட்டின் முதல் சுதேச குடிமக்களின் மொழியிலும் வாழ்த்துக்களை தெரிவிப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் கடந்த 20ஆம் திகதி உரையாற்றினார்.

இதனை அடுத்து சி.வி.விக்னேஸ்வரனின் உரையை ஹன்சார்ட்டில் இருந்து நீக்குமாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார கோரிக்கை விடுத்திருந்தார்.

இது குறித்து ஆராய்வதாக குறித்த தினமே சபா 24

## நாட்டில் மேலும் 12 பேருக்கு கொரோனா

(கொழும்பு)
நாட்டில் மேலும் 12 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித் 23

## பாடசாலை மாணவர்களுக்கு கல்வி அமைச்சு முக்கிய அறிவிப்பு

(கொழும்பு)
எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 2 ஆம் திகதி தொடக்கம் தரம் 6 முதல் தரம் 13 வரையான மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகளுக்காக 24



### இலங்கையின் ஆதிக்குடிகள் யார்?

## விக்னேஸ்வரனை விவாதிக்க வருமாறு உதய கம்மன்பில பகிரங்க சவால்

(கொழும்பு)
இலங்கையில் பூர்வீகக் குடிகள் தமிழர்களே என்ற கருத்து தொடர்பாக விவாதிக்க வருமாறு சி.வி.விக்னேஸ்வரனுக்கு அமைச்சர் உதய கம்மன்பில பகிரங்க சவால் விடுத்துள்ளார்.
கொழும்பில் நேற்று செவ்வாய்க்கிழமை 23

## இடிபாட்டுக்குள் சிக்கிய கட்டடத் தொழிலாளி பலி

### சுன்னாகத்தில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)
வீடு திருத்த வேலையில் ஈடுபட்டிருந்த கூலித் தொழிலாளி ஒருவர், கூரை சீமெந்துத் தளம் சரிந்ததில் அதற்குள் சிக்குண்டு பரிதாபமாக 23

## கோண்டாவிலைச் சேர்ந்த குடும்பப் பெண் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)
தீக்காயத்துக்குள்ளான குடும்பப் பெண் ஒருவர் நேற்று யாழ்.போதனா வைத்தியசாலையில் உயிரி 24

### இலங்கையில் தலையிட

## இந்திய அரசாங்கத்துக்கு எந்த உரிமையும் இல்லை

### எச்சரிக்கின்றார் எல்லாவல தேரர்

(கொழும்பு)
இலங்கையின் உள்விவகாரங்களில் தலையிட இந்திய அரசாங்கத் 23

### உலக வங்கி நிதிப் பங்களிப்பில்

## 7013 மில்லியன் ரூபாய் செலவில் யாழ்.அபிவிருத்தி செய்யப்படுகின்றது

### அரச அதிபர் க.மகேசன்

(யாழ்ப்பாணம்)
உலக வங்கியின் நிதிப் பங்களிப்பில் 7013 மில்லியன் ரூபாய் செலவில் 23

## வரணியில் வாள்வெட்டு இளைஞன் படுகாயம்

(கொடிகாமம்)
வரணி இயற்றாலை பகுதியில் வாள் வெட்டு காயங்களுடன் மயங்கிய நிலையில் இருந்த இளைஞர் ஒருவர் பருத்தித்துறை மந்திகை ஆதார வைத்தியசாலையில் அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.
இந்தச் சம்பவம் நேற்று செவ்வாய்க் 24

## ராஜபக்ஷ குடும்பத்தைப் பாதுகாக்கவே புதிய அரசியலமைப்புத் திருத்தம்

### எதிர்க்கட்சியினர் குற்றச்சாட்டு

(கொழும்பு)
ராஜபக்ஷர்களின் குடும்பப் பலத்தை பாதுகாக்கவே புதிய அரசியலமைப்பு திருத்தத்தை அரசாங்கம் கொண்டுவர முயற்சிக்கின்றது என்று தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபூர் ரஹ்மான், 24

## எங்களுடைய வரலாற்றை தெரிவிப்பதனால்
# சிங்களவர்களுக்கு கொதிப்பு ஏற்படும் என்றால் எங்களை தனியாக விட்டு விடுங்கள்
## எம். கே. சிவாஜிலிங்கம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

எங்களுடைய வரலாற்றை, எங்களுடைய விருப்பங்களை நாம் தெரிவிப்பது சிங்கள தலைவர்களுக்கு கொதிப்பினை ஏற்படுத்துகிறது என்றால் எங்களை விட்டு விடுங்கள். நீங்கள் உங்களுடைய பாட்டில் செல்லுங்கள். நாங்கள் எங்களுடைய வழிகளைப் பார்த்துக் கொள்கின்றோம் என முன்னாள் வடக்கு மாகாணசபை உறுப்பினர் எம். கே . சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

வன்னி இராச்சியத்தின் கடைசி தமிழ் மன்னன் பண்டார வன்னியனின் 217 ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு யாழ். மணிக்கூட்டு கோபுர வீதியில் மலர்தூவி நினைவஞ்சலி செலுத்திவிட்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒன்பதாவது பாராளுமன்ற கன்னியமர்வின் போது புதிதாக தெரிவு செய்யப்பட்ட சபாநாயகரை வாழ்த்தி ஆற்றிய உரையில் உலகின் தொன்மையான மொழி தமிழ் மொழி என பாராளுமன்ற உறுப்பினர் நீதியரசர் சி.வி விக்னேஸ்வரன் தெரிவித்தார். இது சிங்கள பௌத்த இனவாதிகளை சீற்றங்கொள்ள வைத்துள்ளது. சிங்களவர்களுடைய வரலாற்றைக் கூறும் மகாவம்சமே பாளி மொழியில் தான் எழுதப்பட்டுள்ளது. தமிழ் மொழி மிகவும் தொன்மையான மொழி. உலகிலேயே செம்மொழிகளிலே தமிழ் மொழியும் ஒன்று என அங்கீகரிக் கப்பட்ட பின்னர், தமிழ் மொழி தொன்மை யான மொழி என்று பாராளுமன்றிலே கூறப்பட்டதை பாராளுமன்றப் பதிவேடான ஹன்சார்ட்டில் இருந்து நீக்கவேண்டும் என்பதை சபாநாயகர் பரிசீலனைக்கு உட்படுத்தியது ஜனநாயகத்திற்கு விரோதமான செயற்பாடாகும்.

பரிசீலனைகளின் பின்னர் எமக்கெதிராக முடிவு கிடைக்கப்பெறும் பட்சத்தில் சர்வதேச பாராளுமன்ற ஒன்றியத்திடமும், சர்வதேச சமூகத்திடமும் முறையிடுவோம்.

இப்பதிவை ஹன்சார்ட்டிலிருந்து நீங்குவதால் தமிழ் மொழி தொன்மையானது இல்லை என்றாகிவிடாது. பாராளுமன்றத்திலிருந்து பதவி நீக்கப்பட்டாலும் எந்த நெருக்கடி வந்தாலும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி இவ்விடயத்தில் உறுதியாக இருக்கும் என தெரிவித்தார். (ம-3.8)

## கூட்டமைப்பின் பதவிகளில் மாற்றமில்லை கட்சி அறிவிப்பு

(கொழும்பு)

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுத் தலைவர் (கொறடா), ஊடகப் பேச்சாளர் ஆகிய பதவிகளில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்று ஊடகங்களில் வெளியான செய்திகளில் எவ்வித உண்மையும் இல்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பிரிவு அதன் உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் முக்கிய இரு பதவிகள் அதன் பங்காளிக் கட்சிகளைச் சேர்ந்த இருவருக்கு வழங்கப் பட்டிருக்கின்றன என்று ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டிருந்தது.

அதன்படி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளராக தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தலைவரும், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் நியமிக்கப்பட்டுள்ளார் எனவும், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் (புளொட்) தலைவரும் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கொறடாவாக நியமிக்கப் பட்டுள்ளார் எனவும் அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டிருந் தது.

எனினும், குறித்த ஆங்கில ஊடகத்தால் வெளி யிடப்பட்ட செய்தி முற்றிலும் தவறா னது என்று தமி ழ்த் தேசியக் கூட்ட மைப்பின் ஊடகப் பிரிவு அதன் உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் விளக்கமளித்துள்ளது.

குறித்த ஆங்கில ஊடகத்தில் வெளியான செய்தியை மேற்கோள்காட்டி கூட்டமைப்பின் ஊடகப் பிரிவு அதன் உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளதாவது.

இந்தச் செய்தி முற்றிலும் தவறானதாகும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுக் கூட்டம் இடம்பெறும் போது பாராளுமன்றக் குழுவின் தலைவர் (கொறடா) மற்றும் ஊடகப் பேச்சாளர் ஆகிய பதவிகளுக்குரிய நியமனங்கள் தொடர்பில் தீர்மானம் மேற்கொள்ளப்படும். எனினும், தற்போது வரையில் இந்தப் பதவிகளில் எவ்வித மாற்றங்களும் ஏற்படுத்தப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளது. (ம-3)

பருத்தித்துறை நகரசபை

வீதிகளின் பெயர் மாற்ற அறிவித்தல்

பருத்தித்துறை நகரசபையின் பிரதேச எல்லைக்குட்பட்ட பின்வரும் வீதிகள் பொதுமக்களின் கோரிக்கையின் பிரகாரமும் சபை அனுமதியுடனும் பெயர் மாற்றம் செய்யப்பட உள்ளது. இது தொடர்பாக ஆட்சேபனை இருப்பின் 14 நாட்களுக்குள் எழுத்து மூலம் நகரசபைக்கு அறியத்தரவும்.

| இல | தற்போதுள்ள வீதியின் பெயர் | கிராமசேவை அலுவலர் பிரிவு | ஆரம்ப இடம் | முடிவு இடம் | பெயர் மாற்றப்படவுள்ள வீதியின் பெயர் |
|---|---|---|---|---|---|
| 01 | மெதடிஸ்ற் பாடசாலை மைதான வீதி | J/401 | கல்லூரி வீதி | ஆலடிப் பிள்ளையார் கோயில் | ஆலடிப் பிள்ளையார் வீதி |
| 02 | கலாமன்ற வீதி | J/407 | பருத்தித்துறை பிரதான வீதி | கலாமன்ற வீதி | பருத்தித்துறை பிரதான வீதியிலிருந்து அரசடி வீதி சந்தி வரை "வல்லிபுரப் பரியார் வீதி" மிகுதி வீதி "கலாமன்ற வீதி" |

தவிசாளர்

பருத்தித்துறை நகரசபை

(C-143)

கிடாய் விற்பனைக்கு

6 மாதம் நிரம்பிய
சணல் கோன் செவிக் கிடாய்
விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு
077 122 9019

(3687)

சகல வசதிகளுடன் கூடிய அறைகள் வாடகைக்கு

கொழும்பு, கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு அருகாமையில் சகலவசதிகளுடனும் கூடிய Airport Lounge A/C, Non A/C Room தங்குமிட வசதிகள் குறைந்த கட்டணத்தில் உண்டு.

நேரகாலத்துடன் உங்கள் விமானப் பயணங்களை உறுதிப்படுத்திக் கொள்ள இன்றே தொடர்பு கொண்டு முற்பதிவு செய்யுங்கள்.

(C-145)

தொ. இல.
011 225 4154, 077 379 2000

சேவைநலன் பாராட்டு விழா

திருமதி நடனராணி செல்வராசா




முப்பத்து மூன்று ஆண்டுகள்
முத்தான ஆசிரியப் பணி
ஆசிரியர்களுக்கு ஆசிரியராய்
நனி சிறந்த வழிகாட்டியாய்
உன்னதப் பணியாற்றிய உத்தமியே
தாய்த்தமிழாய் தரணி போற்ற வாழ
வாழ்த்த வயதில்லை வணங்கி மகிழ்கிறோம்.

சேவைக்காலம்

1987.12.14 - 1991 மு/குமுழமுனை மகா வித்தியாலயம்
1991 - 2006 - மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி
2006 - 2008 - மு/ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயம்
2009- 2012 காமினி மகா வித்தியாலயம்
2013 - இன்றுவரை - மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி



வாழ்த்துவோர் :
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி.

(C-142)

பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது பாடசாலையில்
01.01.2014 இலிருந்து 26.04.2020 வரை
சித்திர பாட ஆசிரியையாக கடமையாற்றிய

திருமதி செல்வராணி கருணைதாஸ்



Congrats!

அவர்களுடைய அளப்பரிய சேவையினைப்
பாராட்டி வாழ்த்துகின்றோம்.

ஓவியங்கள் வரைந்தவர் நீங்கள் - மாணவ
ஓவியங்கள் மனங்களில் நிறைந்தவர் நீங்கள்
கோலமாய் எம் கல்லூரியில் உலாவந்தீர்கள்
உங்கள் ஓய்வுக்காலம் சிறப்புற வாழ்த்துகின்றோம்.

யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்,
பாடசாலைச் சமூகம்.

(3690)

# இனப்பிரச்சினைக்குத் தீர்வாக 13 ஆவது திருத்தம்; இலகுவில் அதனை இரத்துச் செய்ய முடியாது

## அமைச்சர் வாசு

(கொழும்பு)

**அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தை இலகுவில் இரத்துச் செய்ய முடியாது. இனப்பிரச்சினைகளுக்கு தீர்வாகவே இத்திருத்தம் கொண்டு வரப்பட்டது. மாகாண சபை தேர்தல் உரிய காலத்தில் இடம்பெற்றிருந்தால் தற்போது மாறுபட்ட கருத்துக்கள் தோற்றம் பெற்றிருக்காது. மாகாண சபைத் தேர்தல் காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ளமைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பொறுப்புக் கூற வேண்டும் என நீர்வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தம் இரத்துச் செய்யப்படுவதுடன் 13 ஆவது திருத்தமும் இரத்துச் செய்யப்பட வேண்டும் என அரசாங்க தரப்பில் குறிப்பிடப்படுகிறது. 13 ஆவது திருத்தத்தின் நோக்கம் மாகாண சபைத் தேர்தலில் தங்கியுள்ளது.

மாகாண சபைகள் இல்லாமல் மாகாணங்களின் நிர்வாகம் ஜனாதிபதியின் பிரதிநிதியான ஆளுநர்களினால் முன்னெடுக்கப்படுவதால் மாகாண சபை முறைமையை முழுமையாக இல்லாதொழிக்க வேண்டும் எனக் குறிப்பிடப்படுகிறது.



அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தத்தை இலகுவில் இரத்துச் செய்யலாம். ஆனால் 13 ஆவது திருத்தத்தை இலகுவில் இரத்துச் செய்ய முடியாது. இனப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் முகமாகவே அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தம் இந்தியாவின் தலையீட்டினால் உருவாக்கிக் கொள்ளப்பட்டது. நட்பு மற்றும் நேச நாடாக இந்தியா காணப்படுகிறது. ஆகவே இவ்விடயத்தை இந்தியா கூர்ந்து கவனிக்கும்.

மாகாண சபைத் தேர்தல் உரிய காலத்தில் இடம்பெற்றிருந்தால், அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தம் குறித்து மாறுபட்ட கருத்துக்கள் தற்போது எழுந்திருக்காது. நல்லாட்சி அரசாங்கம் உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் தோல்வியடைந்ததை போன்று உரிய காலத்தில் இடம்பெறவிருந்த மாகாண சபைத் தேர்தலைப் பிற்போட்டது.

இதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முழு ஆதரவு வழங்கியமை குறிப்பிடத்தக்கது.(2-7)

# காணாமல் போனவர்களில் புலிகள் இருந்தால் தேடவேண்டிய அவசியம் அரசிற்கு இல்லை

## இழப்பீடு வழங்குவது குறித்தும் சிந்திக்க வேண்டியுள்ளது

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்தவர்கள் காணாமல் போயிருந்தால் அவர்களைத் தேட வேண்டிய அவசியம் அரசுக்கு இல்லை என அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

இராணுவத்தில் 4 ஆயிரம் பேர் காணாமற் போயுள்ளனர் என்றும் இராணுவத்தில் காணாமல்போனோர் என்பது ஏற்புடைய ஒன்று என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இருப்பினும் மனிதாபிமான ரீதியில் காணாமல்போன விடுதலைப் புலி உறுப்பினர்களின் குடும்பங்களுக்கு இழப்பீடு வழங்குவது குறித்து எதிர்காலத்தில் சிந்திப்பதாகவும் ஆனால், அது அவர்களது உரிமை ஆகாது என்றும் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல சுட்டிக்காட்டியுள்ளார்.

காணாமற்போனோர் குறித்து தேட அரசாங்கம் தயாராக இருந்தாலும் அவர்கள் பயங்கரவாதத்துடன் தொடர்புபட்டவர்களாக இருப்பின் அவர்களுக்கான இழப்பீடு தொடர்பில் இரண்டு தடவைகள் சிந்திக்க வேண்டி ஏற்படும் என்றும் குறிப்பிட்டார்.

சாதாரண மக்களாக இருப்பின் இழப்பீடு வழங்கலாம் என்றும் அதுபோல் காணாமல் போன இராணுவத்தினர்களுக்காகவும் இழப்பீடு வழங்கப்படும் என்றும் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

காணாமல்போனதாகக் கூறப்படுவோர் இறந்திருக்கலாம்.

இருப்பினும் அதனை உறுதியாகக் கூற முன்னர் கணக்கெடுப்பு ஒன்றை மேற்கொள்ள வேண்டும். குறிப்பாக காணாமல்போனோர் எனக் கூறப்படுவோரில் சிலர் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர் என்றும் அது தொடர்பாக பரந்துபட்ட விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். (2-7)



# இராஜாங்க அமைச்சுக்களுக்கான செயலாளர்கள் நியமனம்

(கொழும்பு)

35 இராஜாங்க அமைச்சுக்களுக்கான புதிய செயலாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 19 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தின் போது குறித்த நியமனங்களுக்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் குறித்த நியமனங்களுக்கான வர்த்தமானி அறிவித்தல் நேற்று முன்தினம் திங்கட்கிழமை வெளியிடப்பட்டுள்ளது.

குறித்த வர்த்தமானிக்கு அமைய நிதி மற்றும் மூலதன சந்தை மற்றும் அரச தொழில் முயற்சி மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சின் செயலாளராக ஆர்.எம் ரத்னாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

அதேநேரம், சமுர்த்தி வதிவிட பொருளாதார, நுண்நிதிய, சுயதொழில் வியாபார அபிவிருத்தி மற்றும் கீழுழைப்பு பயன்பாட்டு அரசாங்க வளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் செயலாளராக டபிள்யூ. எம்.என்.பி. ஹபுஹின்ன நியமிக்கப்பட்டுள்ளார்.

தேசிய மரபுரிமைகள், அருங்கலைகள் மற்றும் கிராமிய சிற்பக்கலைகள் மேம்பாடு இராஜாங்க அமைச்சின் செயலாளராக எச்.டி.கொடிகார, கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணத் துறை மற்றும் கட்டடப்பொருள் கைத்தொழில் இராஜாங்க அமைச்சின் செயலாளராக ரஞ்சித் அபேசிறி ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அதேநேரம், தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சின் செயலாளராக டி.பி.ஜி.குமாரசிறி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ்வு இராஜாங்க அமைச்சின் செயலாளராக பி.சி.கருணாரத்ன ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். (2-7)

# கிழக்கு மாகாண தொல்பொருள் செயலணி

## தேரர்கள் நால்வர் நியமனம்



(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை முறையாக மதிப்பீடு செய்து பாதுகாப்பதற்கு அமைக்கப்பட்ட ஜனாதிபதி செயலணிக்கு மல்வத்து, அஸ்கிரிய பீடங்களைச் சேர்ந்த தேரர்கள் நால்வரை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நியமித்துள்ளார்.

அரசியலமைப்பின் 33 ஆவது பிரிவின் மூலம் தனக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி பௌத்த ஆலோசனை சபையின் ஆலோசனைக்கு அமைய இந்தச் செயலணி கடந்த ஜூன் மாதம் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டது.

இந்தச் செயலணிக்கு அஸ்கிரி பீடத்தின் வெண்டறுவே தர்மகீர்த்தி ஸ்ரீ ரதனபால உபாலி அபிதான அனுநாயக்க தேரர், மல்வத்து பீடத்தின் பதிவாளர் கலாநிதி பஹமுணே சுமங்கல நாயக்க தேரர், அஸ்கிரி பீடத்தின் பதிவாளர் கலாநிதி மெதகம தம்மானந்த நாயக்க தேரர், மல்வத்து பீடத்தின் நிர்வாக சபை உறுப்பினர் கலைமாணி அம்பன்வெல்லே ஸ்ரீ சுமங்கல தேரர் ஆகிய நான்கு பேரும் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளதாக அதி விசேட வர்த்தமானி ஊடாக அறிவிக்கப்பட்டுள்ளது. (2-7)

# விவசாயத் திணைக்கள வெற்றிடங்களை நிரப்ப உடன் நடவடிக்கை எடுங்கள்

## ஜனாதிபதி கோட்டாபய பணிப்பு



(கொழும்பு)

**விவசாய உற்பத்திகளை அதிகரிப்பதன் மூலம் வலுவான பொருளாதாரத்தை கட்டியெழுப்ப வேண்டும் என்பது கொவிட் -19 நோய்த்தொற்று காலத்தில் அவசியமானது என்பதால் விவசாயத் திணைக்களத்தில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆலோசனை வழங்கியுள்ளார்.**

நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் நெல் மற்றும் உப உணவுப் பொருட்களை தானியங்களின், மரக்கறிகளின் பழங்கள், வெங்காயம், மிளகாய் மற்றும் இயற்கை உரப்பயன்பாடுகள் அதிகரிப்பதன் தேவை குறித்தும் எதிர்காலத்தில் விவசாய உற்பத்தியில் பயன்படுத்த வேண்டிய உயர் தொழில்நுட்பங்கள் குறித்தும் விரிவாக கலந்துரையாடினார்.

மேலும் உருளைக்கிழங்கு உற்பத்தியை ஊக்குவிப்பதன் மூலம் நாட்டின் தற்போதைய உற்பத்தி அளவான 80 ஆயிரம் மெற்றிக்தொன் இலிருந்து நாட்டிற்கு தேவையான இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் மெற்றிக் தொன் உற்பத்தியை அடைய முடியும்.

அதற்கான முதல் நடவடிக்கையாக விவசாயத் திணைக்களத்தின் வெற்றிடங்களை நிரப்புமாறு பணிப்புரை விடுத்தார்.

கடந்த எட்டு வருடங்களாக விவசாயத் திணைக்களத்தில் எவ்வித ஆட்சேர்ப்பும் செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-10)

---

# விக்னேஸ்வரனின் கருத்தை எதிர்ப்பவர்கள் சரியான வரலாறு தெரியாதவர்களே

## தென்னிலங்கை அரசியல்வாதிகளுக்கு சுரேஷ் சாட்டையடி



(கொழும்பு)

ஒன்பதாவது பாராளுமன்றத்தில் சபாநாயகரை வாழ்த்திப் பேசுகையில் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான முன்னாள் நீதியரசர் சி. வி. விக்னேஸ்வரனின் உரையை ஹன்சாட்டிலிருந்து நீக்க வேண்டும் என்று கூறுபவர்கள் உண்மையான வரலாற்றை நாட்டு மக்களுக்குச் சொல்லத் தயாரா எனத் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் இணைப்பேச்சாளரும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவருமான சுரேஷ். கே. பிறேமச்சந்திரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவ் அறிக்கையில்,

புதிய பாராளுமன்றத்தில் முன்னாள் நீதியரசர் விக்னேஸ்வரன் முதன் முதலாக ஆற்றிய கன்னி உரை பாராளுமன்றத்திலும் தென்பகுதியிலும் பலத்த சலசலப்புக்களை ஏற்படுத்தி இருக்கின்றது. தமிழ் மிகவும் தொன்மையானமொழி என்றும் இலங்கையில் மூத்த குடிமக்களாக தமிழர்களே இருந்தார்கள் என்றும் அவ்வாறான மக்களுக்கு இறையாண்மை இருப்பதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரன் பேசிய கருத்தினைச் சிங்கள பாராளுமன்ற உறுப்பினர்களால் ஜீரணித்துக் கொள்ளமுடியவில்லை.

இதன் காரணமாக ஐக்கிய மக்கள் சக்தியைச் சார்ந்த பாராளுமன்ற உறுப்பினர் மனிஷா நாணயக்கார விக்னேஸ்வரனின் உரை சிங்கள மக்களுக்கு எதிரானது என்ற தொனியில் அதனை விமர்சித்ததுடன் அவரது உரை ஹன்சாட்டில் இருந்து நீக்கப்படவேண்டும் என்றும் கூறியுள்ளார்.

இலங்கையினுடைய வரலாறு என்று கூறப்படும் மகாவம்சத்தில் விஜயன் இந்தியாவில் இருந்து தனது 700 நண்பர்களுடன் இலங்கைக்கு வந்ததாகக் கூறப்படுகின்றது. இவ்வாறு அவன் இலங்கைக்கு வந்து குவேனிஎன்ற பெண்ணை மணந்ததாகவும் கூறப்படுகின்றது. விஜயன் இலங்கைக்கு வந்தபொழுது இலங்கையில் திருக்கோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம், முன்னேஸ்வரம், நகுலேஸ்வரம், தொண்டீஸ்வரம் ஆகிய ஐந்து ஈஸ்வரங்கள் இலங்கையைச் சுற்றிலும் இருந்ததாகவும் இங்கிருந்தோர் சிவனை வழிபட்டு வந்ததாகவும் அவர்கள் பேசியது தொன்மையான தமிழ்மொழி எனவும் சிங்கள, தமிழ் மற்றும் சர்வதேச வரலாற்று ஆய்வாளர்கள் கூறியிருக்கின்றார்கள்.

இதனைத்தான் பாராளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரன் தனது கன்னி உரையில் குறிப்பிட்டு அவ்வாறான தொன்மையான ஓர் மக்கள் இனத்துக்கு நீதி கிடைக்கவேண்டும் என்பதை வலியுறுத்தி இருந்தார். இது எந்தவிதத்தில் ஒரு இனவாதக் கருத்தாக அமையும் என்பதைக் கற்றறிந்த சிங்கள மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

பாராளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரனின் கருத்துக்களைப் பாரிய இனவாத கருத்துக்களாகவும் இவை அடக்கப்படவேண்டும் எனவும் இந்தக் கருத்துக்கள் தமிழீழக் கோரிக்கைக்கு ஒப்பானது என்றும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ உட்பட பாராளுமன்ற உறுப்பினர்கள் பேசுவதானது அவர்களின் உள்நோக்கத்தையே வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றது.

விக்னேஸ்வரன் கூறிய கருத்துக்கள் தவறான கருத்துக்கள் என்று கருதினால் அதில் எந்த விதமான உண்மையும்இல்லை அவை பாரதூரமான கருத்துக்கள் என்று கருதினால் அதை எதிர்க்கும் பாராளுமன்ற உறுப்பினர்கள் உண்மையான கருத்துக்களைக் கூறி தங்கள் கருத்து சரி என வாதிட வேண்டுமே தவிர அவை எதனையும் கூறாமல் அதனை பாராளுமன்ற குறிப்பேட்டில் இருந்து எடுக்கும்படி வற்புறுத்துவதானது அவர்களது இயலாத் தன்மையை வெளிப்படுத்துகிறது.

விக்னேஸ்வரனின் கருத்துக்களைச் சவாலுக்கு உட்படுத்துவதற்கோ அல்லது அது பொய்யானது என்றோ நிரூபிக்க முடியாத சூழ்நிலையில் சபாநாயகரைப் பயன்படுத்தி அவரது கருத்தை ஹன்சாட்டில் இருந்து அகற்ற முற்சிப்பது சரியான செயற்பாடாகத்தோன்றவில்லை.

நாட்டின் உண்மையான வரலாற்றை மறைத்து, இந்த நாடு சிங்கள மக்களுக்கு மட்டுமே உரித்தானது என்று நிறுவ முற்படுவதுதான் இனப்பிரச்சினைக்கான ஆணிவேராக அமைகிறது.

இதனைப் புரிந்துகொண்டு இனியாவது உண்மையான வரலாற்றை மக்களிடம் எடுத்துச்சென்று இதுவரை காலமும் தமிழ்மக்கள்மீது கட்டவிழ்த்துவிடப்படுகின்ற அரச வன்முறைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து அனைவரும் அவரவர் உரிமைகளுடன் வாழ வழிவகுக்க வேண்டும் என அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

## இராசிபலன்

26.08.2020
ஆவணி 10, புதன்கிழமை
அட்டமி பிற்பகல் 3.03 மணிவரை
அனுசம் மாலை 5.51 மணிவரை
சுபநேரம் 4.35 - 6.05 மணிவரை
இராகுகாலம் 12.05 - 1.35 மணிவரை
சந்திராஷ்டமம்:- அச்சுவினி, பரணி
அட்டமி - நவமி

வளவன்


மேஷம்

வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், மனதில் இனம் புரியாத கவலைகள் தோன்றி மறையும், வீண் விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது, ஆரோக்கியத்தில் கவனம் தேவை.


ரிஷபம்

நம்பி வந்தவர்களுக்கு கைகொடுத்து உதவுவீர்கள், கடன் தொல்லைகள் குறையும், உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், புதிய பொருட் சேர்க்கையுண்டு.


மிதுனம்

வியாபார விருத்தியுண்டு, அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.


கடகம்

தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், உறவினர் பகை அகலும், உள்ளன்போடு பழகியவர்களின் எண்ணிக்கை கூடும் நாள்.


சிம்மம்

வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம், பெரிய மனிதர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம்.


கன்னி

உயர்வான சிந்தனைகள் மனதில் குடிகொள்ளும் நாள், தொழில் போட்டிகளை முறியடித்து வெற்றி காண்பீர்கள், செல்வ நிலை உயரும் நாள், தன்னம்பிக்கை அதிகரிக்கும் நாள்.


துலாம்

புத்திசாதுரியமான செயற்பாடுகளால் புகழ்கூடும் நாள், தேவைகள் பூர்த்தியாகும் நாள், சேமிப்பு உயரும் நாள், புதிய பொறுப்புக்களும் பதவிகளும் வந்து சேரலாம்.


விருச்சிகம்

வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள்.


தனுசு

வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும், இடமாற்றத்தால் இனிய மாற்றம் காண வேண்டிய நாள், தேக நலனில் கவனம் செலுத்துவது நல்லது, சுபவிரயங்கள் கூடும் நாள்.


மகரம்

வாழ்க்கைத்தரம் உயர வழிவகை செய்வீர்கள், வியக்கும் செய்திகள் வந்து சேரலாம், இறைவழிபாட்டு சிந்தனை மேலோங்கும் நாள், குடும்ப மகிழ்ச்சி கூடும்.


கும்பம்

அன்பு நண்பர்கள் ஆதரவு தர முன்வருவர், வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு.


மீனம்

திறமை மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், குடும்பத்தில் நிலவிய குழப்பங்கள் அகலும்.

உன்னையே நீ ஆளாதவரை, இந்த உலகை நீ ஆளப்போவதில்லை.

# கோர விபத்து;இருவர் உயிரிழப்பு

(கொழும்பு)



தனமல்வில - வெல்லவாய வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இளைஞர்கள் இருவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.

நேற்று கப் ரக வாகனம் ஒன்று மோட்டார் சைக்கிள் ஒன்றுடன் மோதியதில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இவ்விபத்தில் படுகாயமடைந்த மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரும் தனமல்வில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளனர்.

களுதியகம, செவனகல பகுதியைச் சேர்ந்த 19 வயதுடைய சமல் சதுரங்க மற்றும் யாயகம, செவனகல பகுதியைச் சேர்ந்த கசுன் ஶ்ரீமால் எனும் 17 வயதுடைய நண்பர்கள் இருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் தனமல்வில பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஜ-4)


## முதலாம் ஆண்டு நினைவலைகள்



### அமரர். திருமதி.ஈஸ்வரி பஞ்சாட்சரம்

(ஓய்வுபெற்ற ஆசிரியர். உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலை)

தோற்றம்:- 27.12.1936 மறைவு:- 07.09.2019

அன்புக்கோர் உறைவிடமாய்
பொறுமைக்கோர் அணிகலனாய்
தாய்மைக்கோர் எடுத்துக்காட்டாய்
ஊருக்கோர் வழிகாட்டியாய்
திகழ்ந்த எம் அன்புத்தாயே
நீங்கள் எமைவிட்டுப் பிரிந்து
இன்றுடன் ஆண்டொன்றாகிறது
பல்லாண்டு சென்றாலும் உங்கள்
நினைவு மாறாதம்மா

உங்கள் நினைவுகளுடன்
ம.வாசுகி (மகள்) அதிபர்,
யா/உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலை.


உரும்பிராய் மேற்கு,
உரும்பிராய்.

(9682)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர்.ஆறுமுகம் இராமச்சந்திரன்

திதி:- 26.08.2020



நேசத்துடனும் அன்பு பாசத்துடனும்
எம்மையெல்லாம் வளர்த்து ஆளாக்கி
நேர் வழியில் வாழ வைத்த
எம் குடும்பத்தின் குல விளக்கே
ஆண்டு ஒன்று ஆகிவிட்டது
ஆனாலும் எம் உள்ளத்தில்
உம் நினைவுகளை என்றும்
சுமந்திருப்போம்
நீர் தந்த நேர்வழிப்பாதையில்
என்றும் பயணிப்போம்.

தவப்பேறு:- 26.03.1953
சிவப்பேறு:- 06.09.2019

(3675)

"மாதுமை"
மருதனார்மடம்.

குடும்பத்தினர்.

# உற்பத்திக்கு செலவு செய்யும் பணத்தை விளைச்சலில் பெற முடியவில்லை

## உரிய சந்தை வாய்ப்பும் இல்லை என்கிறார் செல்வரத்தினம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் விவசாயிகளினால் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கு உரிய சந்தை வாய்ப்பு கிடைப்பதில்லை என யாழ்.மாவட்ட கமக்கார அமைப்பு அதிகார சபையின் செயலாளர் எஸ்.செல்வரத்தினம் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

எஸ் . செல் வரத் தினம் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாண மாவட்டத்தில் விவசாயிகளினால் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கு உரிய சந்தை வாய்ப்பு கிடைப்பதில்லை. அதேபோல உற்பத்திக்கு செலவு செய்யும் பணத்தை அவர்கள் விளைச்சலின் போது பெற்றுக்கொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது.

இந்த விடயத்தினை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கருத்தில் எடுக்க வேண்டும்.அதேபோல் விவசாயம் என்பது பயிர்ச் செய்கை மற்றும் கால்நடை வளர்ப்பு இவை அனைத்தும் ஒன்று.

கால்நடைகளை பொறுத்த வரைக்கும் கால்நடைகளுக்குரிய தீவனங்கள் பெறுவதில் சில இடர்பாடுகள் காணப்படுகின்றன. அதனை விவசாயிகள் தமது இடங்களில் பெற்றுக் கொள்வதற்குரிய ஏற்பாடுகளை சம்பந்தப்பட்ட தரப்பினர் மேற்கொள்ள வேண்டும். அதே



போல் தீவனங்களை தவிர்த்து புல் வளர்ப்பு போன்ற செயற்றிட்டங்களை கருத்தில் எடுப்பது மிகவும் சிறந்தது.


கோழி வளர்ப்புக்குரிய கோழிக்குஞ்சுகள் பெற்றுக் கொள்வதிலும் கால் நடைகளுக்கான மருந்துகளைப் பெற்றுக் கொள்வதிலும் விவசாயிகள் பெரும் சிரமத்தை எதிர் நோக்குகின்றார்கள். இந்த விடயம் தொடர்பில் விவசாய அமைச்சு மற்றும் சுகாதார அமைச்சு இணைந்து உரிய நடவடிக்கை எடுப்பார்களேயானால் விவசாயிகள் கால்நடை வளர்ப்பினை சிறப்பாக மேற்கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (5-4-33)

## மீண்டும் ஆரம்பம்

(சாவகச்சேரி)

நாட்டில் ஏற்பட்ட கொரோனா அச்ச சூழலால் தடைப்பட்டிருந்த சபை நிகழ்வுகளை மீண்டும் நடத்த சாவகச்சேரி பிரதேச சபை தீர்மானித்துள்ளது.

அந்த வகையில் கலாசார விழா, தேசிய வாசிப்பு மாத நிகழ்வு மற்றும் உள்ளூராட்சி வார விழா ஆகிய நிகழ்வுகளை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் நடத்த சபையில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (5-4-30)



தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தான மஹோற்சவத்தில் தங்கரத பவனி நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை இடம்பெற்றது. (படம்:- குப்பிழான் செய்தியாளர்)

## நினைவுப் பேருரை

(யாழ்ப்பாணம்)

இலங்கை பாராளுமன்றத்தில்-முத லாவது தமிழ் எதிர்க் கட்சித் தலைவர் அமரர். அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் 93 ஆவது பிறந்த தின விழா இன்று 26 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 4 மணியளவில் சுழிபுரம், பண்ணாகம் கிராம அபிவிருத்தித் சங்க மண்டபத்தில் கிராம அபிவிருத் திச் சங்கத் தலைவர் அ.கிருஷ்ண.மூர்த்தி தலைமையில் நடைபெறும்.

இதில் நினைவுப் பேருரையை ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி இ.த.விக்னராஜா வழங்குவார். (5)

# யாழ். மாநகர சபைக்குட்பட்ட வீதிகளில் சி.சி.ரி.வி. கமராக்கள்

## மாநகர முதல்வர் ஆனோல்ட்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபை, நல்லூர் பிரதேசசபை மற்றும் கோப்பாய் பிரதேச சபைகளில் காணப்படும் வீதிப் போக்கு வரத்து நடைமுறையில் உள்ள வீதிச் சமிக்ஞை உள்ள சந்திகளில் முதற்கட்டமாக 14 சி.சி.ரி.வி கமெராக்களை பொருத்துவதற்கான நடவடிக்கை முன்னெடுக்கவுள்ளதாக யாழ். மாநகர முதல்வர் இமானுவேல் ஆனோல்ட் தெரிவித்தார்.

யாழ். மாநகர சபையின் மாதாந்த அமர்வு யாழ். மாநகர சபையின் முதல்வர் இமானுவேல் ஆனோல்ட் தலைமையில் நேற்று இடம் பெற்றது.

இந்த அமர்வில் வீதிப் போக்குவரத்து விபத்துக்ககளை குறைப்பதற்கா ன நடவடிக்கை தொடர்பாக கலந்துரையாடப்பட்ட போதே மாநகர முதல்வர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அண்மைக்காலமாக யாழ். குடாநாட்டில் முக்கியமான சந்திகளில் வீதி விபத்துக்கள் இடம் பெறுகின்றன. இவ்விடயம் சம்பந்தமாக வீதிப் போக்குவரத்து பொலிஸாரின் பணிப்பின் பெயரில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

இத் திட்டத்தை யாழ். மாநகர சபைக்குட்பட்ட வீதிகளில் நடைமுறைப்படுத்துவதற்கு மாநகரசபை உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் சபையில் ஏகமனமாக நிறைவேற்றப்பட்டது. (5-4-8)



கொழும்பு மற்றும் யாழ்ப்பாண Round table அமைப்புக்களுடன் யாழ்ப்பாண றோட்டறிக் கழகமும் இணைந்து வேலணை சாட்டி கடற்கரையில் துப்புரவு செய்யும் பணியை அண்மையில் மேற்கொண்டன. (படம்-குப்பிழான் செய்தியாளர்)

## பயன்பாடின்றி காணப்படும் சேதனப் பசளை தயாரிப்பு தொழிற்சாலை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபையின் தனங்கிளப்பு வீதியில் அமைந்துள்ள சேதனப் பசளை தயாரிக்கும் தொழிற்சாலை எந்தப் பயன்பாடும் பராமரிப்பும் இன்றிக் காணப்படுவதாக சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் க.கஜிதன் சுட்டிக்காட்டியுள்ளார்.

அண்மையில் சாவகச்சேரி நகரசபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

சேதனப் பசளை தயாரிக்கும் தொழிற்சாலையின் கட்டுமானப் பணிகள் நிறைவடைந்து கட்டடம் திறக்கப்பட்டு பல வருடமாகியும் இதுவரை எந்த விதப் பயன்பாடுமின்றி காணப்படுகிறது.

முதலீடு செய்து கட்டடம் அமைத்ததில் எந்தப் பயனும் இல்லை. இதுவரை ஒரு ரூபாய் வருமானத்தைக் கூட ஈட்டிக் கொடுக்க முடியாத நிலையில் குறித்த தொழிற்சாலை காணப்படுகிறது.

உரிய இயந்திர வசதிகள் இருந்தும் அதனை நடைமுறைப் படுத்தத் தெரியவில்லை என மேலும் அவர் தெரிவித்திருந்தார். (5-4-30)

# கிராம மட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்துபவர்களே மக்களுக்குத் தேவை - பிரதமர் மகிந்த



(கொழும்பு)

கிராம மட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்களே மக்களுக்கு தேவையாகவுள்ளதால் பதவி நிலைகளை கருத்திற் கொள்ளாது மக்களுக்காக செயலாற்றுமாறு பிரதமர் மகிந்த ராஜபக்ஷ அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களிடமும் கோரியுள்ளார்.

புதிய பாராளுமன்ற உறுப்பினர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இரண்டு நாள் செயலமர்வின் ஆரம்ப நிகழ்வில் நேற்று கலந்து கொண்டு உரையாற்றிய போதே பிரதமர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சரவை அமைச்சராக இருந்தாலும் இராஜாங்க அமைச்சராக இருந்தாலும் மக்களின் நன்மைக்காகவே பணியாற்ற வேண்டும் என பிரதமர் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார்.

சட்டம், சம்பிரதாயங்கள் மற்றும் குழு நடவடிக்கைகள் இடம்பெறும் விதம் தொடர்பில் இதன்போது பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தெளிவுபடுத்தப்படுகிறது.

சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் இடம்பெறும் இந்த செயலமர்வில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, பாராளுமன்ற பொதுச் செயலாளர் தம்மிக்க தசநாயக்க மற்றும் பிரதி பொதுச் செயலாளர் உள்ளிட்ட பல அதிகாரிகள் கலந்து கொண்டுள்ளனர். (ஜ-6)

## வாள்வெட்டில் மாணவன் பலி இதுவரை ஐந்து பேர் கைது

(ஏறாவூர்)

மட்டக்களப்பு ஏறாவூர் கொம்பாந்துறை பகுதியில் 14 வயதுடைய சிறுவன் வெட்டிக்கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் இதுவரையில் 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது, பாடசாலை ஒன்றில் தாம் தாக்கப்பட்டமைக்கு நியாயம் கோரி தமது உறவினருடன் குறித்த 14 வயதுடைய சிறுவன் தாக்கப்பட்டவர்களை சந்திக்க சென்றிருந்த வேளை அவர்களால் வெட்டிக்கொல்லப்பட்டதுடன் அச்சிறுவனுடன் சென்ற உறவினர்களும் தாக்கப்பட்டு காயமடைந்தனர்.

இதனையடுத்து இச்சம்பவம் தொடர்பில் ஏறாவூர் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வரும் நிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை 2 பேரும் நேற்று முன்தினம் 3 பேரும் கைது செய்யப்பட்டுள்ளதுடன் கொலைக்குப் பயன்படுத்திய வாளும் மீட்கப்பட்டது.

கைது செய்யப்பட்டவர்கள் 19 முதல் 23 வயதுக்கு இடைப்பட்டவர்களென பொலிஸார் தெரிவித்தனர். (ஜ-6)

## குணமடைந்தோர் 2816

(கொழும்பு)

நாட்டில் கொரோனா தொற்றில் இருந்து மீண்டவர்களின் மொத்த எண்ணிக்கை 2 ஆயிரத்து 816 ஆக அதிகரித்துள்ளது.

நேற்று முன்தினம் மேலும் 5 பேர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

நாட்டில் இதுவரை 2 ஆயிரத்து 959 பேர் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியுள்ள நிலையில் அதில் 143 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதேவேளை 58 பேர் தற்போது சந்தேகத்தின் அடிப்படையில் தொடர்ந்தும் வைத்திய கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ள நிலையில் 12 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

## நிதி இராஜாங்க அமைச்சருடன் சீன பதில் தூதுவர் சந்திப்பு



(கொழும்பு)

இலங்கைக்கான சீனத் தூதரகத்தின் பதில் தூதுவர் ஹூவை லேட் , நிதி இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ராலை சந்தித்து கலந்துரையாடியுள்ளார். இச்சந்திப்பு மரியாதை நிமித்தமான சந்திப்பாக அமைந்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. குறித்த சந்திப்பு நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

## வனப்பகுதியில் திடீர் தீ



(கொழும்பு)

போகஹகும்புர - ரஹங்கல வனப் பகுதியில் திடீர் தீப்பரவல் ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இந்த தீப்பரவல் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு 7 மணியளவில் ஏற்பட்டுள்ளது.

சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார், வனப்பாதுகாப்பு அதிகாரிகள், வனஜீவராசிகள் திணைக்களத்தினர் மற்றும் பிரதேசவாசிகள் இணைந்து குறித்த தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர். தீப்பரவலால் உயிர்ச் சேதங்கள் எதுவும் ஏற்படவில்லையென பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது. இச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஜ-4)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 19 ¼ செவ் 9 இல்<br>உயரம்: 5’6”<br>தகைமை/தொழில்: Accountant (London PR)<br>எதிர்பார்ப்பு: தகுந்த பெண்<br>தொ.இ: B/7593 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: பூராடம் 1<br>கி.பா: செவ் 10 இல்<br>தகைமை/தொழில்: B.Sc உதவித் திட்டமிடல் பணிப்பாளர்.<br>எதிர்பார்ப்பு: SLAS போன்ற உயர் கல்வித் தகைமை. வைத்தியர், பொறியியலாளர் போன்ற உத்தியோகத்தர்.<br>தொ.இ: G/11101 |
| பிறப்பு: 1988 இந்து (சைவபோசனம்)<br>நட்சத்திரம்: சித்திரை 2<br>கி.பா: 72 ½ செவ் 1 இல்<br>உயரம்: 165cm<br>தகைமை/தொழில்: பட்டதாரி. ஆசிரியர்.<br>எதிர்பார்ப்பு: அரச, தனியார் வங்கி உத்தியோகத்தர். சைவபோசனம் அதிகளவில் விரும்பத்தக்கது.<br>தொ.இ: B/11105 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: சூரி,செவ் 10 இல்<br>உயரம்: 165cm<br>தகைமை/தொழில்: Diploma in Engineering. Senior Construction Manager.<br>எதிர்பார்ப்பு: தகுந்த உத்தியோகம் பார்க்கும் மணமகன்<br>தொ.இ: G/11102 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: பூரம் 3<br>கி.பா: செவ் 7 இல்<br>உயரம்: 5’6”<br>தகைமை/தொழில்: B.Sc, M.SC, Private Work in London<br>எதிர்பார்ப்பு: பட்டதாரிப் பெண். 1989 ஆம் ஆண்டிற்குப் பின்னர் பிறந்த பெண்<br>தொ.இ: B/11107 | பிறப்பு: 1997 இந்து<br>நட்சத்திரம்: மகம் 1<br>கி.பா: செவ் 6 இல்<br>உயரம்: 157cm<br>தகைமை/தொழில்: Following HNDA & B.Com (External)<br>எதிர்பார்ப்பு: கணக்குத்துறை சார்ந்த, ஆசிரியர் போன்ற அரச உத்தியோகத்தர்.<br>தொ.இ: G/11103 |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம் 4<br>கி.பா: 34 ½ செவ் 9 இல்<br>உயரம்: 173cm<br>தகைமை/தொழில்: HNDA in Agriculture. விவசாயப் போதனாசிரியர்.<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/11108 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 66 ¼ சூரி,செவ் 8 இல்<br>உயரம்: 5’7”<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ.த. அரச வங்கி உத்தியோகத்தர்.<br>எதிர்பார்ப்பு: தனியார் வங்கி, அரச உத்தியோகத்தர்.<br>தொ.இ: G/11104 |


கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# சந்தையில் 38 வியாபார நிலையங்களுக்கு சீல் எதிர்ப்புத் தெரிவித்து வியாபாரிகள் போராட்டம்

(முறிகண்டி)

**கிளிநொச்சி பொதுச் சந்தையில் 38 வியாபார நிலையங்களுக்கு நேற்று முன்தினம் இரவு சீல் வைக்கப்பட்டது. குறித்த சம்பவத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து மரக்கறி வியாபாரிகள் போராட்டம் ஒன்றை நேற்றுக் காலை முன்னெடுத்திருந்தனர்.**





கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட 38 மரக்கறிக் கடைகளுக்கு கரைச்சி பிரதேச சபையினரால் நேற்று முன்தினம் இரவு சீல் வைக்கப்பட்டுள்ளதாக போராட்டத்தில் ஈடுபட்ட மரக்கறி வியாபாரிகள் தெரிவித்தனர்.

கரைச்சி பிரதேச சபையின் செயலாளரின் ஒப்பத்துடன் 38 வியாபார நிலையங்களுக்கு முன்பாகவும் கடைகள் பூட்டப்பட்டுள்ளதாக அறிவித்தல் ஒட்டப்பட்டுள்ளது.

கிளிநொச்சி சந்தையில் உள்ள மரக்கறி வியாபாரிகள் 48 பேருக்கும் கூட்டம் ஒன்று நேற்று முன்தினம் திங்கள் பிற்பகல் மூன்று மணிக்கு கரைச்சி பிரதேசசபையின் தவிசாளரால் ஏற்பாடு செய்யப்பட்டது என அன்றையதினம் முற்பகல் 11 மணியளவில் வாய்மொழி மூலம் சந்தை காப்பாளர் ஊடாக அறிவிக்கப்பட்டது.

ஆனால் திடீரென அறிவிக்கப்பட்டதனால் குறித்த கூட்டத்திற்கு 38 வியாபாரிகள் செல்லவில்லை. அதனால் சேவை சந்தையின் வர்த்தக சங்கத்தின் தலைவர் முன்னிலையில் சபையின் செயலாளருக்கு தவிசாளரினால் வழங்கப்பட்ட பணிப்புரைக்கு அமைவாக 38 வியாபார நிலையங்களுக்கு முன்பாகவும் சந்தை பூட்டப்பட்ட பின்னர் தங்களது வியாபார நிலையம் 25.08.2020 முதல் மூடப்படுகிறது என அறிவித்தல் ஒட்டப்பட்டுள்ளது. இந்த நிலையில் நேற்று அதிகாலை சந்தைக்குச் சென்ற வியாபாரிகள் அதிர்ச்சிக்குள்ளாகியுள்ளனர். இதனையடுத்து வியாபாரிகள் குறித்த சம்பவத்திற்கு எதிரான போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

இதன்போது அங்கு சமூகமளித்த கரைச்சி பிரதேச சபையின் செயலாளர் வியாபார நிலையங்களை பூட்டும் தீர்மானத்தை தவிசாளரின் பணிப்புக்கமைய வர்த்தக சங்கத்தின் தலைவரின் முன்னிலையில் மேற்கொண்டதாகவும் வியாபாரிகள் மீண்டும் தங்களின் வியாபார நிலையத்தை திறந்து நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என்றும் தெரிவித்தார்.

இதன்போது குறித்த பகுதிக்கு வருகை தந்த கிளிநொச்சி உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ச.பிரபாகரன் வியாபாரிகளைச் சந்தித்து கலந்துரையாடியதுடன் வியாபார நிலையங்களைத் திறந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் குறித்த .விடயம் தொடர்பாக ஆராய்ந்து பதிலளிப்பதாகவும் தெரிவித்துள்ளார். இதைத் தொடர்ந்து வியாபாரிகள் மேற்கொண்டிருந்த போராட்டம் கைவிடப்பட்டது. (4-5-100-271-350)

# சட்டவிரோத மணல் அகழ்வை தடுக்க போராட்டம் முன்னெடுப்பு



(முறிகண்டி)

இரணைமடு குளத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுவரும் சட்டவிரோத மண்ணகழ்வை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு இரணைமடு விவசாய சம்மேளனம் கோரிக்கை முன்வைத்துள்ளது.

நேற்று குறித்த விடயம் தொடர்பில் கவனம் செலுத்துமாறு தெரிவித்த இரணைமடு விவசாய சம்மேளனத்தினால் கவன ஈர்ப்பு போராட்டம் ஒன்றும் முன்னெடுக்கப்பட்டது.

கரைச்சிப் பிரதேச சபை முன்பாக ஆரம்பிக்கப்பட்ட கவனயீர்ப்புப் பேரணி கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபரிடம் மகஜர் ஒன்றைக் கையளித்தது.

இரணைமடுக் குளத்தின் கீழுள்ள கனகராயன் ஆற்றுப்படுக்கையில் இடம்பெறும் மண்ணகழ்வைக் கட்டுப்படுத்துமாறு கோரியும் குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டதுடன், செருக்கன் பகுதியில் அமைக்கப்படும் உப்பளத்தின் பணிகளை நிறுத்தி செய்கை நிலங்களை பாதுகாத்து தருமாறும் குறித்த போராட்டத்தின்போது வலியுறுத்தப்பட்டது.

குறித்த போராட்டத்தில் இரணைமடு விவசாய சம்மேளனத்தின் கீழ் உள்ள கமக்கார அமைப்புக்களின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த இரணைமடு விவசாய சம்மேளனத்தின் செயலாளரும் கரைச்சிப் பிரதேச சபை உறுப்பினருமான எம்.சிவமோகன்,

இரணைமடு குளத்தின் கீழ் உள்ள கனகராயன் ஆற்றுப்படுக்கையில் மிக மோசமான முறையில் மண்ணகழ்வு இடம்பெற்று வருகின்றது. குறித்த மண்ணகழ்வை தடுக்காதுவிடின் இரணைமடு குளத்திற்கு பாரிய ஆபத்து ஏற்படும். அப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் மணலகழ்வினை தடுப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம் எனத் தெரிவித்தார்.

இதன்போது கிளிநொச்சி அரசாங்க அதிபர் கருத்துத் தெரிவிக்கையில், இரணைமடுக் குளத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுவரும் சட்டவிரோத மண் அகழ்வைத் தடுக்க படையினரால் நடவடிக்கை எடுக்கப்பட்டால் அதனை தாம் வரவேற்பதாகவும் அவர் இதன்போது குறிப்பிட்டார். (4-5-100-312-350)

# கைது செய்யப்பட்ட இருவர் பிணையில் விடுவிப்பு

(முல்லைத்தீவு)

பொலிஸாரின் கடமைக்கு இடையூறு விளைவித்தனர் என்ற குற்றச்சாட்டில் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இரு அரச உத்தியோகத்தர்களும் நேற்று முன்தினம் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இதுதொடர்பில்மேலும்தெரிய வருவதாவது, கடந்த 23 ஆம் திகதி இரவு 7.30 மணியளவில் முல்லைத்தீவு முள்ளியவளை பிரதான வீதியில் முள்ளியவளைப் பொலிஸார் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டபோது பொலிஸாரின் கடமைகளுக்கு இடையூறுவிளைவித்தகுற்றச்சாட்டில் இரு அரச உத்தியோகத்தர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் நேற்று முன்தினம் முல்லைத்தீவு நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டனர். (5-6)

# முதியவர் மரணம்;மூவர் கைது

(வவுனியா)

வவுனியா கனகராயன்குளம் பகுதியில் முதியவரின் மரணத்துடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் மூன்று நபர்களை கனகராயன்குளம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வவுனியா கனகராயன்குளம் பகுதியில் காயங்களுடன் முதியவர் ஒருவரின் சடலம் ஒன்று கடந்த 22 ஆம் திகதி பொலிஸாரால் மீட்கப்பட்டது.

குறித்த முதியவரின் முகம் மற்றும் உடல் பகுதிகளில் காயங்கள் காணப்பட்ட நிலையில் கொலை என்ற கோணத்தில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

சடலத்தை பார்வையிட்ட வவுனியா நீதவான் உடற்கூற்று பரிசோதனைக்கு உட்படுத்துமாறு உத்தரவிட்டிருந்தார்.

சடலம் மீட்க்கப்பட்டு வவுனியா வைத்தியசாலையில் உடற்கூற்று பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

பரிசோதனை முடிவுக்ளின் பிரகாரம் குறித்த முதியவரின் கழுத்து நெரிக்கப்பட்டதற்கான சான்றுகள் கிடைத்திருந்ததுடன், அடிகாயங்கள் ஏற்பட்டுள்ளமையும் உறுதிப்படுத்தப்பட்டது.

அதன் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் கனகராயன்குளம் பெரியகுளம் பகுதியை சேர்ந்த 16,19 மற்றும் 18 வயது மதிக்கத்தக்க மூன்று இளைஞர்களை சந்தேகத்தின் அடிப்படையில் நேற்று முன்தினம் கைது செய்திருந்தனர்.

அவர்களிடம் விசாரணைகளை மேற்கொண்டுவரும் பொலிஸார் நீதிமன்றில் ஆஜர்படுத்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-5-8-299)

# படுகொலை செய்யப்பட்ட யுவதியின் சடலம் அடக்கம்


(மன்னார்)

மன்னார் உப்பளம் பகுதியில் படுகொலை செய்யப்பட்ட நிலையில் கடந்த 13 ஆம் திகதி சடலமாக மீட்கப்பட்ட நெடுந்தீவைச் சேர்ந்த டொறிக்கா ஜ°யின் (வயது-21) என்ற இளம் யுவதியின் சடலம் மன்னார் மாவட்ட மாதர் ஒன்றியத்தின் உதவியுடன் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை மன்னார் பொது மயானத்தில் அடக்கம் செய்யப்பட்டது.

படுகொலை செய்யப்பட்ட யுவதியின் சடலம் உறவினர்களிடம் கடந்த திங்கட்கிழமை மாலை மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் வைத்து கையளிக்கப்பட்டது.

யுவதியின் மரணம் தொடர்பாக அவரின் சகோதரி மற்றும் அவரது பெரிய தாயின் மகனின் மனைவி ஆகிய இருவரும் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் குறித்த இரு பெண்களையும் விளக்கமறியலில் வைக்க மன்னார் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-5-286)

# பழுதடைந்த மீன்களுடன் லொறி மடக்கிப்பிடிப்பு




(கொழும்பு)

**பழுதடைந்த நிலையில் உள்ள சுமார் 5 ஆயிரம் கிலோகிராம் மீன்களை ஏற்றிச் சென்ற லொறி ஒன்றை புத்தளம் சுகாதாரப் பரிசோதகர்கள் நேற்று மடக்கிப் பிடித்துள்ளனர்.**

நேற்று முன்தினம் மாலை கொழும்பிலிருந்து புத்தளம் நகரினூடாக அனுமதிப்பத்திரமின்றி மன்னாருக்கு கொண்டு செல்லப்பட்ட போது குறித்த லொறி புத்தளம் பொதுச் சுகாதார ஊழியர்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டது.

குறித்த லொறி புத்தளம் நகரினூடாக சென்றபோது துர்நாற்றம் வீசியதன் காரணமாக குறித்த லொறி மடக்கிப்பிடிக்கப்பட்டு சோதனைகளை முன்னெடுத்த வேளையில் மனித பாவனைக்கு உகந்ததல்லாத சுமார் 5 ஆயிரம் கிலோகிராம் நிறையுடைய மீன்கள் காணப்பட்டதாக தெரிவித்தனர்.

இம் மீன்கள் 3 நாட்களுக்கு முன்னரே பழுதடைந்திருக்கலாம் என பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மேலும் தெரிவித்தனர். (ஐ-2)

# சிறையிலுள்ள குழந்தைகளை விடுவிப்பது தொடர்பாக விசேட தீர்மானம்



(கொழும்பு)

விளக்கமறியல் சிறைச்சாலைகளில் உள்ள தாய்மார்களின் குழந்தைகளை விடுவிப்பது குறித்து விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ்வளிப்பு இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே தலைமையில் குறித்த கலந்துரையாடல் இன்று இடம்பெறவுள்ளது.

போதைப்பொருள் விற்பனை உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுகளில் விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தாய்மார்களின் 46 குழந்தைகளை விடுவிப்பது தொடர்பில் குறித்த கலந்துரையாடல் இடம் பெறவுள்ளது.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, இவ்விடயம் தொடர்பில் இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளேவிற்கு அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள 46 தாய்மார்களுடன் 5 வயதுக்கும் குறைவான சிறுவர்கள் தங்கியுள்ளதால் குறித்த விடயம் தொடர்பில் விசேட கவனம் செலுத்துமாறு பிரதமர் மகிந்த ராஜபக்ஷ விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கு அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-4)

# கோடீஸ்வரரான யாசகர்

(கொழும்பு)

கொழும்பு கொச்சிக்கடையில் நிகழ்ந்த தள்ளுவண்டி திருட்டு சம்பவம் தொடர்பாக மகரகம பகுதியை சேர்ந்த 64 வயது நபரை கைது செய்து விசாரித்த போது பொலிஸார் அதிர்ச்சியடைந்தனர்.

விசாரணையில், இவரிற்கு சொந்தமாக மகரகம பமுனுவ பிரதேசத்தில் ஆடம்பர மாடி வீடும் ஆடம்பர கார் ஒன்றும் உள்ளது தெரியவந்தது.

மேலும் அவர் தனது ஆடம்பர வீட்டில் மேல்தளத்தை மாதம் 30,000 ரூபாவுக்கு வாடகைக்கு விட்டு சம்பாதிப்பதுடன் கொழும்பு கொச்சிக்கடை அந்தோனியார் தேவாலயத்திற்கு அண்மையில் யாசகம் செய்து நாள் ஒன்றுக்கு 5000 ரூபாவிற்கு மேல் பொது மக்களிடம் யாசகம் பெறுவது விசாரணையில் தெரியவந்துள்ளது. (2-10)

# ஆசனப் பங்கீட்டில் அநீதி தனித்து களமிறங்க தயாராகும் சு.க.

(கொழும்பு)

மாகாண சபைத் தேர்தலில் தனித்து களமிறங்குவது தொடர்பாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆராய்ந்து வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

அண்மையில் நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்திலும் இது தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது.

நடைபெற்று முடிந்த பொதுத் தேர்தலில் நுவரெலியா, களுத்துறை மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் தனித்தும் ஏனைய மாவட்டங்களில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடனும் இணைந்து சுதந்திரக் கட்சி போட்டியிட்டது.

எனினும் ஆசனப் பங்கீட்டில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு அநீதி இழைக்கப்பட்டது என்ற கருத்து நிலவுகின்றது.

இந்த நிலையிலேயே, மாகாண சபைத் தேர்தலில் தனித்து களமிறங்குவது தொடர்பாக ஆராயப்பட்டு வருவதாக கூறப்படுகிறது.

சுதந்திரக்கட்சியின் வருடாந்த மாநாடு செப்டெம்பர் 2 ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது. இதன்போது மாகாண சபைத் தேர்தல் தொடர்பாக தீர்மானமொன்று நிறைவேற்றப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையில் 9 மாகாண சபைகளுக்கும் ஒரே நாளில் தேர்தலை நடத்துவதற்கு திட்டமிட்டுள்ள அரசு, அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறது.

இதற்கமைய, இடைக்கால கணக்கறிக்கையில் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

எனவே, மாகாணச்சபைத் தேர்தலை எதிர்கொள்வதற்காக பிரதான அரசியல் கட்சிகள் தயாராகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-7)

# 296 பேர் நாடு திரும்பினர்

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்று பரவலினால் வெளிநாடுகளில் சிக்கித் தவிக்கும் இலங்கையர்களை நாட்டிற்கு அழைத்து வரும் நடவடிக்கை தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அதற்கமைய தென்கொரியா மற்றும் கட்டார் ஆகிய நாடுகளில் சிக்கியிருந்த 296 இலங்கையர்கள் நேற்று செவ்வாய்க்கிழமை காலை நாடு திரும்பியுள்ளனர்.

அதன்படி தென்கொரியாவில் இருந்து 275 பேரும் கட்டார் - டோஹாவிலிருந்து 21 பேரும் நேற்று அதிகாலை 1.20 மணியளவில் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

விமான நிலையத்தை வந்தடைந்த அனைவருக்கும் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. (ஐ-2)

# ரஞ்சன் ராமநாயக்கவிற்கு எதிரான வழக்கு விசாரணைகள் நிறைவு

(கொழும்பு)

நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டு தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவிற்கு எதிரான வழக்கு விசாரணைகள் நேற்றுடன் உயர் நீதிமன்றத்தில் நிறைவுக்கு வந்துள்ளன.

எவ்வாறாயினும் குறித்த விசாரணைகள் தொடர்பில் மேலதிக கருத்துக்களை தெரிவிக்க ஒக்டோபர் மாதம் 21 ஆம் திகதி மீள விசாரணைக்கு எடுத்துக்கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

சிசிர த ஆப்ரூ, விஜித் மல்



கொட மற்றும் பிரிதி பத்மன் சூரசேன ஆகிய நீதிபதிகள் குழுவின் குறித்த் வழக்கு விசாரணைகள் இடம்பெற்றன.

கடந்த 2017 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 21 ஆம் திகதி அலரி மாளிகையில் பிரதமரை சந்தித்த ரஞ்சன் ராமநாயக்க ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போது இலங்கையில் பெரும்பான்மையான நீதிபதிகள் மற்றும் சட்டத்தரணிகள் ஊழல் மிக்கவர்கள் எனக்கூறியிருந்தார்.

இதன்மூலம் ரஞ்சன் ராமநாயக்க நாட்டின் நீதித்துறை மீதான பொதுமக்களின் நம்பிக்கையை குறைமதிப்பிற்கு உட்படுத்தியதாகவும், நீதிமன்றத்தை அவமதித்ததாகவும் குற்றஞ்சாட்டப்பட்டு இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-4)

# ஐ.தே.கவின் செயற்குழுக்கூட்டம்


(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுக்கூட்டம் நேற்று 25.08.2020 ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமை யகமான ஸ்ரீகொத்தாவில் முன்னாள் பிரதமரும் ஐக்கிய தேசியக் கட்சியின தலைவருமான ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் தேசியப்பட்டியல் ஆசனம் தொடர்பாகவும் ஐக்கிய தேசியக் கட்சி யின் அடுத்த தலைவரைத் தேர்ந்தெடுப்பது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டுள்ளது. (ஐ)

# உள்ளூராட்சி சபைகளின் நிர்வாகமும் பணிப்பொறுப்புகளும் - ஒரு தொகுப்பு

02




**கலாநிதி க.தவலிங்கம்**
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.


**13ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் பிரகாரம் உள்ளூராட்சி நிறுவனங்களின் நடவடிக்கைகளின் நிர்வாகமும் மேற்பார்வையும் மத்திய அரசிடமிருந்து மாகாண சபைகளிடம் ஒப்படைக்கப்பட்டது. உள்ளூராட்சியுடன் தொடர்புடைய கட்டமைப்புகளையும் தேசிய கொள்கைகளையும் தயாரிக்கும் அதிகாரம் மத்திய அரசின் கீழ் தக்கவைத்துக் கொள்ளப் பட்டுள்ளது.**

**உள்ளூராட்சி நிறுவன கட்டமைப்பானது**

- **மாநகர சபை கட்டளைச் சட்டம் (1947)**
- **நகர சபை கட்டளைச் சட்டம் (1939)**
- **பிரதேச சபை சட்டம் (1987)**

**ஆகிய 3 சட்டங்களின் மூலம் நிர்வகிக்கப்படுகின்றது.**

### உள்ளூராட்சி நிர்வாகத்தில் உள்ளூராட்சி அமைச்சின் பங்கு

உள்ளூராட்சி அமைச்சு இந்நாட்டிலுள்ள உள்ளூராட்சி நிறுவன மட்டத்திலும் பிரதேச மட்டத்திலும் மக்களுக்கு சிறப்பான சேவையினை வழங்கி வருவதுடன் மக்களின் அபிவிருத்தி நடவடிக்கைகளில் உரிய பங்களிப்பினை செய்வதற்குத் தேவையான வழிமுறைகளையும் உருவாக்கும் முன்னோடி முகவராக உள்ளது. மாகாண மட்டத்தில் அபிவிருத்தியில் சமநிலையைப் பேணுவதற்காக பெரும் முயற்சியெடுத்து செயலில் ஈடுபடுத்தியுள்ள பல்வேறு அபிவிருத்தி திட்டங்களின் மூலம் நாட்டின் அபிவிருத்தியில் சமநிலையற்ற பிரதேசங்களை வளம்பெறச் செய்வதற்கு உதவுகின்றது.

உள்ளூராட்சி நிர்வாகம் சம்பந்தமாக உள்ளூராட்சி அமைச்சின் செயற்பணிகளாக பின்வருவனவற்றை குறிப்பிடலாம்.

1.மத்திய அரசுக்கும் மாகாண சபைகளுக்குமிடையே ஒருங்கிணைப்பை ஏற்படுத்தல்.

2.மாகாண சபைகள் உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பான தேசிய கொள்கைகளை வகுத்தல்.

3.தேசிய கொள்கை வட்டத்துக்குள் வினைத்திறனுடன் செயற்படுவதற்கு மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தேவையான உதவிகளை வழங்குதல்.

4.மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றங்களுக்கு நிதி, தொழில்நுட்ப மற்றும் சட்டரீதியான உதவிகளை வழங்குதல் மற்றும் மறுசீரமைப்பை அறிமுகப்படுத்தல்,

5.இவை சம்பந்தமான சர்வதேச தொடர்புகளைப் பேணிவருதல் மற்றும் வெளிநாட்டு உதவிச் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தல்,

6.உள்ளூராட்சி நிறுவனங்களின் ஸ்தாபிப்பு மற்றும் உள்ளூராட்சி தேர்தல்கள் தொடர்பான தேசிய மட்டப் பொறுப்புக்கள்,

7.பயனுள்ள பன்முகப்படுத்தப்பட்ட கட்டுப்பாட்டைக் கண்காணித்தல், பௌதிக, பொருளாதார மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கு உதவுதல்,

8.உள்ளூராட்சி நிர்வாகத்திற்கு அவசியமான தேசிய சட்டங்களான உள்ளூராட்சி தேர்தல் (திருத்த) சட்டம் மற்றும் உள்ளூராட்சி (விசேட விதிகள்) சட்டம் ஆகியவற்றில் திருத்தங்கள் செய்தல்

9.மாநகர சபை கட்டளைச் சட்டம் திருத்தியமைத்தல்,

10.நகர சபை கட்டளைச் சட்டம் திருத்தியமைத்தல்,

11.பிரதேச சபைச் சட்டம் திருத்தியமைத்தல்,

12.உள்ளூராட்சி நிர்வாகம், ஆளணிக் கட்டுப்பாடு, வருமானம் தொடர்பான சட்டங்களைத் திருத்துதல்,

13.பொதுமக்களின் சுகாதாரம் மற்றும் சுற்றாடல் தொடர்பான சட்டங்கள், பொதுப் பயன்பாட்டுச் சேவைகள் போன்றவற்றை தற்காலத்திற்கு ஏற்றவாறு தயாரித்தல்.

14. உள்ளூராட்சி நிறுவன மட்டத்தில் சிறந்த நிர்வாகத்திற்குத் தேவையான அறிவூட்டலும் பயிற்சியும் வழங்கல்

15.பதவியணியினரின் தேவைகளை நிறைவேற்றுதல், சட்டங்களைத் தயாரித்தல், அமுலாக்கல் மற்றும் ஆற்றலை மேம்படுத்துதல்,

16. உள்ளூராட்சி மறுசீரமைப்பினை அறிமுகப்படுத்த உதவிகளை வழங்குதல்

17. பிரதேச வீதிகள், சுகாதாரம், கல்வி, பொது சுகாதாரம், திண்மக்கழிவு, அனர்த்த முகாமைத்துவம் போன்ற விடயங்களுக்காக செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தல் என்பன உள்ளூராட்சி அமைச்சின் பணிகளாகும்.

### உள்ளூராட்சி அமைச்சின் சட்டப் பிரிவு

உள்ளூராட்சி மன்றங்களுக்குரியதான சட்டங்களை தற்போதைக்கு ஏற்றவாறு சமகால தேவைக்கமைய வகுக்கும்போது முன்னுரிமை வழங்கி செயற்பாடுகள் மேற்கொள்வது உள்ளூராட்சி அமைச்சின் சட்டப் பிரிவாகும்.

இதன் பிரதான நோக்கமாக அமைவது மாநகர சபைக் கட்டளைச் சட்டம், நகரசபைக் கட்டளைச் சட்டம் மற்றும் பிரதேச சபைச் சட்டத்தை காலத்திற்கு ஏற்றவாறு மறுசீரமைப்பதற்காக யோசனைகளைக் கோரல், அதற்காகப் பொருத்தமான மற்றும் தேவையான அங்கத்தவர்களைக் கொண்ட குழுவை நியமித்து நடவடிக்கை எடுத்தல்.

அத்துடன், உள்ளூராட்சி மன்ற நிறுவனங்கள் மற்றும் மாகாண சபைகளில் மகளிர் பிரதிநிதித்துவத்தைப் பலப்படுத்தும் செயற்பாட்டின்போது தேவையான சட்டங்களை வகுத்து அதனை உறுதிப்படுத்து வதற்காக அடிப்படைச் செயற்பாடுகளை மேற்கொள்ளல் போன்றவையாகும்.

பொதுச் சுகாதார மற்றும் சூழலுக்குரிய சட்டங்களை (உதாரணம்- கட்டாக்காலி நாய்களினால் பொது மக்களுக்கு ஏற்படக் கூடிய பாதிப்புக்கள் மற்றும் சிரமங்களைத் தவிர்க்கும் வகையில் சட்டங்களை) வகுத்தல் என்பனவும் சட்டப் பிரிவின் பணிகளாகும்.

மேலும் பண்பு சார் தரம்மிக்க பிரதேச நிர்வாகத்தை கட்டியெழுப்புவதற்காகத் தேவையான வழிகாட்டல்களையும் இச் சட்டப் பிரிவின் ஊடாக முன்னெடுப்பது இவ் அமைச்சின் பணிகளில் ஒன்றாகும். அத்துடன் தோட்டத் தொழிலாளர்களின் நலன்புரிப் பணிகளை மேற்கொள்ளும் வகையில் பிரதேச சபைச் சட்டத்தின் விசேட மறுசீரமைப்புகளை மேற்கொள்வதற்கும் தேவையான செயற்பாடுகளை அமுல்படுத்தும் பணிகளும் அமைச்சின் சட்டப்பிரிவினால் முன்னெடுக்கப்படுகின்றன.

உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு கிடைக்கவேண்டிய தண்டப்பணம் மற்றும் காணி கையளிப்பிற்கமைய அறவிட வேண்டிய முத்திரை கட்டணத்தை முறையாக மற்றும் துரிதகதியில் அவ்வவ் உள்ளூராட்சி மன்றங்களுக்கு கிடைக்காமை பல காலமாக உள்ளூராட்சி மன்றங்கள் எதிர்கொள்கின்ற பாரிய பிரச்சினையாக காணப்படுகின்றது.

இதற்கமைய அந் நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரை கட்டணத்தை துரிதகதியில் உள்ளூராட்சி மன்றங்களுக்கு கிடைக்கச் செய்யத் தேவையான செயற்பாடுகளை வகுக்கும் வகையில் தேவையான சட்டத்தை வகுக்க அமைச்சின் சட்டப்பிரிவு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களைக் கூட்டிணைப்பதற்காக பொருத்தமான ஒப்பளவுகளை இனங்காண்பதும் எதிர்காலத்தில் உள்ளூராட்சி மன்றங்களை கூட்டிணைத்தல், தரமுயர்த்துவது தொடர்பில் மிகுந்த தூரநோக்கு கொண்ட மற்றும் முறையான செயற்பாடுகளை அறிமுகப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அமைச்சின் சட்டப் பிரிவு மேற்கொண்டுள்ளது.

புதிய உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களை உருவாக்குவது தொடர்பில் அங்கீரிக்கப்பட்ட முறைகள் அல்லது கொள்கைகள் இன்மையினால் நகர சபை, மாநகர சபைகளை உருவாக்கும் செயற்பாடுகள் முறையாக இடம்பெறாமை என்பவற்றை கருத்தில்கொண்டு புதிய உள்ளூராட்சி மன்றங்களைத் தாபித்தல் மற்றும் காணப்படும் உள்ளூராட்சி மன்றங்களை தரமுயர்த்துவதற்கான நடவடிக்கையும் சட்டப் பிரிவு மேற்கொண்டுள்ளது.

(தொடரும்)

**முன்பு பட்டினசபைகள், கிராமசபைகள் ஆகியனவும் உள்ளூராட்சி அமைப்பில் காணப்பட்டன. 1980 ஆம் ஆண்டு இவை நீக்கப்பட்டு மாவட்ட அபிவிருத்தி சபைகள் ஏற்படுத்தப்பட்டன. இவை 1988 இல் மறுசீரமைக்கப்பட்டு தற்போதைய உள்ளூராட்சி அமைப்புக்கள் ஏற்படுத்தப்பட்டன. ஆரம்பத்தில் பிரதேச சபையாக ஆரம்பமாகும் உள்ளூராட்சி அலகை காலப்போக்கில் நகர சபையாகவும், பின்பு மாநகர சபையாகவும் தரமுயர்த்திப் பிரகடனம் செய்வதற்குரிய அதிகாரம் மத்திய உள்ளூராட்சி அமைச்சருக்கு உண்டு.**

### உள்ளூராட்சி அமைச்சின் செயற்பாடுகள்

**உட்கட்டமைப்பு வசதிகள், மனித வள அபிவிருத்தி மற்றும் நல்லாளுகையை மேம்படுத்துவதற்கு உதவிபுரிதல், பின்தங்கிய உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு விசேட அபிவிருத்திக்கான உதவிகளைப் பெற்றுக்கொடுத்தல், உள்ளூராட்சி சட்டங்களைத் திருத்தியமைத்தல் மற்றும் மறுசீரமைத்தலுமான விடயங்களுக்கு உதவுதல், கிராமிய வீதிகளை மேம்படுத்தல், அனர்த்த நிவாரண முகாமைத்துவம் தொடர்பான முன்னேற்பாடுகளை செய்தலும் நிறுவன ரீதியான ஆற்றல்களை மேம்படுத்தலும், கழிவு முகாமைத்துவப் படுத்தல், மலசலக்கழிவு கால்வாய்களை நவீனப்படுத்தல், இயந்திரங்கள், பவுசர் மற்றும் வாகன வசதிகளை வழங்குதல் போன்றவை உள்ளூராட்சி நிர்வாகத்தில் உள்ளூராட்சி அமைச்சின் பணிகளாகும்.**

# கொரோனா ஆபத்து நீங்கவில்லை

# சுகாதார நடைமுறைகளை தளர்த்த வேண்டாம்

## பொதுமக்களை எச்சரிக்கையுடன் செயற்படுமாறு கோரிக்கை

(கொழும்பு)

**இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்று சமூகப் பரவலாக மாறாத போதிலும் கொரோனா ஆபத்து நீங்கி விட்டது எனக் கருதக்கூடாது என இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.**



எனவே கொரோனா வைரஸ் குறித்து மக்களை தொடர்ந்தும் எச்சரிக்கையுடன் இருக்குமாறு அவர் கோரிக்கை விடுத்துள் ளார்.

கொரோனா வைரஸ் ஆப த்து முற்றாக நீங்கிவிட்டது என கருதி மக்கள்கொரோனா வைரஸ் தொடர்பான தங்கள் எச்சரிக் கையை தளர்த்தக்கூடாது என வும் அவர் வேண்டுகோள் விடு த்துள்ளார்.

இலங்கையில் அண்மை யில் கண்டு பிடிக்கப்பட்ட கொரோனா வைரஸ் நோயாளி கள் அனைவரும் வெளிநாடுக ளில் இருந்து வந்தவர்கள் என தெரிவித்த இராணுவத் தளபதி சவேந்திர சில்வா. வெளிநாட்டி லிருந்து அழைத்து வரப்படுபவ ர்களில் சிலர் கொரோனா வைர ஸினால் பாதிக்கப்படும் நிலை காணப்படுகின்ற போதிலும் வெளிநாட்டிலுள்ள இலங்கை யர்களை அழைத்து வருவதை தொடர்வதற்கு அரசாங்கம் தீர் மானித்துள்ளதாக தெரிவித்து ள்ளார்.

மேலும் பொதுமக்கள் எச் சரிக்கையுடன் இருக்க வேண் டும் என்றும் ஆபத்து நீங்கிவிட் டது எனக் கருதக்கூடாது எனவும் இராணுவத்தளபதி தெரிவித் துள்ளார். (ஜ-4)

# சர்வாதிகாரப்போக்கிலான வரலாற்றை நோக்கி நாடு திரும்புகிறதா? - சம்பிக்க கேள்வி



(கொழும்பு)

கடந்த 2013 ஆம் ஆண்டில் சர்வாதிகாரப்போக்கிலான 18 ஆவது திருத்தம் நிறைவேற்ற ப்பட முன்னதாக 17 ஆவது திருத்தம் நீக்கப்பட்டது.

தற்போது அதே அரசாங் கத்தினால் 19 ஆவது திருத்தம் நீக்கப்பட்டு, புதிய அரசியல மைப்பொன்று அறிமுகப்படுத்தப் படுவது குறித்துப் பேசப்படுவதா னது நாடு சர்வாதிகாரப்போக் கிலான வரலாற்றுக்கு மீண்டும் திரும்பிக்கொண்டிருப்பதற்கான அறிகுறியா? என்று பாராளும ன்ற உறுப்பினர் பாட்டலி சம்பி க்க ரணவக்க கேள்வி எழுப் பியுள்ளார்.

நாட்டைப் பொறுத்தவரை யில் அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தம் ஒரு சாபக்கே டாக இருக்கின்றது என்றும் நாட்டின் மிக முக்கிய அடிப்படை களாக இருக்கின்ற பொருளா தாரம், பாதுகாப்பு, ஜனநாயகம் ஆகிய மூன்றையும் இது வலு விழக்கச் செய்திருக்கிறது என் றும் கூறியிருக்கும் ஆளுந்தர ப்பு இவ்வருட இறுதிக்குள் அந் தத் திருத்தத்தை நீக்கி புதிய அரசியலமைப்பொன்றைக் கொண்டுவரவிருப்பதாகவும் அறிவித்துள்ளது.

இந்நிலையில் ஜனாதிபதி யின் நிறைவேற்றதிகாரக் குறை ப்பு, சுயாதீன ஆணைக்குழுக் களின் உருவாக்கம், அரசிய லமைப்புப்பேரவையின் அறி முகம், தகவல் அறியும் உரி மைச்சட்டம் உள்ளடங்கலாக பல்வேறு ஜனநாயக மாற்றங் களை ஏற்படுத்துவதற்கு ஏது வாக அமைந்த 19 ஆவது திரு த்தம் நீக்கப்படுவதற்கு எதிராகப் பல்வேறு தரப்பினரும் கருத் துக்களை வெளியிட்டு வரு கின்றனர்.

இந்நிலையில் இதுகுறித்து தனது டுவிட்டர் பக்கத்தில் பதி வொன்றைச் செய்திருக்கும் சம் பிக்க ரணவக்க மேலும் கூறி யிருப்பதாவது,

தற்போது ஆட்சிப்பீடமேறியி ருக்கும் அரசாங்கம், இதற்கு முன்னர் 2013 ஆம் ஆண்டில் அதன் ஆட்சிக்காலத்தின் போது அரசியலமைப்பில் முற்போக் கான திருத்தங்களை ஏற்படு த்துவதாக நாட்டு மக்களுக்கு வாக்குறுதி அளித்தனர். எனி னும் சர்வாதிகார முறையொ ன்றை நோக்கிச்செல்வதற்கு ஏதுவான அரசியலமைப்பின் 18 "ஏ" திருத்தத்தை நிறைவேற்று வதற்கு முன்னதான அரசியல மைப்பின் 17 "ஏ" திருத்தத்தை நீக்கினார்கள்.

இந்நிலையில் தற்போதும் அதே அரசாங்கத்தின் பிரதி நிதிகள் அரசியலமைப்பின் 19"ஏ" திருத்தத்தை நீக்கி, அதன் பின்னர் புதிய அரசி யலமைப்பொன்றைக் கொண்டு வருவது பற்றிப் பேசுகின்றார் கள். அவ்வாறெனின் வரலாறு மீண்டும் திரும்புகின்றதா? என்று அவர் கேள்வி எழுப்பி யுள்ளார். (ஜ-4)

# ஜனாஸா எரிப்பு விவகாரத்தில் அரசு தொடர்ந்தும் விடாப்பிடி

(கொழும்பு)

ஜனாஸா எரிப்பு விடயத் தில், அரசாங்கம் தொடர்ந்தும் விடாப்பிடியாக இருந்து வருவ தாகவும் இது தொடர்பிலான கோரிக்கைகள் அனைத்தும் நிராகரிக்கப்பட்டு, வைத்தியர்க ளின் மேல் பழியைப் போடுகி ன்றனர் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான றிசாத் பதியு தீன் தெரிவித்தார்.

முஸ்லிம்களின் உணர்வு களை மதிக்காமல், மதக்கட மைகளை இல்லாமலாக்கவே இவ்வாறு செயற்படுகின்றார்கள் எனவும் அவர் குற்றஞ்சாட்டினார்.

வன்னி மாவட்ட வாக்காளர் களுக்கு நன்றி கூறும் நிகழ்வு, முல்லைத்தீவில் நேற்று முன் தினம் திங்கட்கிழமை நடை பெற்றது.

**றிசாத்**

அவர் மேலும் தெரிவிக்கை யில், இந்த விவகாரம் குறித்து, வைத்தியர்கள் உள்ளடங்கிய நிபுணர் குழுவொன்றை நியமி த்து, ஆராய வேண்டுமென்று விடுக்கப்பட்ட கோரிக்கைகள் கூட மறுதலிக்கப்படுவதாக அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் 2/3 அல்லது 5/6 பெரும்பான்மை ஆசனங்களோ அல்லது 225 பிரதிநிதிகளையயும் கூட ஆளு ங்கட்சி பெற்றாலும் இறைவன் ஒருவன் இருக்கின்றான் என்ற நம்பிக்கைகொண்டவர்கள் நாங் கள். அனைத்தையும் ஆள்பவன் அவனே! என்று முழுமையான நம்பிக்கையுடன் நாம் வாழ்வ தாலேயே, இன்னும் பொறுமை காக்கின்றோம். எனவே, 'இந்த அநியாயச் செயலை இனிமே லாவது நிறுத்துங்கள்' எனவும் கோருகின்றோம்.

எதிர்க்கட்சி அரசியலை மேற் கொண்டே, வன்னி மாவட்டத் தில் ஆகக் கூடிய விருப்பு வாக்கு களை நான் பெற்றுக்கொண் டேன். மக்கள் காங்கிரஸ் கட்சி சார்ந்த வாக்காளர்களுக்கு கிடை த்த கௌரவமாகவே இதனைக் கருதுகின்றோம்.

கடந்த ஐந்து தேர்தலில் போட் டியிட்டுள்ளோம். ஒவ்வொரு தேர்தல்களிலும் விருப்பு வாக்கு களின் எண்ணிக்கை அதிகரி த்து வந்ததுடன், இம்முறை மாவட்டத்தில், விருப்பு வாக்கில் முதலிடம் பெறவும் முடிந்தது. இறைவனின் உதவியினாலும் உங்களின் ஆதரவினாலும் உழைப்பினாலுமே இந்த வெற்றி கிடைத்தது என அவர் தெரிவி த்தார். (ஜ-4)

# பேருந்து வீட்டுடன் மோதியது

## ஐவர் படுகாயம்

(கொழும்பு)

தனியார் பேருந்து ஒன்று வீடொன்றின் மீது மோதி விப த்துக்குள்ளானதில் ஐவர் படு காயமடைந்துள்ளனர்.

விபத்து நேற்று முன்தினத் ஹல்துமுள்ளை நகரில் இடம் பெற்றது.

கொழும்பிலிருந்து பதுளை நோக்கிப் பயணித்த தனியார் பேருந்து வேகக்கட்டுப்பாட்டை இழந்தமையினால் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளதாக ஹல்துமுள்ளை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்தில் காயமடை ந்தவர்களில் நான்கு பேர் திய த்தலாவை அரச சைத்தியசா லையிலும் இன்னுமொரு ஹல் துமுள்ளை அரச வைத்திய சாலையிலும் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாக ஹல்துமுள்ளை பொலிஸ் நிலை யப் பொறுப்பதிகாரி தெரிவித் துள்ளார்.

இந்த நிலையில் விபத்துத் தொடர்பான மேலதிக விசார ணைகளை ஹல்துமுள்ளை பொலிஸார் முன்னெடுத்து வருகி ன்றமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# யானை தாக்கி ஒருவர் படுகாயம்

(நெளுக்குளம்)

ஹெப்பற்றிக்கொல்லாவை பகுதியில் யானை தாக்குதலிற் குள்ளாகி படுகாயமடைந்த ஒரு வர் வவுனியா வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அநுராதபுரம் ஹெப்பற்றி கொல்லாவைப் பகுதியில் வேலை செய்து கொண்டிருந்த ஒருவரை அப்பகுதிக்கு வந்த காட்டு யானை தாக்கியுள்ளது.

இதனால் படுகாயமடைந்த அவர் உடனடியாக மீட்கப்பட்டு பதவியா பிரதேச வைத்தியசா லையில் அனுமதிக்கப்பட்டு மேல திக சிகிச்சைகளுக்காக நேற்று முன்தினம் வவுனியா வைத் தியசாலையில் அனுமதிக்கப்பட் டார். இச்சம்பவத்தில் அப்துல் வகீட் என்ற 40 வயதுடைய நபரே படுகாயமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-5-299)



# பாரதம்

## பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு பகுதி அணை கட்ட சீனா முயற்சி

### போராட்டங்கள் காஷ்மீரில் முன்னெடுப்பு



(காஷ்மீர்)

ஜீலம் - நீலம் ஆற்றின் குறுக்கே சீனா மிகப்பெரிய அணை கட்ட முயற்சி செய்வதற்கு எதிராக பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

பாகிஸ்தான் ஆக்கிரமித்துள்ள இந்திய பகுதியில் கடந்த சில நாட்களுக்கு முன்னர் ஜீலம்- நீலம் ஆற்றின் குறுக்கே கோஹலா என்ற இடத்தில் அணை கட்டி 1,124 மெகாவோட் மின்சாரம் தயாரிக்கும் திட்டம் தொடர்பாக சீனா, பாகிஸ்தான் அரசுகள் மற்றும் சீன நிறுவனம் இடையே ஒப்பந்தம் கையெழுத்தானது.

இதற்கு 5.8 பில்லியன் டொலர் செலவாகும். இந்த திட்டத்திற்கு ஆக்கிரமிப்பு காஷ்மீரில் பலத்த எதிர்ப்பு கிளம்பியுள்ளது.

இந்த நிலையில் நீலம் - ஜீலம் ஆற்றில் சீன நிறுவனங்களால் பெரிய அணைகள் கட்டப்படுவதை எதிர்த்து பாகிஸ்தானின் முசாபராபாத் நகரில் நேற்று முன்தினம் இரவு பெரிய போராட்டங்களும் தீப்பந்த பேரணியும் நடைபெற்றது.

தொடர்ந்து பலநாட்களாக போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. அதன் ஒரு பகுதியாக நேற்று முன்தினம் மிகப் பெரிய அளவில் போராட்டம் நடைபெற்றது. (2)

## மகாராஷ்டிராவில் இடிந்து வி



(டில்லி)

இந்தியாவின் மகாராஷ்டிரா மாநிலத்தின் ராய்காட் மாவட்டத் திலுள்ள மகாட் என்ற இடத்தில்

## அதிகரிக்கும் வெப்பமயமாதல் கடல் மட்டம் உயர வாய்ப்பு

### பல்கலைக்கழகங்களின் ஆய்வில் தகவல்

(லண்டன்)

**அதிகரித்து வரும் வெப்பமயமாதலால் இந்த நூற்றாண்டிற்குள் கடல்மட்டம் ஒரு மீற்றர் அளவு உயர வாய்ப்புள்ளதாக லண்டன் பல்கலைக்கழகம், லீட்ஸ் மற்றும் எடின்பர்க் பல்கலைக்கழகங்கள் இணைந்து நடத்திய சமீபத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது.**

லீட்ஸ் பல்கலைக்கழகத்தின் துருவ கண்காணிப்பு மையத்தின் இயக்குநர் பேராசிரியர் ஆண்டி ஷெப்பர்ட் கூறுகையில், "ஒவ்வொரு சென்ரிமீற்றர் கடல் மட்ட உயர்வும் 10 லட்சம் மக்கள் தங்கள் வசிப்பிடங்களில் இருந்து இடம்பெயர காரணமாக அமையும்" என தெரிவித்தார்.


அதிகப்படியாக வெளியாகும் கரியமில வாயுக்களால் புவியின் வெப்பநிலை நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது. இதன்காரணமாக புவியின் மேற்பரப்பில் உள்ள பனிப்பாறைகள் வேகமாக உருகி வருகின்றன.

இந்தநிலையில், கடந்த 30 ஆண்டுகளில் அதிகரிக்கும் கரியமில வாயுக்களின் உமிழ்வால் 28 லட்சம் கோடி பனிப்பாறைகள் உருகிவிட்டதாக இங்கிலாந்து விஞ்ஞானிகளின் ஆய்வில் தெரியவந்துள்ளது.

செயற்கைக்கோள் உதவியுடன் எடுக்கப்பட்ட படங்களைக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் புவியின் மேற்பரப்பில் உள்ள பனிப்பாறைகள் வேகமாக உருகி வருவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு பத்தாண்டுகளுக்கும் இடையில் புவியின் வெப்பநிலை 0.2 செல்சியஸ் உயர்ந்து வருகிறது. இது அதிகரித்துவரும் பனிப்பாறைகள் இழப்பால் 0.3 செல்சியஸாக உயரும் என ஆய்வில் தெரியவந்துள்ளது.

உருகி வரும் பனிப்பாறைகளுக்கு அடியில் உள்ள கடல் அல்லது மண் மேலும் அதிகமான வெப்பத்தை உறிஞ்சி, புவியின் வெப்பமயமாதலை அதிகரிப்பதாக விஞ்ஞானிகள் கவலை தெரிவித்துள்ளனர். (2)



**தென்னாபிரிக்க நகரமான டர்பனில் 139 ஆண் தீப் பரவல் இடம் பெற்றுள்ளது. கடந்த திங்கள கோளாறு காரணமாக இடம் பெற்றிருக்கலாம் தெரிவிக்கின்றன.**

## குடியரசு கட்சி வேட்பாளராக அறிவிக்கப்பட்டார் ட்ரம்ப்

(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் குடியரசுக் கட்சி வேட்பாளராக டொனால்ட் ட்ரம்ப்பின் பெயரை அக்கட்சி நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் எதிர்வரும் நவம்பர் மாதம் இடம்பெறவுள்ளது. இதில் குடியரசுக் கட்சி வேட்பாளராக தற்போதைய ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், ஜனநாயக கட்சி வேட்பாளராக ஜோ பிடன் ஆகியோர் போட்டியிடுகின்றனர்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் ஜோ பிடனை ஜனாதிபதி வேட்பாளராக ஜனநாயக கட்சி அதிகாரபூர்வமாக அறிவித்தது.

இந்த நிலையில் நேற்று குடியரசுக் கட்சியின் தேசியக் குழு கூட்டம் இடம்பெற்றது. இதில் இரண்டாவது முறையாக டொனால்ட் ட்ரம்ப் ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்கப்பட்டார்.

அத்தோடு, துணை ஜனாதிபதி வேட்பாளராக மைக் பென்ஸ் போட்டியிடவுள்ளதாக குடியரசுக் கட்சியின் தேசிய குழுத் தலைவர் ரோஜாவ் மெக்டேனியல் அதிகாரப்பூர்வமாக அறிவித்தார். (2)

## பிலிப்பைன்ஸி உயிரிழந்தே

### 75 பேர் ப

(மணிலா)

பிலிப்பைன்ஸில் மேற்கொள்ளப்பட்ட இரட்டை குண்டுவெடிப்பில் உயிரிழந்தவர்களின் எண்ணி

# வெளிநாடு

## ல் ஐந்து மாடிக்கட்டடம் விழுந்து விபத்து



மாவட்டத் இடத்தில் அமைந்துள்ள 5 மாடி கட்டடத்தின் 3 தளங்கள் நேற்று இடிந்து விழுந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

குறித்த விபத்தில் இதுவரை ஒருவர் பலியாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

60 இற்கும் மேற்பட்டோர் கட்டட இடிபாடுகளில் சிக்கியிருக்கலாம் என அந் நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

3 தேசிய பேரிடர் மேலாண்மை குழுக்கள் சம்பவ இடத்திற்கு விரைந்து மீட்புப் பணிகளை முன்னெடுத்துள்ளன.

மீட்புப் பணிகள் தொடரும் நிலையில் பலி எண்ணிக்கை அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகின்றது. (2)

## இழப்பீடு வழங்கக்கோரி

## எடியூரப்பாவிற்கு எதிராக விவசாயிகள் போராட்டம்



(டில்லி)

கடந்த வருடம் அறிவித்த இழப்பீடு தொகையை வழங்கக்கோரி விவசாயி கள் கர்நாடக முதல்வர் எடியூரப்பாவிற்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கர்நாடக மாநிலத்தில் தற்போது பருவ மழை காரணமாக குறிப்பிட்ட மாவட்டத்தில் மிகப்பெரிய அளவில் சேதம் ஏற்பட்டுள்ளது. கடந்த வருடமும் இதுபோன்று சேதம் ஏற்பட்டது. அப்போது மழை வெள்ளத்தால் சேதமடைந்த பயிர்களுக்கு இழப்பீடு வழங்கப்படும்என்று முதல்வர் எடி யூரப்பா உறுதி அளித்திருந்தார்.

ஆனால் இன்னும் மாநில அரசு அதற்கான இழப்பீடு வழங்கவில்லை. இதனால் கோபம் அடைந்த விவசாயிகள் கர்நாடக மாநிலத்தின் விமான நிலைய வீதியில் எடியூரப்பாவிற்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் அங்கு பரபரப்பான சூழ்நிலை ஏற்பட்டது. (2)




139 ஆண்டுகள் பழைமையான மசூதியில் பாரிய
திங்களன்று இடம்பெற்ற தீ விபத்து மின்சாரக்
ருக்கலாம் என அங்கிருந்து வரும் செய்திகள்

## வாழ்வாதாரம் தேடி ஐரோப்பாவிற்குள் நுழைய முயன்ற வேளை

## படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 22 அகதிகள் பலி

(டிரிபோலி)

**லிபியாவின் ஜாவ்ரா கடல் பகுதியில் சிறிய படகில் சென்ற 22 அகதிகள் நீரில் மூழ்கி பலியானார்கள். உள்நாட்டுப் போர் மற்றும் பொருளாதார பின்னடைவால் பாதிக்கப்பட்டுள்ள ஆபிரிக்க நாடுகளை சேர்ந்தவர்கள் வாழ்வாதாரம் தேடி ஐரோப்பிய நாடுகளுக்கு அகதிகளாக செல்கின்றனர்.**



இவர்கள் ஐரோப்பிய நாடுகளுக்கு செல்வதற்காக மத்திய தரைக்கடல் வழியாக கடலில் சட்டவிரோதமான மற்றும் ஆபத்தான முறைகளில் பயணம் மேற்கொள்கின்றனர்.

இது போன்ற பயணங்கள் பல நேரங்களில் விபத்தில் முடிந்து விடுகிறது. இந்த நிலையில் லிபியாவின் ஜாவ்ரா கடல் பகுதியில் அகதிகள் சிலர் சிறிய படகில் பயணம் செய்தனர். அப்போது சற்றும் எதிர்பாராத வகையில் இந்த படகு கடலில் கவிழ்ந்தது. இதில் படகில் இருந்த அனைவரும் நீரில் மூழ்கினர்.

இதையடுத்து அந்தப் பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்தவர்கள் இதை கண்டதும் விரைந்து சென்று மீட்பு பணியில் ஈடுபட்டனர். எனினும் 22 பேரை பிணமாகத்தான் மீட்க முடிந்தது.

இந்த விபத்தில் மேலும் பலர் மாயமாகி இருக்கலாம் என தெரிகிறது. லிபிய கடலோர காவல் படையினர் அவர்களை தேடும் பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

முன்னதாக கடந்த வியாழக்கிழமை இதே ஜாவ்ரா கடல் பகுதியில் அகதிகள் படகு ஒன்று கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் பெண்கள், குழந்தைகள் உட்பட 45 பேர் பலியானது குறிப்பிடத்தக்கது. (2)

## ஸில் இரட்டைக் குண்டு வெடிப்பு தோர் தொகை 14 ஆக உயர்வு

## ர் படுகாயம்

ரெட்டை ண்ணி க்கை 14 ஆக அதிகரித்துள்ளது.

அத்தோடு குறித்த குண்டு வெடிப்புக்களில் மேலும் 75 பேர் படுகாயமடைந்துள்ளனர் என்றும் அந்நாட்டு அரசாங்கம் அறிவித்துள்ளது.

தெற்கு பிலிப்பைன்ஸ் நகரமான ஜோலோவில் பெண் தற்கொலை குண்டுதாரி நடத்தியதாக கூறப்படும் இரட்டை குண்டுவெடிப்பில் இராணுவ வீரர்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட பலர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், இரண்டு தாக்குதல்களிலும் அரசாங்க துருப்புக்கள் பலர் படுகாயமடைந்தனர்.

முதல் குண்டுவெடிப்பு மணிலாவிற்கு தெற்கே 1,000 கிலோமீற்றர் (621 மைல்) தொலைவில் சுலு மாகாணத்தின் ஜோலோ நகரில் உள்ள வணிக கட்டடத்தின் முன் நிறுத்தப்பட்டிருந்த இராணுவ டிரக்கை குறிவைத்து நிகழ்த்தப்பட்டது. இதைத்தொடர்ந்து கத்தோலிக்க தேவாலயத்தை குறிவைத்து மற்றொரு குண்டுவெடிப்பு நிகழ்த்தப்பட்டது.

குண்டுவெடிப்பு நடந்த இடத்திற்கு அருகில் அமைந்துள்ள செஞ்சிலுவை சங்கத் தலைவர் ரிச்சர்ட் கார்டன் இதுகுறித்து விபரிக்கையில், எனினும், இந்த தாக்குதலுக்கு எந்தவொரு குழுவும் இதுவரை பொறுப்பேற்கவில்லை. பிலிப்பைன்ஸில் மிகவும் வன்முறையான பயங்கரவாத அமைப்புகளில் ஒன்றான அபு சயாஃப் குழுவின் கோட்டையாக ஜோலோ விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. (2)

# தொகுதிகளுக்கு பொறுப்புக்கூறும் பாராளுமன்ற உறுப்பினர்களை உருவாக்கும் நோக்குடன் கலப்பு தேர்தல் முறை அறிமுகம்

(கொழும்பு)

**20ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் ஊடாக தொகுதிகளுக்கு பொறுப்புக்கூறும் பாராளுமன்ற உறுப்பினர்களை உருவாக்கும் நோக்குடன் கலப்புத் தேர்தல் முறைமையை அறிமுகப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.**



கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இரட்டைப் பிரஜாவுரிமையுள்ள ஒருவருக்கு புதிய அரசியல் திருத்தத்தின் ஊடாக பாராளுமன்றம் செல்ல முடியுமா? என்ற கேள்விக்கு அமைச்சர் பதிலளிக்கையில், நாம் முதலில் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஏன் அதனை அதாவது இரட்டைப் பிரஜாவுரிமை உள்ள ஒருவருக்கு எதிராக இதனை செய்தார்கள் என்று! நாட்டின் நலனுக்காக இதனைச் செய்தார்களா? அரசியல் கலாசாரம் சட்டம் முதலானவற்றை சிந்தித்துப் பார்த்து இதனை செய்யவில்லை. உண்மையில் போலியான நடவடிக்கையே இது. ராஜபக்ஷ குடும்பம் ஒருபோதும் அரசியலுக்கு வரக்கூடாது என்ற எண்ணத்துடனேயே இதனை மேற்கொண்டனர். தூரநோக்குடன் கொண்டு வரப்பட்ட சட்ட திருத்தம் அல்ல. தனிப்பட்டவரை கேந்திரமாகக் கொண்டே இது கொண்டுவரப்பட்டது என அவர் தெரிவித்தார்.

புதிய திருத்தம் மேற்கொள்ளப்படுவதன் மூலம் தேசியப் பட்டியலில் ஒருவர் விலகுவதன் மூலம் அந்தப் பட்டியல் ஊடாக பசில் ராஜபக்ஷ பாராளுமன்றம் செல்வாரா? என்ற கேள்விக்கு அமைச்சர் பதிலளிக்கையில், அது அரசியல் தீர்மானம். அது உரிய நேரத்தில் தீர்மானிக்கப்படும். நாடு குறித்து சிந்தித்து தீர்மானம் மேற்கொள்ளப்படும் என அவர் தெரிவித்தார்.

துணைப் பிரதமர் பதவி தொடர்பில் அரசாங்கத்தில் எவ்வித உத்தியோகபூர்வ பேச்சு வார்த்தையும் இல்லை. அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பது உள்ளிட்ட பல்வேறு முக்கிய விடயங்கள் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்படுவதாகவும் அவர் கூறியுள்ளார்.

19 ஆவது அரசியலமைப்பில் காணப்படும் நெருக்கடிகளைச் சீர் செய்வது இதன் நோக்கமாகும். அப்போதைய இந்தத் திருத்தத்தினால் நாட்டின் பாதுகாப்பு, ஜனநாயகம், பொருளாதாரம் என்பனவும் சீர்குலைந்ததாகவும் அவர் சுட்டிக் காட்டினார். (ஐ-2)

# தொலைபேசி இலக்கத்தை மாற்றம் செய்ய வாய்ப்பு

(கொழும்பு)

தொலைபேசி இலக்கத்தை மாற்றம் செய்யாமல் தொலைத் தொடர்பு சேவை வழங்குநரை மாற்றுவதற்கான வாய்ப்பை பாவனையாளர்களுக்கு வழங்கும் திட்டத்தை செயற்படுத்த முடிவு செய்துள்ளதாக இலங்கைத் தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பாவனையாளர்களின் தேவையின் அடிப்படையில் தொலைபேசியில் பயன்படுத்தும் சிம் அட்டையை மாற்றம் செய்யாமல் தொலைத் தொடர்பு சேவை வழங்குநரை மாற்றம் செய்வதற்காக இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கான நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இலங்கைத் தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவு ஒன்றைப் பதிவிட்டுள்ளது. (ஐ-2)

# போதைப்பொருள் கிடைக்காததால் மூன்று கைதிகள் தற்கொலை

(கொழும்பு)

அரசாங்கம் முன்னெடுத்துள்ள நடவடிக்கைகள் காரணமாக சிறைச்சாலைகளுக்கு போதைப் பொருள் கிடைப்பது தடுக்கப்பட்டுள்ள காரணத்தினால் கடந்த வாரத்தில் மூன்று கைதிகள் தற்கொலை செய்து கொண்டுள்ளதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனிய தெரிவித்துள்ளார்.

சிறைச்சாலைகளுக்கு போதைப்பொருள் கொண்டு வருவது தடுக்கப்பட்டுள்ள காரணத்தினால் சிறைக் கைதிகள் சிலர் மந்தமாக இருந்ததாகவும் கடந்த வாரத்தில் அவர்களுள் மூவர் தற்கொலை செய்து கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

விசேடமாக சிறைச்சாலைகளின் வெளியில் பாதுகாப்பிற்காக பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் முற்படுத்தப்பட்டு உள்ளதாகவும் அவர்கள் சிறைச்சாலையின் உள்நுழையும் அதிகாரிகள், சிறைக் கைதிகளை சோதனை செய்வதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ-2)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## நுண்ணறிவு

ஓர் அரசன்-சேவகன்-இரண்டு பேரும் குதிரையிலே வந்து கொண்டிருக்கின்றார்கள். ரொம்பத் தூரம் வந்து விட்டார்கள். அரசனுக்கு தாகம் வந்தது. தண்ணீர் எங்கே கிடைக்கும் என்று பார்த்தார்கள். பக்கத்திலே வீடுகள் எதுவும் இல்லை. கொஞ்சத் தூரத்திலே வேலியிலே ஒரு வெள்ளரிப்பழம் தெரிந்தது. அதோ ஒரு வெள்ளரிப்பழம் தெரிகிறது. அதையாவது பறித்து சாப்பிடலாம் என்றான் மன்னன். இதோ பறித்துக் கொண்டு வருகின்றேன் என்று புறப்பட்டான் சேவகன். அது வெள்ளரிப்பழம் இல்லை என்று ஒரு குரல். யார் அது? என்று அவர்கள் இரண்டு பேரும் திரும்பிப் பார்த்தார்கள். ஒரு பார்வையில்லாத யாசகன் பக்கத்திலே ஒரு மரத்தடியிலே உட்கார்ந்திருந்தான். அவன் தான் அப்படிக் குரல் கொடுத்தது. அரசன் பார்த்தான் இவனுக்கா பார்வையில்லை. இவனுக்கு அது எப்படி அது வெள்ளரிப்பழமா, இல்லையா? என்பது தெரியும். நீ போய் பறித்துக் கொண்டு வா... இவன் ஏதோ தெரியாமல் சொல்கிறான்.

சேவகன் போய் பறித்துக் கொண்டு வந்தான். மன்னன் அதை வாங்கிச் சாப்பிட்டான். வாயிலே வைக்க முடியவில்லை. ஒரே கசப்பு.

அவனுக்கு ஆச்சரியம்! யாசகனிடம் கேட்டான். அது எப்படி இது வெள்ளரிப் பழம் இல்லை என்பது உனக்குத் தெரிந்தது? என்றான்.

அவன் சொன்னான். ஐயா இது நாலு பேரு வந்து போகின்ற இடம். அது வெள்ளரிப் பழமா இருந்திருந்தால்... வருகின்றவர்கள் இவ்வளவு காலம் அதை விட்டு வைத்திருக்க மாட்டார்கள். அதனால் தான் அது வெள்ளரிப் பழமாக இருக்க முடியாது என்று நினைத்தேன் என்றான்.

அடுத்தபடியாக தண்ணீருக்கு என்ன செய்யலாம் என்று யோசித்தான் மன்னன்.

சேவகன் சொன்னான். அரசே... இங்கேயிருந்து நாலு பக்கமும் வீதி போகுது. நான் இப்படியே கிழக்கே போகின்ற இந்த பாதை வழியாக போய் பார்க்கின்றேன். அங்கே ஏதாவது நீர் நிலைகள் இருக்கும்... தண்ணீர் எடுத்து வருகின்றேன் என்று புறப்பட்டான். இப்பவும் அந்தப் பார்வையில்லாத யாசகன் சொன்னான்...கிழக்கே போனால் தண்ணீர்கிடைக்காது. தெற்கே போகின்ற பாதையிலே போனீர்கள் என்றால் தண்ணீர் கிடைக்கும் என்றான்.

அவன் சொன்னது மாதிரியே தெற்கே கொஞ்சத் தூரம் போனால்...ஒரு பெரிய குளம்.

இது எப்படித் தெரியும் உனக்கு? என்று கேட்டான் மன்னன். "ஐயா... எனக்குப் பாருங்கள் உடம்பிலே சட்டை இல்லை.. "தெற்கே இருந்து வருகின்ற காற்று குளிர்ச்சியாக இருந்தது. அதனாலே அங்கே தண்ணீர் இருக்கும் என்று நினைத்தேன் என்றான். அரசன் பார்த்தான் இப்படிப்பட்ட ஒரு ஆள் அரண்மனையிலே எப்பவும் இருந்தால் மிகவும் உபயோகப்படுவான் என்று நினைத்தான். அப்படியே அவனைத் தூக்கி குதிரையிலே வைத்து அரண்மனைக்குக் கொண்டு போய்விட்டான். தினமும் ஒரு பொட்டலம் சாம்பார் சாதம் அவனுக்கு கொடுக்கும்படியாக உத்தரவு போட்டு விட்டான் அரசன். அப்படி நடந்தது. அந்த அரண்மனைக்கு ஒரு நாள் ஒரு வைர வியாபாரி வந்தான். மன்னன் அவன் கொண்டு வந்த வைரத்தையெல்லாம் வாங்கி இவனிடம் கொடுத்து சோதிக்கச் சொன்னான். இவன் வாங்கி...கையாலே சோதித்துப் பார்த்து அதையெல்லாம் இரண்டு பிரிவாக பிரித்து வைத்து விட்டான்.

இடது பக்கம் இருக்கிறது எல்லாம் வைரம். வலது பக்கம் இருப்பது எல்லாம் கண்ணாடிக்கல் என்றான்.

எப்படி கண்டுபிடித்தாய்? என்று கேட்டான் மன்னன்.

"ஒவ்வொரு கல்லையும் எடுத்து கையிலே மூடி வைத்திருந்து பார்த்தேன். எங்கள் உடம்பு சூடு கல்லிலே ஏறிவிட்டால் அது வைரம். ஏறவே இல்லை என்றால் அது கண்ணாடி அப்படித்தான் அதைக் கண்டு பிடித்தேன் என்றான். அரசனுக்கு ஆச்சரியம்"

"சரி இன்றில் இருந்து அவனுக்கு தினமும் ஒரு பொட்டலம் தயிர் சாதமும் கொடுங்கள் என்று உத்தரவு போட்டான். அப்படியே நடந்தது. ஒரு நாள் அந்த மன்னன் அவனிடம் கேட்டான் என்னை எல்லோரும் யாசக ராஜா என்கின்றார்களே.. "என்றான். "அது உண்மை தான் நீ நிஜமாகவே அப்படித் தான் இருக்க வேண்டும் என்றான் இவன்.

" எப்படி சொல்கின்றாய்?" என்றான் மன்னன்.

" நீ நிஜமாகவே பரம்பரை ராஜ வம்சமாக இருந்திருந்தால் ஆரம்பத்திலே ..." அது வெள்ளரிப்பழம் இல்லை என்று சொன்ன பொழுது என் திறமையைப் பாராட்டி... உன் கழுத்திலே உள்ள மணிமாலையை கழற்றி பரிசாக கொடுத்திருப்பாய்.

அது மட்டுமில்லை. ஒரு பொட்டலம் சாம்பார் சாதம், ஒரு பொட்டலம் தயிர் சாதம்.. இப்படி எந்த ராஜாவும் கொடுக்க மாட்டார்கள்.. அப்படி என்றான்.

அதற்குப் பின்புதான் அந்த ராஜா உண்மையைச் சொன்னான். "ஐயா நான் பரம்பரை ராஜா இல்லை. உன்னை மாதிரி யாசகம் செய்துகொண்டிருந்தவன் தான். இந்த நாட்டு வழக்கப்படி அரண்மனை யானை என் கழுத்திலே மாலையை போட்டுவிட்டது. அதனாலே ராஜாவாகிவிட்டேன். அவ்வளவு தான்" என்றார்.

இந்தக் கதையை என்னுடைய நண்பர் ஒருத்தர் என்னிடம் சொன்னார். பார்வை இல்லை என்றாலும் நுண்ணறிவு எந்த அளவுக்குப் பார்வையாக பயன்படுத்துவதை இதிலேயிருந்து புரிந்து கொள்ள முடிகின்றது. குடும்பத்திலேயும் இந்த நுண்ணறிவு உபயோகப்படும். பெட்டியிலே 10 ரூபாய் பணம் இருந்தது. திடீர் என்று 5 ரூபாய் காணாமல் போய்விட்டது. மிதி 5 ரூபாய் மட்டும் இருந்தது. எங்கள் பையன் தான் எடுத்திருப்பார் என்றார் அம்மா. " நிச்சயமாக இது எங்கள் பையன் வேலையாக இருக்காது. அவன் எடுத்திருக்க மாட்டான்" என்றார் அப்பா. " எப்படி சொல்கின்றீர்கள்? " என்றார் அம்மா. " அவனா இருந்தால் பெட்டியிலே மிச்சம் வைத்திருக்கமாட்டான் " என்றார் அப்பா.

# பண்டாரவன்னியனின் 217 ஆவது நினைவு நாள்





## வவுனியாவில்

(நெளுக்குளம்)

வன்னி இராட்சியத்தின் இறுதி மன்னன் பண்டாரவன்னியனின் 217 ஆவது நினைவு நாள் நிகழ்வு வவுனியாவில் நேற்று நடைபெற்றது.

வவுனியா நகரசபை மற்றும் விழாக்குழுவின் ஏற்பாட்டில் நகரசபை தலைவர் இ.கௌதமன் தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றன.

இரு நிகழ்வுகளாக ஏற்பாடு செய்யப்பட்ட குறித்த நிகழ்வுகள் காலை 8.15 மணிக்கு வவுனியா மாவட்ட செயலக முன்றலில் அமைந்துள்ள பண்டாரவன்னியனின் நினைவுத்தூபிக்கு ஜனாதிபதி சட்டத்தரணி மு.சிற்றம்பலம் மலர்மாலை அணிவித்து மலர்தூவி அஞ்சலி செலுத்தினார்.

அதனைத்தொடர்ந்து நகர சபை உறுப்பினர்கள், பொது அமைப்பினரும்சிலைக்கு மாலை அணிவித்து, மலரஞ்சலியும் செலுத்தினர். நிகழ்வின் இறுதியில் தமிழருவி சிவகுமாரனால் பண்டாரவன்னியன் தொடர்பான நினைவுப்பேருரையும் நிகழ்த்தப்பட்டிருந்து. ஏனைய நிகழ்வுகள் காலை 9.30 மணியளவில் வவுனியா நகரசபை மண்டபத்தில் இடம்பெற்றது.

மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமான நிகழ்வில் தலைமை உரையைத்தொடர்ந்து கலை கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றிருந்தன.

தொடர்ந்து பண்டாரவன்னியன் தொடர்பான வரலாற்றுரையை மூத்த ஊடகவியலாளர் அருணா செல்லத்துரை நிகழ்த்தினார்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சட்டத்தரணியும் முன்னாள் வவுனியா மாவட்ட சபைத் தலைவருமான மு.சிற்றம்பலம், பாராளுமன்ற உறுப்பினர் வினோநோதாரதலிங்கம், வவுனியா மாவட்டச் செயலாளர் சமன் பந்துலசேன, மேலதிக செயலர் தி.திரேஸ்குமார், வவுனியா வளாக முதல்வர் ரி.மங்களேஸ்வரன், உள்ளூராட்சிமன்றத் தலைவர்கள், உறுப்பினர்கள், சமூக ஆர்வலர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர். (4-5-8-299)




பண்டாரவன்னியனின் 217 ஆவது நினைவு தின நிகழ்வு நேற்று செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் மணிக்கூட்டுக் கோபுரத்திற்கு அருகில் உள்ள உருவச் சிலையடியில் நடைபெற்றது. இந்நிகழ்வில் முன்னாள் வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.




பண்டாரவன்னியனின் 217 ஆவது நினைவு நிகழ்வு நேற்று முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தலைமையில் நடைபெற்றது.

## 13 பேர் கைது

(கொழும்பு)

கொழும்பு கோட்டை அதியுயர் பாதுகாப்பு வலய கடற்பகுதிக்குள் அனுமதியின்றி சென்ற வெளிநாட்டவர் உட்பட 13 பேரை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

இவர்கள் நேற்று முந்தினம் மாலை இரண்டு படகுகளில் பயணித்துக்கொண்டிருந்த போதே கைது செய்யப்பட்டுள்ளனர் எனக் கடற்படைப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்ட அவர்கள் எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரின் அலுவலகம் தெரிவித்துள்ளது. (ஜ-4)

# எம்.சி.சி. உடன்படிக்கையை ஒழிக்க பூரண ஒத்துழைப்பை வழங்குவோம்

## சஜித் திட்டவட்டம்

(கொழும்பு)

**எம்.சி.சி.உடன்படிக்கையை இல்லாது செய்ய அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டால், அதற்கு பூரண ஒத்துழைப்பினை வழங்கத் தயார் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நேற்று முந்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய அவர், மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பயன்படுத்தி இந்த உடன்படிக்கையை கிழித்தெறிய வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“இந்த அரசாங்கம் ஜனாதிபதித் தேர்தலின் போதும், பொதுத் தேர்தலின் போதும் வெற்றி வாய்ப்பைப் பெற்றுக்கொள்வதற்காக மக்களுக்கு பல்வேறு வாக்குறுதிகளை வழங்கியது.

வேலைத்திட்டங்களை முன்வைத்தது. இப்போது இதனை நிறைவேற்றக்கூடிய காலம் வந்துவிட்டது.

மக்களுக்கு நிவாரணம்வழங்கக்கூடிய வேலைத்திட்டங்களையும் அபிவிருத்திகளையும் அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும். இவ்வாறான செயற்பாடுகளுக்கு நாம் எமது முழுமையான ஒத்துழைப்பினை வழங்குவோம்.

அதேநேரம், நாட்டுக்கு எதிரான எந்தவொரு செயற்பாட்டையும் நாம் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்பதையும் இவ்வேளையில் கூறிக்கொள்கிறோம்.

எம்.சி.சி.உடன்படிக்கை தொடர்பாக அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன என்று இன்று பலரும் கேட்கிறார்கள். தேர்தல் காலங்களின்போது இவர்கள் இந்த உடன்படிக்கை தொடர்பாக ஒரு நல்ல விடயத்தைக் கூட கூறவில்லை.



எனவே, முதல் வேலையாக பாராளுமன்றின் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பயன்படுத்தி இந்த உடன்படிக்கையை கிழித்தெறிய வேண்டும் என நாம் அரசாங்கத்திடம் கேட்டுக்கொள்கிறோம்.

இதற்கு எதிரான தீர்மானத்தை அரசாங்கம் பாராளுமன்றத்திற்கு கொண்டு வந்தால், ஐக்கிய மக்கள் சக்தியாகிய நாமும் அரசாங்கத்துக்கு முழுமையான ஒத்துழைப்பினை வழங்குவோம்.

அடுத்தவாரம் இந்த உடன்படிக்கைக்கு எதிரான யோசனையைக் கொண்டு வந்தால் கூட நாம் தயாராகவே இருக்கிறோம்” என அவர் தெரிவித்தார். (ஜ-2)



# புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்கள் ஓர் உலகளாவிய ஆய்வு

52

## கலாநிதி முருகர் குணசிங்கம்

ஒவ்வொரு தமிழ் பாடசாலையிலும் தமிழ் மொழிக் கழகம் ஒன்று இயங்குகிறது. **(Tamil Language Society)** பேச்சுப் போட்டி, ஆடல், பாடல் போட்டிகளை ஆண்டுதோறும் நடத்தி வருகின்றன.

தமிழ் மொழியிலேயே பள்ளி இறுதித் தேர்வை எழுதி பல்கலைக்கழகம் சென்று படிக்கும் வாய்ப்பையும் பெறுகின்றனர்.

தமிழ் மொழி அல்லாத அரச பாடசாலைகளில் பயிலும் தமிழ் மாணவர்கள் பல்கலைக்கழகப் புகுமுகத் தேர்வுக்கும் தமிழ் மொழியைத் தெரிவு செய்யலாம்.

மலேசியாவின் ஒன்பது மாநிலங்களிலும் ஒவ்வொரு அரச அமைப்பாளர்களும் ஒன்பது துணை இயக்குநர்களும் இருக்கின்றனர்.

அவர்கள் பாடசாலைகளையும் தமிழ் மொழிப் போதனைகளையும் கவனித்துக் கொள்கின்றனர். வெள்ளிக்கிழமைகளில் அரைமணி நேரம் மட்டும் சமய வகுப்புகள் நடைபெறுகின்றன.

இந்து - சைவ சமயம் ஒரு பாடமாகப் போதிக்கப்படுவது இல்லை. நவராத்திரி, தைப்பொங்கல் போன்ற விழாக்கள் வழமையாக இடம்பெறும்.

அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, ஐரோப்பிய நாடுகள், வடஅமெரிக்கா ஆகிய நாடுகளில் சுமார் 700 இற்கும் மேற்பட்ட பதிவு செய்யப்பட்ட தமிழ்ப் பாடசாலைகள் கடந்த முப்பது ஆண்டுகளாக நடைபெற்று வருகின்றன.

தமிழ்நாடு, மலேசியா தவிர்ந்த ஏனைய நாடுகளில் தமிழ் மொழியைப் பேணிப் பாதுகாப்பதன் பொருட்டு புலம்பெயர்ந்து வாழும் ஈழத்தமிழர்களின் பங்களிப்பினை நோக்குவோம்.

அவுஸ்திரேலியாவில் 25 இற்கும் மேற்பட்ட பாடசாலைகளும் நியூசிலாந்தில் இரு பாடசாலைகளும் ஜேர்மனியில் 140, பிரான்சில் 67, பிரித்தானியா 70, நோர்வே 12, டென்மார்க் 18, இத்தாலி 7, நெதர்லாந்து 25, சுவீடன் 1, கனடா ஏறக்குறைய 400 - 450 தமிழ் மொழிக் கல்வி நிறுவனாங்கள் ஆகியவையும் இயங்கி வருகின்றன.

சுவிட்சர்லாந்தில் பேர்ன் நகரத்தில் 6 தமிழ்ப் பாடசாலைகளும் அந்த நாடு முழுவதுமாக 46 பாடசாலைகளுக்கும் மேல் இயங்கி வருகின்றன.

அமெரிக்காவில் உள்ள முக்கிய நகரங்களில் சிறுசிறு தமிழ் பாடசாலைகள் தமிழ் நாட்டுத் தமிழர்களால் நடத்தப்பட்டு வருகின்றன.


ஈழத்தமிழர்கள் கூடுதலாக வாழும் நியூயோர்க்கில் ஒரு தமிழ்ப் பாடசாலை ஞாயிற்றுக்கிழமையில் நடைபெற்று வருகின்றது.

இவைகளைத் தவிர பதிவு செய்யப்படாத தமிழ்க் கல்வி நிலையங்களும் தனியார் தமிழ்க் கல்வி நிலையங்களும் மேற்கண்ட அனைத்து நாடுகளிலுமே நடைபெற்று வருகின்றன.

ஆனால் அவற்றின் எண்ணிக்கையை அறிய முடியவில்லை. மேற்குறிப்பிடப்பட்ட பதிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் சுமார் 40,000 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர்.

அவுஸ்திரேலியாவில் 2000, ஜேர்மனியில் 6000, பிரான்சில் 5000, பிரித்தானியாவில் 5500, நோர்வேயில் 2000, டென்மார்க்கில் 1700, இத்தாலியில் 300, நெதர்லாந்தில் 800, சுவீடன் 80, நியூசிலாந்தில் 150, சுவிட்சர்லாந்தில் உள்ள பேர்ன் வள்ளுவன் பாடசாலையில் சுமார் 200 மாணவர்கள் தமிழ் மொழி கற்று வருகின்றனர்.

மேலும் சுவிட்சர்லாந்து முழுவதுமாக 4600 மாணவர்கள் தமிழ் மொழி கற்று வருகின்றனர். அமெரிக்கா 100, கனடாவில் சுமார் 17,000 என்ற எண்ணிக்கையில் தமிழ் மாணவர்கள் தமிழ் மொழியைக் கற்று வருகின்றனர்.



ஆனால் இத்தகைய புள்ளிவிபரங்கள் காலத்திற்குக் காலம் கூடியும் குறைந்தும் காணப்படுவது தவிர்க்க முடியாததாக உள்ளது.

சகல தமிழ் மொழிக் கல்வி நிலையங்களும் தமிழ் மொழியை ஒரு பொதுவான பாடத்திட்டத்தின் கீழ் உரிய முறையில் போதித்து வருவதோடு தமிழர்களின் கலை, பண்பாடு, வரலாறு போன்ற துறைகளையும் கற்பித்து வருகின்றனர். சில நாடுகளில் பாடசாலை நிர்வாகமே பாடத்திட்டங்களைத் தயாரித்துக் கொள்கின்றன.

மேற்கூறப்பட்ட தமிழ் மொழிப் பாடசாலைகளில் குறிப்பாக அவுஸ்திரேலியாவில் அதிகமாக ஈழத்தமிழர்கள் வாழும் நியூசவுத் வேல்ஸ் மாநிலத்தில் உள்ள தமிழ் மொழிப் பாடசாலைகள் பற்றிய நிலைமைகளையும் அப்பாடசாலைகள் தமிழ் மொழி வளர்ச்சிக்கு ஆற்றிவரும் பங்கும் மாணவர்கள் தமிழ் கற்பதில் எத்தகைய ஆர்வத்துடன் ஈடுபடுகின்றனர் என்பது பற்றியும் சற்று விரிவாக நோக்கும்போது ஏனைய அவுஸ்திரேலியத் தமிழ்ப் பாடசாலைகள் பற்றியும் ஏனைய ஆங்கில மொழி நடைமுறையில் உள்ள நாடுகளில் இயங்கும் தமிழ்ப் பாடசாலைகள் பற்றியும் அவர்கள் செயற்பாடுகள், பங்களிப்புகள் மாணவர்களின் தமிழ் மொழி ஆர்வம் என்பனவற்றையும் ஒப்பிட்டுத் தெளிவாக விளங்கிக் கொள்ள முடியும்.

நியூசவுத் வேல்ஸ் தமிழ் பாடசாலைகளின் கூட்டமைப்பு நிர்வாகத்தின் கீழ் ஆறு தமிழ் மொழிப் பாடசாலைகள் இயங்கி வருகின்றன.

இவை தவிர மேலும் ஏழு பாடசாலைகளையும் ஈழத்தமிழர்கள் நடத்தி வருகின்றனர். சிட்னி மாநகரில் ஈழத்தமிழர்கள் கூடுதலாக வாழ்வதால் அங்குதான் அனைத்துப் பாடசாலைகளும் இயங்கி வருகின்றன.

அப்பாடசாலைகளில் சுமார் 200 ஆசிரியர்கள் பணி ஆற்றுகின்றனர். சுமார் 1750 தமிழ் மாணவர்கள் தமிழ் மொழி, தமிழ்க் கலை, பண்பாடு, வரலாறு என்பனவற்றைப் பயின்று வருகின்றனர்.

ஆரம்ப வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்புவரை தமிழ் மொழி கற்பிக்கப்படுகின்றது.

அதற்கான பாடத்திட்டங்களை நிர்வாகத்தினரே உரிய முறையில் அந்நியச் சூழ்நிலைக்கு ஏற்ப எழுதி அச்சிட்டு மாணவர்களைப் பயிற்றுவிக்கின்றனர். அத்துடன் ஆண்டுதோறும் தேர்வுகள், பேச்சுப் போட்டிகளை நடத்தி மாணவர்களை ஊக்கப்படுத்தி வருகின்றனர்.

சிறந்த புள்ளிகளை எடுக்கும் மாணவர்களுக்குப் புலமைப் பரிசில்களும் வழங்கப்படுகின்றன. ஆண்டுதோறும் கலை விழா நிகழ்ச்சிகள் மிகவும் ஆர்வத்துடனும் விமரிசையாகவும் கொண்டாடப்படுகின்றன.

அந்த நிகழ்ச்சிகளில் மாணவர்கள் பெருமளவில் பங்கெடுத்து வருகின்றனர். அத்தோடு அங்கு பயிற்றுவிக்கும் ஆசிரியர்களுக்கும் பட்டறைகள், கருத்தரங்குகள் மூலம் அவ்வப்போது கற்பிக்கும் முறைகள் பற்றித் தெளிவுபடுத்தி வருகின்றனர்.

பாடசாலைகள் அநேகமாக வார இறுதி நாட்களில் 2 மணி தொடக்கம் 4 மணி வரை நடைபெறுகின்றன. ஆசிரியர்கள் அனைவரும் இலவசமாகவே தமது கல்விச் சேவையினை வழங்கி வருகின்றனர்.

அத்துடன் சிறிய அளவில் அரச நன்கொடைகளையும் அரச பாடசாலைகளை வார இறுதி நாட்களில் பயன்படுத்தக்கூடிய வசதிகளையும் அந்நாட்டு அரசு வழங்கி இருக்கின்றது.

பல்கலைக்கழகப் புகுமுகத் தேர்விற்குத் தமிழையும் ஒரு பாடமாக அவுஸ்திரேலிய அரசு ஏற்றுக்கொண்டு இருக்கின்றது. அதன் பயனாகப் பல தமிழ் மாணவர்கள் ஆர்வத்துடன் கற்று வருகின்றனர்.

மேற்கண்ட தமிழ்ப் பாடசாலைகளைத் தவிர "தமிழாலயம்" என்ற நிறுவனமும் ஒரு தமிழ்க் கல்வி நிலையத்தை நடத்தி வருகிறது.

அங்கு சுமார் 500 மாணவர்கள் பயின்று வருகின்றனர். மேற்கூறப்பட்ட தமிழ் மொழிப் பாடசாலைகளில் இடம்பெறுவது போலவே ஏனைய நிகழ்வுகள் அனைத்தும் இடம்பெறுகின்றன.

நியூசவுத் வேல்ஸ் மாநிலத்தைப் போலவே ஏனைய அவுஸ்திரேலிய மாநிலங்களிலும் இயங்கி வரும் தமிழ் மொழிப் பாடசாலைகளின் அமைப்பும் நடைமுறையும் கற்பித்தல் முறையும் பொதுவாகக் காணப்படுகின்றது.

மேற்கு ஐரோப்பிய நாடுகளில் ஆங்கில மொழி நடைமுறையில் இல்லாத நாடான ஜேர்மனி நாட்டில் உள்ளது போலவே தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழும் ஏனைய ஆங்கில மொழி நடைமுறையில் இல்லாத மேற்கு ஐரோப்பிய நாடுகளிலும் ஆங்கில மொழி நடைமுறையில் உள்ள பிரித்தானியா, வட அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளிலும் தமிழ்ப் பாடசாலைகள் இயங்கி வருகின்றன.

பொதுவாக மேற்கண்ட நாடுகளில் தமிழ் மாணவர்களுக்கான பாடத்திட்டங்கள் அதன் தலைமை நிர்வாகத்தினால் தயாரிக்கப்படுகின்றன. தமிழ் மொழியைப் பயிற்றுவிக்கும் ஆசிரியர்களுக்கான பயிற்சிகளும் பட்டறைகளும் நடைபெற்று ஒழுங்கான கட்டமைப்பின் கீழ் இயங்கி வருகின்றன.

ஜேர்மனியில் தமிழாலயம் என்ற பதிவு செய்யப்பட்ட கல்வி நிறுவனத்தின் கீழ் 1990களில் முதல் தமிழ் மொழிப் பாடசாலை பொண் **(Bonn)** நகரத்தில் தொடங்கப்பட்டு தற்பொழுது சுமார் 130 தமிழ் மொழிப் பாடசாலைகள் ஈழத்தமிழர்கள் செறிந்து வாழும் நகரங்களில் இயங்கி வருகின்றன.

சுமார் 6000 இற்கு அதிகமான மாணவர்கள் தமிழ் கற்று வருகின்றனர். சுமார் 970 ஆசிரியர்கள் இலவசமாகப் பணியாற்றி வருகின்றனர். இப்பாடசாலைகளை ஜேர்மனி தமிழ் கல்விக் கழகம் நிர்வகித்து வருகின்றது.

(தொடரும்)


# பாதாளக்குழு செயற்பாடுகள்; முடிவுக்கு வரும்வரை ஓயப்போவதில்லை

## கமால் குணரத்ன

(கொழும்பு)

**பாதாளக்குழு செயற்பாடுகளை நிறைவுக்குக் கொண்டு வரும் செயற்பாட்டிலிருந்து பின்வாங்கப் போவதில்லை எனப் பாதுகாப்புச் செயலாளர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன தெரிவித்துள்ளார்.**

தம்புள்ளையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இராணுவ நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இதற்கமைய போதைப் பொருள் கடத்தல், கப்பம் கோருதல் மற்றும் திட்டமிட்ட குற்றச் செயல்கள் அற்ற நாடாக நாட்டை



மாற்றும் திட்டத்திலிருந்து பின்னிற்கப் போவதில்லை என அவர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன் வெலிக்கடைச் சிறைச்சாலையில் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளமை குறித்தும் பாதுகாப்புச் செயலாளர் தெரிவித்தார். (ஐ-2)

# நான் தலைமறைவாகவுமில்லை எந்தப் பிக்குவையும் கடத்தவுமில்லை

## அத்துரலிய ரத்ன தேரர் விளக்கம்



(கொழும்பு)

நான்தலைமறைவாகவில்லை எனவும் எந்த பிக்குவையும் மறைத்து வைத்திருக்கவில்லை எனவும் அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

எங்கள் மக்கள் சக்தி கட்சியின் பொதுச் செயலாளர் வெதினிகம விமலதிஸ்ஸ தேரரை கடத்திச் சென்று தடுத்து வைத்துள்ளதாக தனக்கு எதிராக் பொலிஸில் செய்யப்பட்டுள்ள முறைப்பாடு தொடர்பான விசாரணைகளில் கலந்துகொள்ள உள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

அத்துரலிய ரத்ன தேரர், வெதினிகம விமலதிஸ்ஸ தேரரைக் கடத்திச் சென்று தடுத்து வைத்துள்ளதாக விமலதிஸ்ஸ தேரரின் ஒருங்கிணைப்புச் செயலாளர் ஹுணுப்பிட்டியே சந்திரசிறி தேரர், கொழும்பு மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இது தொடர்பாக நடத்தப்படும் விசாரணைகளுக்காக கொழும்பு மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரின் அலுவலகத்திற்கு வருமாறு அத்துரலிய ரத்ன தேரருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

அவர் வரவில்லை என்பதால், ரத்ன தேரர் தங்கியிருக்கும் ராஜகிரியவில் உள்ள சதாம் செவன பௌத்த மடத்திற்கு அதிகாரிகள் சென்ற போது, தேரர் அங்கு இருக்கவில்லை எனக் கூறப்பட்டது. (ஐ-4)

# விசேட செயலமர்வு நேற்று ஆரம்பம்

(கொழும்பு)

ஒன்பதாவது பாராளுமன்றத்தின் நடவடிக்கைகள் தொடர்பில் தெளிவுபடுத்தும் விசேட செயலமர்வு நேற்று ஆரம்பமாகியது.

இதற்கமைய இந்தச் செயலமர்வு நேற்றும் இன்றும் பாராளுமன்றத்தின் முதலாவது குழு அறையில் இடம்பெறுகிறது.

இதேவேளை குறித்த பயிற்சி நெறியில் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொள்ள வேண்டுமென பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தஸநாயக்கவினால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ஐ-6)

# அலுமினிய இறக்குமதிக்குத் தடை

(கொழும்பு)

பிளாஸ்டிக் மற்றும் அலுமினியப் பொருட்களின் இறக்குமதி முற்றிலும் நிறுத்தப்படும் என்று சுற்றுச்சூழல் அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார். சுற்றுச்சூழல் அமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அமைச்சர் மகிந்த அமரவீர இதனைத் தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவிக்கையில்,

சுற்றுச்சூழலுக்குத் தீங்கு விளைவிக்கும் எந்தவொரு பொருளையும் இறக்குமதி செய்யத் தடை விதிக்கப்படும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ-4)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2096

**சுபாஸ்**



ஒவ்வொரு நாளின் தொடக்கத்திலும் ஒரு எதிர்பார்ப்பு! ஆனால் ஒவ்வொரு நாளின் முடிவிலும் ஒரு அனுபவம் இதுதான் வாழ்க்கை

**மணி**



ஒருவரிடம் பலமணி நேரம் பேசுவது நட்பல்ல. அவரைப் பற்றி மற்றவரிடம் தவறாகப் பேசாமல் இருப்பதே நட்பு...!

**கஜன்**



கண்ணீர் சிந்தும்போது துடைக்க யாரும் வருவதில்லை. கவலை கொள்ளும்போது சிரிக்க எவரும் வருவதில்லை. அறியாமல் ஒரு தவறு செய்துபார் உன்னை விமர்சிக்க இந்த உலகமே கூடிவரும்

**சிவானி**




ஓடிவந்து மூச்சு வாங்கும் போதுதான் தெரியும் தண்ணீரின் அருமை... அதுபோலத்தான் கடந்து வந்த பிறகுதான் தெரியும் காலத்தின் அருமை

**ராஜினி**



மனிதர்கள் புத்தி இரண்டு விதம் தேவைனா தேன்மாதிரி பேசுவாங்க இல்லைனா தேள்மாதிரி கொட்டிப் பேசுவாங்க

**கம்சா**



மரணத்தைக் காட்டிலும் கொடுமையானது மனக் கவலை... மரணம் ஒருமுறைதான் கொல்லும்... மனக்கவலை நொடிக்கு நொடி கொல்லும்

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## சாமை



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

**சாமை**

Botanical Name: Panicum miliare
Family - Gramineae
Botanical Name - little millet
Family - meneri

ஓராண்டு வாழும் புல் இனத்தைச் சார்ந்தது. நீண்ட தண்டு. 30-60 செ.மீ. உயரமானது. இலைக் காம்புகளுக்கிடையேயான இடைவெளி 5-10 செ.மீ. இலைகள் 30-45 செ.மீ. நீளமானவை. 0.4-0.8 செ.மீ.அகலமுடையது. மெல்லிய நீண்ட வேலுருவான இலைகள். இருபாலான பூக்கள்.

வெப்பமான பிரதேசங்களில் கூடுதலாக பயிரிடப்படுகின்றது.

உயர் போசாக்குடையது. இதில் நார்த்தன்மை அதிகமாக காணப்படும். உடம்பை கொலஸ்ரோல் இரத்தத்தில் அதிகரிக்க விடாது. பெருங்குடலில் புற்றுநோய் வராமல் தடுக்கக் கூடியது.

சாமையில் பொட்டாசியம் அதிகளவில் காணப்படுவதால் இரத்தக் குழாய்களை விரிவடையச் செய்து அதி உயர்குருதி அமுக்கம் வராமல் தடுக்கக்கூடியது.

gluten free அதிகமாக இருப்பதுடன் low glycaemic indexe ஆக இருப்பதால் நீரிழிவு நோயாளிகள் பயன்படுத்தலாம். இரத்தத்தில் சீனியின் அளவை சீராகப் பேணக்கூடியது. அத்துடன் மக்னீசியமும் காணப்படுவதால் இரத்தத்தில் சீனியின் அளவை காணப்படும். பீற்றா கரோட்டினொயிட் காணப்படுவதால் நோய் எதிர்ப்பாற்றலை அதிகரித்து கண்பார்வையையும் சீராக்கும்.

தொடர்ந்து சாப்பிட்டு வர உடல் நிறை குறையும். எதிர் ஒட்சியேற்ற தன்மை இருப்பதால் புற்றுநோய் வராமல் தடுக்கக்கூடியது. அதிலும் மார்பகப்புற்றுநோய் வராமலும் தடுக்கக் கூடியது.





காரப் பிட்டு


இனிப்பு பிட்டு

சாமையில் புரதம், கல்சியம், இரும்புச்சத்து, பொட்டாசியம், மக்னீசியம், நார்ச்சத்து பீற்றா-கரோட்டினொயிட்டு என்பன அதிகளவில் காணப்படும்.

செரரோனின் காணப்படுவதால் மன அழுத்தத்தை குறைத்து உடலை ஆரோக்கியமாக வைத்திருக்கக்கூடியது. இதனால் தான் சித்த மருத்துவத்தில் சாமை சாத்வீக உணவாக கருதப்பட்டு அத்தியாவசியமான உணவுக்கூறாக கொள்ளப்படுகின்றது.

சாமை சாதத்தினால் வாதநோய்கள், சளி, கப நோய்கள், சோபை (வீக்கம்) இவை நீங்கும்.

இதன் கஞ்சியானது வாத, பித்த, கப தோசங்களைப் போக்கும்.

“சாமைச் சோறுண்டால் தனிவாதங் கோழை கபந் தீமைக்கா தாரமாய்ச் சேரசோபை போமெத்தப் பித்தமொடு தாதுவுமாம் பேசமதன் கஞ்சிக்கு முத் தோடம் போகு மொழி ”

சாமையரிசியை கஞ்சியாகச் செய்து சாப்பிட கழிச்சலை நிறுத்தும். உடலை பலப்படுத்தும். இதை புற்கையாகச் செய்து விக்கங்களுக்கும் பூசுவ துண்டு.

சாமையானது உள்ளழலாற்றி (Domulcent) மருத்துவச் செய்கையுடையது. இதனால் நீர்வேட்கை, சுரம் (காய்ச்சல்), மேகரோகம், வாதநோய்கள் நீங்கும். உடலுக்கு அழகைக் கொடுக்கும்.

உடலிலுறு தாகசுரம் ஓடும் மேகம் போம் அடலினுறு வாதம் அகலும்-கடலிலுறை ஆமையனையபதத் தன்னமே! மேனியிடுஞ் சாமையரிசிக் குத்தான்

சாமையரிசி தட்பமான அல்லது குளிர்ச்சியான வீரியத்தையுடையது.




சாமை

**வாத ரோகிகளுக்கு சாமையரிசிக் கஞ்சி**

சாமையரிசி -50 கிராம்
சரக்குத் தூள் -2 தேக்கரண்டி
தேங்காய்ப்பூ -1 மேசைக்கரண்டி
வாத நிவாரணி இலை- 5 நெட்டு
உப்பு -தேவையான அளவு
உள்ளி -5 பல்
சிறிய வெங்காயம் -10
பச்சை மிளகாய் -2

முதலில் சாமையரிசியை கழுவி கல், மண், உமி ஆகியவற்றை நீக்கவும்.

நீரைக் கொதிக்க வைத்து சாமையரிசியை சேர்த்து வேகவிடவும்.

சரக்குத் தூள், தேங்காய்ப் பூ முதலியவற்றை அம்மியில் வைத்து நன்றாக அரைத்து எடுத்த பின் உள்ளி, வெங்காயம் சேர்த்து அரைக்கவும்.

வாதநிவாரணி இலைகளை வெந்து வரும் போது சேர்க்கவும். இறக்கி அளவான சூட்டில் அருந்த வாதநோய்கள் கட்டுப்படும்.

**சாமை மா பிட்டு**

1 சுண்டு வறுத்த அரிசி மா
1/2 சுண்டு வறுத்த சாமையரிசிமா
1/4 சுண்டு தேங்காய்த்துருவல்
1/2 பிடி முருங்கைக் கீரை
தேவையான அளவு உப்பு
1 கீற்று கறிவேப்பிலை
6 பச்சை மிளகாய்
1 பெரிய வெங்காயம்

அரிசிமா, சாமையரிசி முதலானவைகளை அரித்து எடுத்து கீரை, பச்சை மிளகாய், வெங்காயம் முதலானவைகளை கழுவி துப்புரவு செய்து ஒரு பெரிய பாத்திரத்தில் சாமையரிசிமா, அரிசிமா, குறுகலாக அரிந்த முருங்கைக்கீரை, தேங்காய்த் துருவல், பச்சை மிளகாய், வெங்காயம், கறிவேப்பிலை, அளவான உப்பு சேர்த்த வெந்நீர் முதலானவைகளை சேர்த்து குழைத்துக் கொள்ள வேண்டும். உதிர்த்திய மாவை நீத்துப் பெட்டி அல்லது ஆவிச்சட்டியில் வேகவைத்து எடுத்து சமவிகித உணவாகவே உட்கொள்ளலாம். கர்ப்பிணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார், வளரிளம் பிள்ளைகள், நலிவுற்றோருக்கு சிறந்த ஆரோக்கிய உணவாகவும் அமையும்.

**சாமைக்களி**

சாமை மா - 50 கிராம்
கடலை மா - 20 கிராம்
சீரகம் - 1 தேக்கரண்டி
சர்க்கரை - 30 கிராம்
தேங்காய்த்துருவல்- 1/2 சுண்டு
ஏலக்காய் - 6

சாமையரிசிமாவையும், கடலைமாவையும் ஒரு பாத்திரத்தில் இட்டு அளவாக நீர் சேர்த்து குழைத்து, தேங்காய்த் துருவலுடன் சிறிது நீர் சேர்த்து பிழிந்து எடுத்து சாமையரிசிமா, கடலை மா, தேங்காய்ப்பால், ஏலப்பொடி முதலான அனைத்தையும் நன்கு சேர்ந்து பிசைந்து அளவாக நீர் சேர்த்து நன்கு சேர்த்த இச் சேர்வையை நன்கு மூடி விடவும். இடையில் அவற்றை நன்கு கிளறிக் கொள்ள வேண்டும். நன்கு வெந்ததும் களி நிலையில் இறக்கி உண்ணலாம். களியில் சுவையும் மேம்படும். அதன் போசணை நிலையும் உயர்வடையும். உடலுக்கு குளிர்ச்சியையும் தரக்கூடியதாகும்.


சாமையரிசி மாவில் அடைதயாரித்தும் பயன்படுத்தலாம்.

நார்க்கூறுகள் அடங்கிய மூடியுள்ள சாமையரிசி போன்றவற்றை பயன்படுத்தும் போது உள்ளெடுக்கும் சக்தியை கட்டுப்படுத்துகிறது. காபோவைதரேற்றுக்களை உறிஞ்சுவதையும், இன்சுலின் சுரத்தலையும் கட்டுப்படுத்துகிறது. கொலஸ்ரோலில் உள்ள நீர்ப்பாயத்தின் நிலையைக் குறைக்கும்.

முக்கியமாக பெருங்குடலின் செயற்பாட்டை சீராக பேண உதவும்.

மலம் கழிப்பது இலகுவாகின்றது. சாமை, தினை, வரகு, கம்பு, குரக்கன் போன்றவற்றை எமது முன்னோர்கள் உணவு முறைகளில் சேர்த்துக் கொண்டமையால் மிகவும் எளிதாக குறுகிய நேரத்தில் மலம் வெளியேறும். மலச்சிக்கல் எக்கட்டத்திலும் எழ மாட்டாது. பெருங்குடலிலுள்ள பித்தக் குவியல்கள் சிறிய அளவிலேயே Carcinogens கொண்டுள்ளதால் புற்றுநோய் ஏற்படுத்தும் பொருட்கள் மிகச் செறிவில்லாமல் காணப்படும் நோயை ஏற்படுத்தும் பொருட்கள் பெருங்குடலில் சிறிதளவில் காணப்பட்டாலும் தங்குதடையின்றி வெளியேறுவதாக அமைந்துவிடும். ஆகவே ஆரோக்கியமான வாழ்வை முன்னோர்கள் அவர்களது உணவுப் பழக்க வழக்கங்களாலேயே வாழ்ந்துள்ளார்கள்.

# 2600 இடங்கள் புதிதாக அடையாளம்



(கொழும்பு)

நாட்டில் சுற்றுலாத் துறைக்காக இதுவரையில் பயன்படுத்தாததும் சுற்றுலா ஈர்ப்பை பெறக் கூடிய 2600 இடங்கள் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

அதனை விரைவில் அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

கட்டுநாயக்க விமான நிலையத்தை திறந்து சுற்றுலா பயணிகளை நாட்டிற்கு அழைத்து வரும் சந்தர்ப்பத்தில் இந்த 2600 இடங்களை சுற்றுலா பயணிகளுக்கு அபிவிருத்தி செய்யப்படவுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

கட்டுநாயக்க விமான நிலையத்தின் ஊடாக ஒரே நேரத்தில் அதிக சுற்றுலா பயணிகளை அழைத்து வரக்கூடிய வகையில் அதன் அபிவிருத்தி நடவடிக்கைகள் விரைவு படுத்தப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார். (ஜ-2)



# ஆன்மீகம்

## மனம் மாற்றிய மந்திரக் குவளை!



'சாதித்துக் காட்ட வேண்டும்' என்ற தணியாத வேகமும், தளராத உழைப்பும், கல்வியும், செல்வமும் வாய்க்கப் பெற்றிருந்த ஒருவரால் சமுதாயத்தில் உயர்ந்த மனிதராக உருவாக முடியவில்லை. அவருடைய நிறுவனத்தில் ஊழியர்கள் எவருமே பொருந்தி இருந்து பணிபுரியவில்லை. அவருடைய குடும்பத்திலும் அமைதி நிலவவில்லை.

காரணம் என்னவாக இருக்கும் என்று யூகித்து விட்டீர்களா? செல்வம், கல்வி, உழைப்பு அனைத்தும் இருந்தும் அவரிடம் அன்பு, நிதானம், அரவணைக்கும் தன்மை மூன்றும் அடியோடு இல்லை. எடுத்ததற்கெல்லாம் எரிந்து விழுவதும், முன் கோபத்தால் கடுஞ்சொல் கூறுவதும், திட்டித் தீர்ப்பதுமாக நிர்வாகி அமைந்தால் நிறுவனம் புகழ்வனமாக எப்படிப் பூத்துப் பொலியும்? வசதி வாய்ப்புகள் மட்டுமே ஒருவரை வாழ்வாங்கு வாழும் நிலையில் வைத்துவிடாது. பண்புகள் இருந்தால் தான் ஒருவர் பளிச்சிட முடியும்.

"ஆசை கோபம் களவு கொள்பவன்
பேசத் தெரிந்த மிருகம்
அன்பு நன்றி கருணை கொண்டவன்
மனித வடிவில் தெய்வம்"

- என்று கல்வெட்டாக சொல்வெட்டைத் தந்துள்ளாரே கவியரசர் கண்ணதாசன். இவ்வுலகம் நிலை பெற்றிருப்பதற்குக் காரணமே பண்புடையவர்கள் பலர் வாழ்ந்ததாலும், வாழ்ந்து கொண்டிருப்பதாலும்தான் என்கிறார் திருவள்ளுவர்.

'பண்புடையார் பட்டுண்டு உலகம் அது இன்றேல்
மண்புக்கு மாய்வது மண்'

மேலும் சொல்கின்றார் வள்ளுவர்:

'அரம் போலும் கூர்மைய
ரேனும் மரம் போல்வர்
மக்கட் பண்பு இல்லாதவர்'

பண்புகளில் தலைமையிடம் வகிப்பது, கோபம் கொள்ளாமல் அன்பால் எவரையும் அணைத்தலே ஆகும். பொறாமை கொண்டவன் நண்பனை இழக்கிறான். கர்வம் கொண்டவன் கடவுளை இழக்கிறான். கோபம் கொண்டவன் தன்னையே இழக்கிறான். அதனால் தன் நட்புவட்டத்தையும், உறவு வளையத்தையும் அறுத்தெறிந்துவிட்டு அநாதை ஆகிறான்.

'சினம் என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம் என்னும்
ஏமப் புணையைச் சுடும்'

- என்கிறது திருக்குறள். "கோபம் வந்தால் அப்புறம் நான் மனுஷனா இருக்க மாட்டேன்" என்று பலர் ஆத்திரத்தில் கூறுவதிலிருந்தே தெரிகிறதே அவர்கள் மிருகமாக மாறி விடுவார்கள் என்று! 'கோபம் வாயைத் திறக்கும்! ஆனால், கண்களை மூடிவிடும்,' 'கோபம் கொள்ளும் ஒவ்வொரு நிமிடமும் நீ அறுபது விநாடி மகிழ்ச்சியை இழக்கிறாய்,' என்பதெல்லாம் பலருக்கும் தெரிந்த பொன்மொழிகள் தானே! 'கோபம் இருக்கும் இடத்தில் குணம் இருக்கும்' என்றும் ஒரு பழமொழி இருக்கிறதே என்றும் சிலர் எண்ணலாம்.

அப்படி என்றால் என்ன பொருள் தெரியுமா? கோபம் இருக்கும் அதே இடத்தில்தான் குணமும் இருக்கிறது. ஒருவன் சினமடைவதை நிறுத்தி ஒரு நொடி சிந்தித்தால் அவன் கோபம் மாறி குணம் பிறக்கும் என்பதைத்தான் அப்பழமொழி குறிப்பிடுகிறது.

மிடுக்கும் துடுக்கும் நிறைந்த படைத்தளபதி ஒருவன், அவன் ஊரில் புகழ் பெற்று விளங்கிய தத்துவஞானியை சந்தித்துக் கேட்டான்: 'நீங்கள் அனைத்தும் அறிந்த அற்புத மகான் என்று ஊரில் பேசிக் கொள்கிறார்களே! சொர்க்கமும் நரகமும் எங்கெங்கே உள்ளன என்று எனக்குத் துல்லியமாகக் கூற முடியுமா?' அதிகார தோரணையில் அவன் கேட்டதால் ஞானி அவனைப் பார்த்து 'முதலில் நீ யார் என்று எனக்குச் சொல்!' என்றார்.

'நான் ராஜாவின் அந்தரங்கப் பாதுகாவலன். படைத்தளபதி,' என்றான் அவன். 'ஓ! நீ பாதுகாவலனா? பார்த்தால் பயந்தாங்கொள்ளி போல் அல்லவா உள்ளாய்?' ஞானியின் இந்த பதிலைக் கேட்ட போர் வீரன் கொதிப்படைந்து உறைவாளை உருவி, 'என்ன சொன்னீர்கள்?' என்று மிரட்டினான். அவன் விழிகள் விநாடி நேரத்தில் சிவந்து விட்டன.

(தொடரும்...)

# செய்தித்துளிகள்

## போலி நாணயத்தாள்களை வழங்கிய இரண்டு இளைஞர்கள் கைது

(கொழும்பு)

எரிபொருள் நிரப்பும் நிலையமொன்றில் போலி நாணயத் தாள்களை வழங்கிய இரண்டு இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

எல்ல பொலிஸ் பிரிவைச் சேர்ந்த எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் எரிபொருள் நிரப்புவதற்கு வருகை தந்த இருவரே இவ்வாறு நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக பதுளை எல்ல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.


மேலும் விசாரணைகளின் பின்னர் குறித்த இளைஞர்கள் பண்டாரவளை நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளதாக எல்ல பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

## முதியவரின் மூக்கிற்குள்ளிருந்து 15 குளவிகள் அகற்றல்

(கொழும்பு)

குளவிக் கொட்டிற்கு இலக்கான ஒருவரின் மூக்கிற்குள் இருந்து 15 குளவிகளை வைத்தியர்கள் அகற்றியுள்ளனர்.





இந்த அதிர்ச்சிச் சம்பவம் அண்மையில் பதுளை பொது வைத்தியசாலையில் இடம் பெற்றது.


குளவிக்கொட்டிற்கு இலக்கான 70 வயதான முதியவர் ஒருவரின் மூக்கிற்குள்ளிருந்தே குளவிகள் அகற்றப்பட்டன. அவரது உடல் முழுவதும் ஏராளம் குளவிக் கொடுக்குகள் இருந்தன. அவற்றையும் வைத்தியர்கள் அகற்றினர். (ஜ-10)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 140 | 130 | 140 | 120 |
| உருளைக்கிழங்கு | 140 | 120 | 110 | 120 |
| பச்சைமிளகாய் | 200 | 180 | 180 | 300 |
| தக்காளி | 100 | 180 | 100 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 120 | 110 | 100 |
| கோவா | 130 | 140 | 140 | 160 |
| கரட் | 80 | 150 | 140 | 200 |
| பூசணி | 100 | 100 | 100 | 100 |
| புடோல் | 100 | 120 | 60 | 120 |
| வாழைக்காய் | 150 | 140 | 100 | 120 |
| சின்ன வெங்காயம் | 100 | 100 | 60-100 | 140 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 100 | 120 |
| பாகற்காய் | 150 | 180 | 170 | 200 |
| வெண்டிக்காய் | 60 | 70 | 50 | 80 |
| கருணைக் கிழங்கு | 150 | 100 | 100 | 160 |
| பயற்றங்காய் | 160 | 160 | 120 | 120 |
| லீக்ஸ் | 80 | 100 | 90 | 100 |
| பீற்றூட் | 100 | 100 | 90 | 120 |
| கறிமிளகாய் | 350 | 350 | 280 | 400 |
| முருங்கைக்காய் | 160 | 120 | 120 | 120 |
| போஞ்சி | 250 | 300 | 300 | 300 |
| கத்தரிதம்புள்ள | 120 | 100 | -- | 100 |
| கீரை – 1 பிடி | 40 | 50 | 30 | 40 |
| தேசிக்காய் | 100 | 160 | 60 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 70 | 70-80 | 60-80 |
| இராசவள்ளி | -- | -- | 300 | -- |
| வெங்காயப்பூ | 250 | 200 | 220 | 200 |
| முள்ளங்கி | 80 | 80 | 50 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 40 | 30 |
| வல்லாரை | 20 | 40 | 20 | 20 |
| ஈரப்பலா | 60 | 80 | 40 | 80 |




## நட்டத்தை இலாபமாக்கிய குதிரை



தெனாலிராமன் ஒரு முறை சந்தைக்குச் சென்று ஐம்பது நாணயங்கள் கொடுத்து குதிரை ஒன்று வாங்கி வந்தான். அதில் ஏறி சவாரி செய்யப் பழகிக் கொண்டிருந்தான்.

அப்போது அரசர் தன் விலையுயர்ந்த குதிரை மேல் ஏறிக் கொண்டு இராமனையும் உடன் வருமாறு அழைத்தார். இராமனும் தன் குதிரை மீது ஏறிக் கொண்டு மன்னருடன் சென்றான்.

அரசரின் குதிரை அழகாக நடைபோட இராமனின் குதிரையோ தளர்ந்த நடை போட்டது. இராமா! போயும் போயும் இந்த வற்றிப் போன தொத்தல் குதிரைதானா உனக்குக் கிடைத்தது.

இதனை வைத்துக்கொண்டு நீ எப்படி சவாரி செய்யப் போகிறாய்? உடனே இராமனுக்கு ரோசம் வந்துவிட்டது.

அரசே, இந்தக் குதிரை பயன்படுவது போல உங்கள் குதிரை கூடப் பயன்படாது" என்று தன் குதிரையைப் பற்றி மிக உயர்வாகப் பேசினான். எப்படிச் சொல்கிறாய்?

இதை உன்னால் நிரூபிக்க முடியுமா?" முடியும். வேண்டுமானால் பாருங்கள். உங்கள் குதிரையால் செய்ய முடியாததை என் குதிரையைச் செய்ய வைக்கிறேன்.

அப்படியா சொல்கிறாய்? நூறு பொன் பந்தயம் கட்டுகிறேன். செய் பார்க்கலாம்" என்றார்.

இருவரும் பேசியவாறு மெதுவாக வந்து கொண்டிருந்தனர். அப்போது குதிரைகள் இரண்டும் பாலத்தின் மீது சென்று கொண்டிருந்தன. கீழே பார்த்தால் பயங்கர சுழல்.

இராமன் சட்டென்று குதிரையை விட்டுக் கீழே இறங்கினான். பாலத்தின் ஓரத்திற்குக் குதிரையைக் கொண்டு சென்றான். அரசர் திகைத்தார்.

இராமன் தன் குதிரையை நீருக்குள் தள்ளி விட்டு விட்டான். அரசர் பதறினார்.

"இராமா, என்ன இது, ஏன் இப்படிச் செய்தாய்?" அரசே! என் குதிரை செய்தது போல உங்கள் குதிரை செய்ய முடியுமா? உங்கள் ஆயிரம் பொன் மதிப்புள்ள குதிரையால் செய்ய முடியாததை என் குதிரை செய்து விட்டது பாருங்கள்."

ஆயிரம் பொன் மதிப்புள்ள குதிரை மட்டுமல்ல, அரசரின் நண்பனாகவும் பழகிய அறிவுள்ள குதிரை அது. அதை இழக்க அரசர் விரும்புவாரா? பந்தயத்தில் சொன்னபடி நூறு பொன் நாணயங்களைக் கொடுத்தார் அரசர்.


"இருந்தாலும் ஒரு உயிரைக் கொல்வது தவறில்லையா இராமா?" என்றார் அரசர் வருத்தத்தோடு. அரசே, நோய்வாய்ப்பட்டு வயோதிப நிலையில் இருக்கும் இந்தக் குதிரையை யாரும் இனி வாங்க மாட்டார்கள்.

இது இறந்தால் எனக்கு ஐம்பது நாணயங்கள் நட்டம். இப்போது எனக்கு நூறு பொன் கிடைத்து விட்டது. அத்துடன் அந்தக் குதிரையைப் பராமரிக்கும் செலவும் இனி இல்லை.

குதிரைக்கும் துன்பம் நீங்கி விட்டது. எனவேதான் இப்படிச் செய்தேன். என் குதிரையின் உயிர் நட்டம் எனக்கு இரு மடங்கு இலாபமாயிற்று" என்றான்.

# ராஜராஜ சோழப்பேரரசின் வரலாறு

## இலங்கையில் பறந்த புலிக்கொடி!




உதகைப்போர்

இவர்கள் சேலம், வட ஆற்காடு கோட்டங்களின் வடபகுதியையும் வளைத்துச் சிற்றரசர்களாக இருந்தார்கள்.

ஆனால் இந்த நுளம்பர்கள் கங்கர்களின் கட்டுப்பாட்டுக்குள் இருந்தார்கள். இதனால் கங்கபாடிப் போரில் நுளம்பர்களின் ஆலோசனைகள் சோழர்களுக்கு கிடைத்தன.

கங்கர்களின் மீதான வெறுப்பில் நுளம்பர்கள் இப்போரில் சோழர்களுக்கு பேருதவி செய்ததாகவும் கூறப்படுகிறது.

ஏற்கனவே கொங்குப் பகுதி சோழர்கள் வசம் இருந்ததால் காவிரி ஆற்றங்கரையை கடந்து மைசூரை அடைவது சோழர்களுக்கு பெரிய சிரமமாக இருக்கவில்லை.

கொங்கு நாட்டிலிருந்தும் குடமலைநாட்டிலிருந்தும் போர்ப் படைகள் கிளம்பி கங்கபாடிக்கு விரைந்தன. ஒரு பெரிய படையுடன் சென்றதால் கங்கபாடியே அரண்டு போனது.

முதலில் தடிகை பாடியையும் பிறகு கங்கபாடியையும் விரைவில் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடிந்தது.

கங்கர்களை தட்டி வைத்ததால் நுளம்பர்களும் சோழர்களின் சொல்லுக்குக் கட்டுப்பட்டார்கள். இதனால் மைசூரை நோக்கிச் சென்ற காரியம் சுபமாகவே முடிந்தது.

### வேங்கி மண்டலப் போர்

தொண்டை நாட்டுக்கு வடக்கே கீழைச் சாளுக்கியர்களின் ஆட்சி நெல்லூர் வரை பரவியிருந்தது. இங்கே சாளுக்கியர்கள் பற்றிக் கொஞ்சம் பார்ப்போம்.

எப்படிச் சோழர்கள் மாபெரும் சாம்ராச்சியத்தை உருவாக்கினார்களோ அதுபோல இந்திய அரச வம்சத்தின் முக்கியமான புள்ளிகள் சாளுக்கியர்கள். தெற்கு மற்றும் மத்திய இந்தியாவின் பெரும் பகுதியை ஆண்டவர்கள்.

6ஆம் நுற்றாண்டு முதல் 8 ஆம் நூற்றாண்டு வரையிலும் 10 ஆம் நூற்றாண்டு முதல் 12 ஆம் நூற்றாண்டு வரையிலும் இவர்கள் கன்னட, தெலுங்கு மகராஷ்டிரப் பகுதிகளில் ஆட்சி செலுத்தினார்கள்.

இவர்களுடைய மன்னர்களில் மிகவும் பிரபலமானவர் இரண்டாம் புலிகேசி பல்லவர்களைத் தோற்கடித்து காஞ்சியை கைப்பற்றியது வரை அவர்களது கை தமிழகம் வரை நீண்டது.

எல்லா பேரரசுகளைப் போல வீழ்ச்சியைக் கண்ட இவர்கள் பத்தாம் நூற்றாண்டில் மீண்டும் தலை தூக்க ஆரம்பித்தார்கள். மேலைச்சாளுக்கியர்கள், கீழைச்சாளுக்கியர்கள் என்று இவர்களிடம் இரு பிரிவுகள் இருந்தன.

மேலைச்சாளுக்கியர்கள் கர்நாடகாவில் உள்ள கல்யாணி நகரைத் (இன்றைய பசவகல்யாண் நகர்) தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்தார்கள். கீழைச் சாளுக்கியவர்கள் வேங்கியைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்து வந்தார்கள்.

கீழைச் சாளுக்கியர்களின் வளர்ச்சியும் ராஜ ராஜனுக்கு கவலையளித்தது. இதற்கு முன்னால் பல்லவர்களின் கோட்டைகளை உடைத்தெறிந்தவர்கள் மீண்டும் தமிழகத்தில் ஒரு அதகளம் ஏற்படுத்தமாட்டார்கள் என்று என்ன நிச்சயம் என்று எண்ணினார். (தொடரும்)

எல்லாவற்றையும் இழந்துவிட்டோம் என்று நீங்கள் நினைக்கும்போது ஒன்றை மட்டும் மறவாதீர்கள். நிச்சயம் எதிர்காலம் என்று ஒன்று உண்டு. அதற்கு இழப்பென்பது இல்லை. – சிராப்டன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளை ஜனாதிபதியும் பிரதமரும் சந்திக்க வேண்டும்

தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் இருந்து ராஜபக்ஷக்கள் விலக முடியாது என வாசுதேவ நாணயக்கார அண்மையில் கூறியிருந்தார்.

வாசுதேவ நாணயக்காரவா இவ்வாறு கூறினார் என்று ஐயம் கொண்டாலும் பழைய வாசுதேவ நாணயக்கார மீது தமிழ் மக்களுக்கு இருக்கக்கூடிய நன்மதிப்பும் நம்பிக்கையும் அவர் இவ்வாறு கூறியிருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகிறது.

தவிர, வன்னிப் பெருநிலப்பரப்பில் நடந்த யுத்தமும் அதன் காரணமாகத் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட உயிர் இழப்புகளும் சொத்தழிவுகளும் அங்கவீனங்களுக்கும் பதிலளிக்க வேண்டிய தார்மீகப் பொறுப்பு மகிந்த ராஜபக்ஷ தரப்புக்கு உண்டு என்பது ஏற்புடைய நியாயம்.

ஏனெனில் வன்னி யுத்தத்தை முன்னெடுத்த ஆட்சியாளர்கள் இவர்கள் என்பதால், எந்தச் சந்தர்ப்பத்திலும் அதற்குப் பொறுப்புக் கூற வேண்டியவர்களாக ராஜபக்ஷ தரப்பினர் இருக்கின்றனர் என்பதில் மாற்றுக் கருத்திற்கிடமில்லை.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது, பொறுப்புக்கூற வேண்டியவரை அதிகாரக் கதிரையில் இருத்துங்கள். அப்போதுதான் பொறுப்புக் கூறுவதை வலியுறுத்த முடியுமென; இணைந்த வடக்கு–கிழக்கு மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் அ.வரதராஜப்பெருமாள் கூறியிருந்த கருத்தின் மீது கவனம் செலுத்தலாம்.

வரதராஜப்பெருமாள் கூறிய கருத்தின் சரிபிழைக்கு அப்பால், பொறுப்புக் கூற வேண்டியவர்கள் ஆட்சிப்பீடத்தில் அமர்ந்து விட்டனர்.

எனவே அவர்கள் தங்களின் கடமையைச் செய்தாக வேண்டும். அந்தக் கடமையைத்தான் வாசுதேவ நாணயக்கார அவர்கள் தத்துவ உபதேசமாகக் கூறியிருக்கின்றார்.

இவற்றுக்கு மேலாக, இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும். அதை எங்கள் அரசாங்கம் செய்யும் என்பதை பிரதமர் மகிந்த ராஜபக்ஷ அண்மையிலும் கூறியிருந்தார்.

எனினும் அவரோடு இருக்கக்கூடிய பேரினவாதிகள், தமிழ் மக்கள் தொடர்பில் தெரிவிக்கின்ற கருத்துக்கள் தமிழ் மக்களுக்குத் தீர்வு எதனையும் வழங்கக்கூடாது எனக் கருத்துருவாக்கம் செய்வதான நிலைமைகளும் உண்டு.

எது எவ்வாறாயினும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளை இந்த நாட்டின் ஜனாதிபதியும் பிரதமரும் சந்தித்தாக வேண்டும்.

இந்தச் சந்திப்பு மனித உயிர்களின் பெறுமதியையும் தங்களின் பிள்ளைகளைக் காணாமல் அவர் தம் பெற்றோர் படும் வேதனைகளையும் நேரில் காணும்போது, ஆட்சித் தலைவர்களிடம் மனமாற்றம் ஏற்படுவதற்கான வாய்ப்பு நிறையவே உண்டு.

ஆகையால் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களை ஜனாதிபதியும் பிரதமரும் சந்திப்பதற்கான சூழமைவு ஏற்படுத்தப்பட வேண்டும்.

## கொரோனாவால் தடைப்பட்டிருந்த அபிவிருத்தி வேலைகள்
# தற்போது துரித கதியில் முன்னெடுக்கப்படுகிறது
### யாழ். அரச அதிபர் மகேசன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

கொரோனாவால் தடைப்பட்டிருந்த அபிவிருத்தி வேலைகள் தற்போது துரித கதியில் முன்னெடுக்கப்பட்டு வருவதாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் தெரிவித்தார்.

தற்பொழுது யாழ்ப்பாண மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் தற்போது நடைமுறைப்படுத்தப்படும் அபிவிருத்தித் திட்டங்களில் இரண்டு பிரதான திட்டங்கள் அரசினாலும் மேலும் ஒரு திட்டம் உலக வங்கியின் நிதி உதவியிலும் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. இதனைவிட பல திட்டங்கள் செயற்படுத்தப்படவுள்ளன.

இதில் "சப்ரிகம" செயற்திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்தில் ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவிலும் 2 மில்லியன் ரூபாய்நிதிஒதுக்கீடு செய்யப்பட்டு ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவிலும் அபிவிருத்தி திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றது.

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள 435 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் சுமார் 690 மக்களால் இனங்காணப்பட்ட திட்டங்கள் ஏற்கனவே, கடந்த பாராளுமன்ற ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் அனுமதிக்கப்பட்டு இவ் வருடம் 2020ல் நடைமுறைப்படுத்த அனுமதிக்கப்பட்டுள்ளது.

அந்த 690 திட்டங்களுக்குமான மொத்த மதிப்பீடு 870 மில்லியன் ரூபாய். இந்த திட்டத்தினை கொரோனா காலப் பகுதிக்கு முன்னர் தொடங்கியிருந்தாலும், அதன் பிற்பாடு அந்த வேலைகள் முற்றாக முடிவுறுத்தப்படவில்லை. எனினும் 573 வேலைகள் முடிவுற்றுள்ளன. இதற்கென 245 மில்லியன் ரூபாய் தற்போதுவரை செலவிடப்பட்டுள்ளது. மிகுதி வேலைகள் இந்த வருட இறுதிக்குள் பூர்த்தி செய்யக்கூடியவாறான பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

அதேபோன்று கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 57 திட்டங்கள் இனங்காணப்பட்டுள்ளன. அவற்றுக்கான நிதி ஒதுக்கீடு 21.2 மில்லியன் ரூபாய். இந்த 57 திட்டங்களில் தற்போது 46 திட்டங்கள் பூரணப்படுத்தப்பட்டுள்ளன. இதற்கென 16 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. இத் திட்டம் பெரும்பாலும் இவ் வருட இறுதிக்குள் பூரணப்படுத்தப்படும்.

மேலும் கொரோனா தொற்று மற்றும் நிலைமாறுகால பகுதியில் வரவு செலவு திட்டம் சமர்ப்பிக்கப்படாமை போன்ற காரணத்தால் திட்டங்களை சீராக நடாத்துவதில் சிறு தடங்கல் ஏற்பட்டிருந்தது. இருந்த போதிலும் மிகுதி நான்குமாத காலப் பகுதிக்குள் இந்த திட்டத்தினை முடிவுறுத்துவதற்கான ஏற்பாடுகள் இடம்பெறுகிறது என்றார்.

(ம-3,8,33,101)

## நெடுந்தீவு யுவதி கொலை
### பிரதான சந்தேக நபரான
# தாய் மாமன் கைது

(மன்னார்)

மன்னார் உப்பளம் பகுதியில் படுகொலை செய்யப்பட்ட நிலையில் கடந்த 13 ஆம் திகதி சடலமாக மீட்கப்பட்ட நெடுந்தீவைச் சேர்ந்த டொறிக்கா ஜேயின் (வயது 21) என்ற இளம் யுவதியின் கொலை தொடர்பாக தேடப்பட்டு வந்த பிரதான சந்தேக நபரான தாய்மாமன் நேற்று முன்தினம் திங்கட்கிழமை வவுனியாவில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

மன்னாரில் இருந்து சென்ற விசேட பொலிஸ் குழுவினர் குறித்த பிரதான சந்தேக நபரை கைது செய்துள்ளனர்.

குறித்த யுவதி கொலை செய்யப்பட்ட நிலையில் கடந்த 13 ஆம் திகதி மன்னார் உப்பளம் பகுதியிலுள்ள பாத்தியில் சடலமாக மீட்கப்பட்டார்.

படுகொலை செய்யப்பட்ட யுவதியின் சகோதரி மற்றும் பெரிய தாயின் மகனின் மனைவி ஆகியோர் யாழ்ப்பாணத்தில் வைத்து கடந்த 22 ஆம் திகதி கைது செய்யப்பட்டு மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் குறித்த கொலையுடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபரான குறித்த யுவதியின் தாய் மாமனார் தலைமறைவாகி இருந்தார்.

மன்னார் பொலிஸார் விசேட நடவடிக்கைகளை மேற்கொண்ட நிலையில் பிரதான சந்தேக நபர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை வவுனியாவில் வைத்து அவர் கைது செய்யப்பட்டு அவர் மன்னார் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

விசாரணைகளின் பின்னர் குறித்த பிரதான சந்தேக நபர் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ம-3,285)

## சந்திரசிறிக்குப் பின்னர் வந்த
# எந்த ஆளுநரும் வடக்கில்
## சரியாக வேலை செய்யவில்லை
### அமைச்சர் டக்ளஸ் குற்றச்சாட்டு

(வவுனியா)

முன்னாள் இராணுவ அதிகாரி ஜெனரல் சந்திரசிறிக்குப் பின்னர் வடக்கில் நியமிக்கப்பட்ட எந்த சிவில் அதிகாரிகளும் தமது வேலையை ஒழுங்காக செய்யவில்லை என்று கடற்தொழில் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

வவுனியாவிற்கு நேற்று விஜயம் செய்த அவர் அரச நியமனங்கள் நிராகரிக்கப்பட்ட பட்டதாரிகளைச் சந்தித்துவிட்டு ஊடகங்களிற்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

வடக்கில் இராணுவ அதிகாரியை ஆளுநராக நியமிக்கும் நிலைப்பாடு இதுவரை அரசிடம் இல்லை. எனினும் முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சந்திரசிறியை ஆளுநராக நியமிக்குமாறு இந்த அரசாங்கம் வந்தவுடன் நான் கோரியிருந்தேன். ஏனெனில் அவருக்கு பின்னர் வருகைதந்த எந்த சிவில் அதிகாரிகளும் தமது வேலையை ஒழுங்காக செய்யவில்லை. எனினும் இராணுவ அதிகாரியை நியமிக்காமல் சிவில் அதிகாரியையே நியமிக்க வேண்டும் என்று ஜனாதிபதியும் பிரதமரும் அன்று கூறினார்கள் என்றார்.

(ம-3,299)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 27ஆம்திகதி வியாழக்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணிவரை

**யாழ்.பிரதேசத்தில்** - பருத்தித்துறை 3ம் குறுக்குத் தெரு, சிவப்பிரகாசம், தும்பளை, வெளிச்சவீடு, நெல்லண்டை, மாதனை, கற்கோவளம், கற்கோவளம்ஐஸ்தொழிற்சாலை, புனிதநகர் ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** மகாகச்சக்கொடிய கிராமம், ஆண்டியப் புளியங்குளம், கற் கடந்த குளம், பூவரசங்குளத்திலிருந்து வாரிக்குட்டியூர் வரை, தவசிக்குளம் பிரதேசம் ஆகிய இடங்களிலும்

காலை 8 மணியிலிருந்து மதியம் 12 மணிவரை கிளிநொச்சி பிரதேசத்தில் மாஸார் சோரன்பற்று ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## ஆன்மீகச் சிந்தனைகள்
### எல்லோரும் கடவுளே

❖ அறிவு வளர வளர மனிதன் அடக்கமுடன் இருக்க வேண்டும். இதுவே அறிவின் அடையாளம்.


❖ குலத்தால் உயர்வு, தாழ்வு கற்பிப்பது கூடாது. குணத்தால் மனிதனை அளப்பதே சிறந்தது.

❖ குடும்பம் என்னும் வண்டிக்கு கணவனும், மனைவியும் சக்கரம் போல இயங்க வேண்டும்.

❖ துன்பம் இன்றி வாழ நினைத்தால், எல்லா உயிர்களையும் கடவுளாகப் போற்றுங்கள்.

❖ தினமும் வழிபாட்டில் ஈடுபடுங்கள். இல்லாவிட்டால், வாழ்வதில் அர்த்தமில்லை.

# மின்னல் வேக மனிதனுக்கு கொரோனா



உலகின் மின்னல் வேக மனிதன் என அழைக்கப்படும் ஜமேக்காவைச் சேர்ந்த பிரபல ஓட்டப்பந்தய வீரர் உசைன் போல்ட்டுக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த சில தினங்களுக்கு முன்னரேயே உசைன் போல்ட் தனது 34 ஆவது பிறந்த நாளை கொண்டாடினார்.

அப்போது அவருடன் இங்கிலாந்து கால்பந்து வீரர் ரஹீம் ஸ்டெர்லிங் மற்றும் நெருங்கிய நண்பர்கள் பல்வேறு விளையாட்டு பிரபலங்களும் பங்கேற்றனர். இதனையடுத்து உடல் நலம் பாதிக்கப்பட்ட அவர் நேற்று முன்தினம் கொரோனா பரிசோதனை மேற்கொண்டார். அதில் அவருக்கு கொரோனா தொற்று இருப்பது தெரியவந்தது. இதனையடுத்து சமூக வலைத்தளத்தில் கொரோனா தொற்றால் தாம் பாதிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.(4-7)

# சங்காவின் பெயரில் போலி பேஸ்புக் கணக்கு



சிறந்த இலங்கைக்காக குமார் சங்கக்கார என்ற பெயரில் உள்ள முகப்புத்தகக் கணக்கு தன்னுடையதல்ல என இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் குமார் சங்கக்கார தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித்தலைவர் குமார் சங்கக்கார சிறந்த இலங்கைக்காக குமார் சங்கக்கார என்ற பெயரில் இயங்கும் முகப்புத்தகக் கணக்குக்கும் எனக்கும் மற்றும் என்னுடன் தொடர்புபட்ட அமைப்புக்களுக்கும் தொடர்பில்லையென தனது உத்தியோகபூர்வ முகப்புத்தகத்தினூடாக தெரிவித்துள்ளார்.

அத்துடன், செய்தி புதுப்பிப்புக்கள் மற்றும் திட்டங்கள் தொடர்பான தகவல்கள் என்பவை தொடர்பில் அறிந்து கொள்ள தனது உத்தியோகபூர்வ முகப்புத்தக வலைத்தளத்தை பின்தொடருமாறும் குமார் சங்கக்கார பதிவிட்டுள்ளார். (4)



காரைநகர் இளைஞர் சேவைகள் மன்றத்தால் நடத்தப்பட்ட 2020 ஆம் ஆண்டுக்கான 5 ஓவர் அணிக்கு 6 பேர் கொண்ட துடுப்பாட்டப் போட்டி கடந்த 15 ஆம் திகதி சனிக்கிழமை கோவளம் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது. போட்டியில் கோவளம் இளைஞர்கழகம் அம்பாள் இளைஞர் கழக அணியை 29 ஓட்டங்களால் வீழ்த்தி வெற்றி பெற்று சம்பியனாகியது.



காரைநகர் இளைஞர் சேவைகள் மன்றத்தால் நடத்தப்பட்ட 2020 ஆம் ஆண்டுக்கான கரப்பந்தாட்ட போட்டி கடந்த 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஊரி விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றது. போட்டியில் அம்பாள் இளைஞர்கழகம் இளஞ்சுடர் அணியை வீழ்த்தி சம்பியன் வென்றது.

# நொதேன் பிறீமியர் லீக் 2k20

## கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற போட்டிகள்



- அரியாலை கில்லாடி 100 எதிர் கிங் கோப்ராஸ் ஜப்னா
- அரியாலை கில்லாடி 100-45/10
- கிங் கோப்ராஸ் ஜப்னா46/5
- கிங் கோப்ராஸ் 5 இலக்குகளால் வெற்றி
- ஆட்ட நாயகன்-கனிஸ்ரன் 5.இலக்குகள்



- சங்கானை ரொப் 11 எதிர் அரியாலை கில்லாடி 100
- சங்கானை ரொப் 11-96/6
- அரியாலைகில்லாடி 100-89/9
- சங்கானை ரொப் 11 7 ஓட்டங்களால் வெற்றி
- ஆட்ட நாயகன்-குக்ஸ்மன் 30 ஓட்டங்கள்



- AA சுப்பர் கிங்ஸ் மன்னார் எதிர் வட ஸ்ரைக்கர்ஸ்
- AA சுப்பர் கிங்ஸ் மன்னார்-79/9
- வட ஸ்ரைக்கர்ஸ்-80/5
- வட ஸ்ரைக்கர்ஸ் 5 இலக்குகளால் வெற்றி
- ஆட்டநாயகன் - சேந்திரன் 16 ஓட்டங்கள்(துடுப்பாட்டம்) 2 இலக்குகள் (பந்துவீச்சு)



- கிங் கோப்ராஸ் ஜப்னா எதிர் வட ஸ்ரைக்கர்ஸ்
- கிங் கோப்ராஸ் ஜப்னா-80/6
- வட ஸ்ரைக்கர்ஸ் -84/6
- வட ஸ்ரைக்கர்ஸ் 4 இலக்குகளால் வெற்றி
- ஆட்ட நாயகன்-ரஜீவன் 30 ஓட்டங்கள்

## இடிபாட்டுக்குள்...

உயிரிழந்தார்.

சுன்னாகம், அம்பனைப் பகுதியில் நேற்று பிற்பகல் இந்தச் சம்பவம் இடம் பெற்றது.

இதில் நவாலி கலையரசி லேனைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான அல்ரர் போல் (வயது-42) என்பவரே உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை சுன்னாகம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-3)

## விக்னேஸ்வரனை...

இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே விவாதிக்க வருமாறு அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இலங்கையின் ஆதிக் குடிகள் தமிழர்களா என்பது தொடர்பாக என்னுடன் பகிரங்க சவாலுக்கு வருமாறு, நான் பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு சவால் விடுக்கிறேன்.

அவரிடமுள்ள அனைத்துத் தரவுகளையும் தோற்கடிக்க நாம் தயாராகவே இருக்கிறோம் என்பதை இவ்வேளையில் கூறிக் கொள்கிறேன் என்றார். (ம-3)

## புதிய அரசியலமை...

மன்ற உறுப்பினர்களுக்கான விசேட செயலமர்விலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இதன்போது தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், "50 வருடங்களுக்கு முன்னர், நாமும் இதேபோன்று ஒரு செயலமர்வில் இளைய பாராளுமன்ற உறுப்பினர்களாக கலந்து கொண்டிருந்தமை எனக்கு நினைவுக்கு வருகிறது.

இது ஒரு நடைமுறையாக தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இது ஒரு வரலாறாகும்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் பாராளுமன்றை பற்றி தெரிந்து கொள்ள வேண்டியது அத்தியாவசியமாகும்.

இதுதொடர்பான புரிந்துணர்வை பாராளுமன்றுக்கு உள்ளேதான் பெற்றுக் கொள்ள வேண்டும். இந்தப் புரிந்துணர்வு தான் உறுப்பினர்களை முன்னோக்கி பயணிக்க வழிவகை செய்யும்.

புதிய உறுப்பினர்கள் பலர் இன்று பாராளுமன்றுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். புதியவர்கள் வருவதை நாம் மகிழ்ச்சிகரமாக வரவேற்கின்றோம். இவர்கள்தான் நாட்டின் எதிர்கால தலைவர்களாக வரப் போகின்றார்கள்.

கடந்த தேர்தலை யாரும் மறந்துவிடப் போவதில்லை. எமது தரப்புக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைத்ததோ அல்லது இலங்கையின் பழைய கட்சியான ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஒரு ஆசனம்கூட கிடைக்காததோ இங்கு விசேடமானது அல்ல.

ஆனால், இந்த தேர்தல் ஊடாக ஒரு பாடத்தை மக்கள் எமக்கு கற்பித்துள்ளார்கள் என்பது மட்டும் உண்மையாகும்.

71 வீதமான மக்கள் வாக்களித்துள்ளார்கள். இது எதிர்காலத்திற்கு விடுக்கப்பட்ட ஒரு சமிக்ஞையாகவே நாம் கருதுகிறோம்.

நாட்டு மக்கள், ஜனநாயகத்திற்கும் முறையான வேலைத்திட்டத்திற்கும் ஆதரவானவர்கள் என்பதை காண்பித்துள்ளார்கள். வேலை செய்யாதவர்களை வீட்டுக்கு அனுப்பியுள்ளார்கள். நாட்டுக்கு ஆதரவில்லாதவர்களை நிராகரித்துள்ளார்கள்.

இதேபோன்றுதான் மக்கள் எதிர்காலத்திலும் செயற்படுவார்கள் என்று நாம் கருதுகிறோம். பெரியவர் - சிறியவர் என்று பார்க்காமல், புதியவரா- அனுபவசாலியா என்று பார்க்காமல், மக்கள் தீர்ப்பு வழங்கியுள்ளார்கள்.

மக்களைப் பொறுத்தவரை, மக்களுக்கான சேவை செய்யத் தகுதியற்றவர்களை, அவர்கள் நிராகரிப்பார்கள் என்பதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

இதுதான் மக்களுக்கான அரசியல். நாம் என்றும் மக்களுடன் தொடர்பில் இருக்க வேண்டும். இதனை புதிய உறுப்பினர்கள் உள்ளிட்ட அனைவரும் தெரிந்துகொள்ள வேண்டும்.

பாராளுமன்றைப் பொறுத்தவரை, உறுப்பினர்கள் அனைவரும் சிறந்த மக்கள் பிரதிநிதியாக இருக்க வேண்டும். இதனை புறக்கணிப்பவர்களுக்கு அரசியல் எதிர்காலமொன்று இருக்காது.

எமக்கு அரசியல் பழிவாங்கலில் ஈடுபட தற்போது நேரமில்லை. இதற்காக மக்கள் எமக்கு ஆணையும் வழங்கவில்லை. நாட்டுக்கு புதிய அரசியலமைப்பொன்றை ஸ்தாபிக்கவே மக்கள், இந்தத் தேர்தலில் எமக்கு ஆணை வழங்கியுள்ளார்கள்.

எனவே, இதனை நாம் முதலில் நிறைவேற்ற வேண்டும். அரசியல்மைப்பு என்பது ஒரு தரப்புக்கு மட்டும் உரித்தானது அல்ல. உண்மையில் இதன் ஒவ்வொரு சரத்தும், எமது வாழ்க்கையை தீர்மானிக்கும்.

எனவே, இதற்கு அனைத்து தரப்பினரின் ஒத்துழைப்பும், கட்சி பேதங்களைக் கடந்து தேவைப்படுவது எமது அரசியல் பொறுப்பாக உள்ளது. இதுதான் மக்களின் எதிர்பார்ப்பாகும்" என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-3)

## குடும்பஸ்தர்...

மன்னாரைச் சேர்ந்த முகமது சிராஜ் (வயது-30) என்ற இரண்டுபிள்ளைகளின் தந்தையே மரணமடைந்தவராவார்.

கடந்த 21ஆம் திகதி பால் காய்ச்சிய போது மண்ணெண்ணெய் போத்தல் தவறிவிழுந்ததில் தீக்காயத்துக்குள்ளாகிய நிலையில் மாஞ்சோலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவரின் இறப்புத் தொடர்பான விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-3)

## 12 பேருக்கு...

துள்ளது.

இந்தியாவிலிருந்து நாடு திரும்பிய 12 பேருக்கே இவ்வாறு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதனையடுத்து நாட்டில் கொரோனா தொற்றுக்குள்ளானவர்களின் மொத்த எண்ணிக்கை 2,971 ஆக அதிகரித்துள்ளது. (ம-3)

## இந்திய அரசாங்...

துக்கு எவ்வித உரிமையும் இல்லை என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எல்லாவல தேரர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தம் தொடர்பில் இந்திய உயர்ஸ்தானிகர் அண்மையில் வெளியிட்ட கருத்தை திரும்பப் பெற வேண்டும் என்றும் குறிப்பிட்டார். (ம-3)

## 7013 மில்லியன்...

யாழ்ப்பாணம் அபிவிருத்தி செய்யப்படுவதாக யாழ்.மாவட்ட அரச அதிபர் க.மகேசன் தெரிவித்தார்.

"தந்திரோபாய நகர அபிவிருத்தித் திட்டம்" என்னும் பெயரில் நான்கு பிரதான வகையாக இத்திட்டம் முன்னெடுக்கப்படுவதாக அரச அதிபர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வீதி போக்குவரத்து முகாமைத்துவமும் பொதுப் போக்குவரத்து கட்டமைப்பு வசதியினை மேம்படுத்தல், வடிகாலமைப்பு தொகுதிகளை மேம்படுத்தல், நகர தரமுயர்த்தல் அதேபோன்று கலாசார பாரம்பரியம் மிக்க இடங்களை பேணிப் பாதுகாத்தல் யாழ்ப்பாண மாநகர சபையினை வலுப்படுத்தல்.

இந்த நான்கு கட்டங்களாக இந்த தந்திரோபாய நகர திட்டமானது யாழ்.நகரத்தில் அமுல்படுத்தப்படுகின்றது.

வீதிப் போக்குவரத்து முகாமைத்துவம் என்ற வகையிலே தற்பொழுது யாழ்ப்பாண நகரத்தை இணைக்கின்ற வகையிலே கச்சாய் - கொடிகாமம் - புலோலி வீதி தற்பொழுது அபிவிருத்தி செய்யப்படுகின்றது.

அதேபோல யாழ்ப்பாணம்- பொன்னாலை வீதி புனரமைப்பு செய்யப்படுகின்றது. இதனைவிட பொது போக்குவரத்து மற்றும் போக்குவரத்து முகாமைத்துவம் தொடர்பான ஒரு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அந்த ஆய்வின் முடிவுகள் யாழ். மாநகர சபை மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபையிடம் கையளிக்கப்பட்டுள்ளது. ஆய்வின் முடிவுகளை அடிப்படையாகக் கொண்டு யாழ்ப்பாண நகரத்தில் வீதிப் போக்குவரத்து மற்றும் ஏனைய திட்டங்கள் தொடர்பில் ஆராயப்படும்.

இதனைவிட நகர மையத்தில் கலாசார பாரம்பரியம் மிக்க இடங்களை பேணிப் பாதுகாத்தல் என்ற திட்டத்தின் கீழ் பழைய கச்சேரி மற்றும் பழைய பூங்கா என்பன புனரமைப்பு செய்யப்படவுள்ளன. அதனை அபிவிருத்தி செய்து அதனை நவீன மயப்படுத்தி பேணுவதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

மேலும் நகர வீதிகளில் நடைபாதை, சைக்கிள் பாதை போன்றவை உள்ளடக்கப்பட்டு நகர மக்கள் பயன்படுத்த கூடிய திட்டமும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

அதனைவிட 3 பிரதானமான பூங்காக்கள் நகரத்தை மையமாகக் கொண்டு அமைக் கப்படவுள்ளன. அதேபோல் ஏனைய 6 சிறு பூங்காக்களும் இந்த நகரப்பகுதியில் அமைக்கப்படவுள்ளன.

யாழ்ப்பாண நகரினை பொறுத்தவரை பிரதானமாக் தேவைப்படுவது வாகனத் தரிப்பிடம். நகரப் பகுதியில் வாகன தரிப்பிடம் மிகவும் கஸ்டமான ஒரு விடயமாக காணப்படுகின்றது. அதனை பாதுகாப்பான இடமாக அமைப்பதற்குரிய முன்மொழிவு திட்டத்திலே உள்ளடக்கப்படவுள்ளது. அதாவது பொது பயன்பாட்டு வாகன தரிப்பிடத் திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்பட வுள்ளது. அதனைவிட பொது வசதிகள் ஏற்படுத்துவதற்கும் திட்டத்தின் கீழ் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

தந்திரோபாய நகர அபிவிருத்தி திட்டம் தற்பொழுது தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. மேலும் இந்த திட்டத்தை அடுத்த வருட ▶24

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள் NLB
சீட்டிழுப்பு திகதி 25.08.2020
சீட்டிழுப்பு இலக்கம் 2520
ஆங்கில எழுத்து K வெற்றி இலக்கங்கள் 22 52 57 66
தேசிய லொத்தர் சபை

நீரோகா
திகதி 25/08/2020
சீட்டிழுப்பு இலக்கம் 0697
லக்கினம் மேஷம் வெற்றி இலக்கங்கள் 04 15 19 28

தன நிதானய
திகதி - 2020.08.25
சீட்டிழுப்பு இலக்கம் - 307
ஆங்கில எழுத்து L வெற்றி இலக்கங்கள் 08 09 29 39

மெகா பவர்
திகதி 25/08/2020
சீட்டிழுப்பு இலக்கம் 0592
U 12 வெற்றி இலக்கங்கள் 28 47 72 74

மஹஜன சம்பத
திகதி 2020/08/25
சீட்டிழுப்பு இலக்கம் 4225
ஆங்கில எழுத்து P வெல்லப்பட்ட இலக்கங்கள் 6 6 4 0 2 6
தேசிய லொத்தர் சபை

சீட்டிழுப்பு இலக்கம் 616 வர்ணம் இளம் சிவப்பு திகதி 25.08 2020
D 38 60 63 79
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 81,669,175
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk

அத கோடிபதி
சீட்டிழுப்பு இல: 1021 வர்ணம் : இளநீலம் சீட்டிழுப்பு திகதி: 2020.08.25
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 64,003,610/-
வெற்றி இலக்கங்கள் 01 26 34 40 ஆங்கில எழுத்து O
ரூ. 500/- பரிசுக்கான விசேட இலக்கம் 4916
ரூ. 100/- பரிசுக்கான விசேட இலக்கம் 152

ராசி அதிர்ஷ்டம்
வெற்றி வாரம் 2902 வர்ணம் சிவப்பு திகதி 25.08.2020
வெற்றி இலக்கங்கள் 08 45 46 61 கன்னி
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 2,725,504
தொ. பே.: 0112 333 546/47 Web: www.dlb.lk

ஜயோதா
சீட்டிழுப்பு வாரம் 1683 சீட்டிழுப்பு திகதி 25/08/2020
வெற்றி இலக்கங்கள் 12 17 33 40 ஆங்கில எழுத்து B
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 52,619,172
தொ. பே.: 0112 333 546/47 Web: www.dlb.lk

## விக்னேஸ்வர...

நாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்திருந்தபோதும் விக்னேஸ்வர னின் உரையின் விவரிக்கப்படாத பதிப்பு பாராளுமன்றத்தின் ஹன்சாட்டில் சேர்க் கப்பட்டுள்ளது. (ம-3)

## 7013 மில்லி...

இறுதிக்குள் நிறைவு செய்ய எதிர்பார்த் திருந்தோம்.

எனினும் திட்டமிட்ட காலத்திற்குள் இந்த கொரோனா தொற்று காரணமாக அதனை செயற்படுத்த முடியாது போய் விட்டது. மிகத் துரிதமாக அமுல்படுத்தி மிகுதி வேலைகளை குறித்த காலப் பகுதிக்குள் நிறைவு செய்வதற்குரியவாறு மீளாய்வுக் கூட்டங்களை நடத்தி அதனை இயலுமானவரை நிறைவு செய்வதற் குரிய பணிகளை முன்னெடுத்துள்ளோம் என்றார். (ம-3,6,8,101)

## குடும்பப் பெண்...

ழந்துள்ளார்.

கோண்டாவிலை சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தாயாரான ரஜீவ்காந் நந்தினிதேவி (வயது 45) என்பவர் நேற்று முன்தினம் குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து முரண்பாடு காரணமாக தனக்கு தானே தீமூட்டியுள்ளார்.

வைத்தியசாலையில் சேர்க்கப்பட குறித்த பெண் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.

இந்த மரண விசாரணையை யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசா ரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-3,9)

## பாடசாலை...

காலை 7.30 முதல் மதியம் 1.30 வரை பாடசாலைகள் திறக்கப்படும் என தெரிவிக் கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சின் செயலாளர் பேரா சிரியர் கபிலபெரேரா இதனை தெரிவித் துள்ளார்.

அதேபோல், தரம் ஒன்று முதல் தரம் 5 வரையான மாண வர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் செப்டம்பர் மாதம் 8 ஆம் திகதி முதல் வழமைக்கு கொண் டுவரப்படும் என அவர் மேலும் தெரி வித்தார். (ம-3)

## ராஜபக்ஷ...

அரசாங்கம் ஜனநாயக தன்மைக்கு பாதி ப்பை ஏற்படுத்தும் வகையில் அரசிய லமைப்பு திருத்தத்தை கொண்டுவர முயற்சித்தால் அதற்கு எதிரான நடவடிக் கைகளை முன்னெடுப்பதாகவும் கூறி னார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையக த்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இவ் வாறு தெரிவித்த அவர் மேலும் கூறியதாவது.

பொதுத் தேர்தல் பிரசாரங்களின் போது நாட்டுக்கு சேவை செய்வதற்காக தங்க ளுக்கு பலத்தை பெற்றுக் கொடுக்குமாறே ஆளும் தரப்பினர் கோரிக்கை விடுத்து வந்தனர். தற்போது அரசாங்கத்திற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மையை அண்மித்த ஆசனங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. இந்நிலையில் இதனைக் கொண்டு நாட்டுக்கு சேவை செய்வதை விடுத்து, 19 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை நீக்குவது தொடர்பிலேயே அரசாங்கம் அக்கறை செலுத்தி வருகின்றது.

வைரஸ் பரவல் காரணமாக பாரிய பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளதுடன், இலட்சத்துக்கும் அதிமான நபர்களின் தொழில் வாய்ப்புகள் இல்லாமலாக்கப் பட்டுள்ளன. இந்நிலையில் இவற்றுக்கான தீர்வினை அரசாங்கத்தினால் பெற்றுக் கொடுக்க முடியாமல் போயுள்ளது.

அரசாங்கம் ராஜபக்ஷர்களின் குடும்ப நலனை கருத்திற் கொண்டே புதிய அரசியலமைப்பு திருத்தத்தை கொண் டுவர முயற்சிக்கின்றதென்பது இன்று அரசியல் ரீதியாக பேசப்பட்டு வரும் விடயமாகும். இவ்வாறு ஒரு குடும்பத்தின் எண்ணங்களை நிறைவேற்றுவதற்காக அரசியலமைப்பு திருத்தம் ஒன்று கொண் டுவரப்பட்டால் நாங்கள் அதற்கு எமது எதிர்ப்பை தெரிவிப்போம். அரசாங்கத் திற்கு மக்கள் பலத்தை பெற்றுக் கொடுத் துள்ள போதிலும், இன்னமும் ஒரு வேலைத்திட்டத்தையும் முன்னெடுக்க முடியாமலே இருக்கின்றது என்றார். (ம-3)

## வரணியில்...

கிழமை இரவு 7.00 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

இதில் சாந்தகுமார் சதுசன் வயது 20 என்பவரே வாள்வெட்டுக்குள்ளானார்.

மேசன் வேலைக்கு செல்லும் குறித்த இளைஞன் வேலையை முடித்து பேருந் தில் வரும் போது வரணி சுட்டிபுரம் அம்மன் கோவிலடியில் பேருந்தை வழி மறித்த இளைஞர்கள் ஐந்து பேர் அந்த இளைஞனை பேருந்திலிருந்து இறக்கி வாளால் வெட்டியதில் கைவிரல் இரண்டு துண்டாகிய நிலையில் வலக் காலிலும் வாள் வெட்டுக்கு இலக்கான நிலை யில் மந்துவிலுக்கு செல்லும் பாரதி வீதி சந்தியில் போட்டு விட்டு சென்றுள் ளனர்

தகவல் அறிந்து வந்த தந்தை (முன் னாள் பிரதேச சபை உறுப்பினர்) தனது மகனை மயங்கிய நிலையில் வைத் தியசாலைக்கு கொண்டு சென்று ள்ளார்.

சம்பவம் தொடர பில் கொடிகாமம் பொலிஸார் மேல திக விசாரணை களை மேற் கொண்டு வருகின் றனர். (ம-3,114)


### இந்திய சாஸ்திரியார் வருகை

ஓம் சக்தி அருள் வாக்கு பெற்ற பரம்பரை ஜோதிடர்
சிங்கப்பூர்,மலேசியா மற்றும் பல நாடுகளில் புகழ் பெற்ற
இரத்தினசாமி அவர்கள்
ஜாதகம், கைரேகை, எண்கணிதம்
திருமணத்தடை, கல்வித்தடை, வெளிநாடு செல்லத்தடை மற்றும் குழந்தைப் பாக்கியம், காதலில் தோல்வி, குடும்பத்தில் பிரச்சினை, தொழில் முன்னேற்றமின்மை, புதிய தொழில் தொடங்க மற்றும் எந்தப் பிரச்சினைக்கும் தொடர்பு கொள்ளவும்.
முன்பதிவுக்கு: 071 574 8358, 071 392 9703, 076 682 7368
இல.101, Kandy Rd, jaffna (யாழ்.நீதிமன்றத்திற்கு அருகில்)
(3689)

### வாடகைக்கு

யாழ். திருநெல்வேலி, பரமேஸ்வராச் சந்தியில் பலாலி வீதியை முகப்பாகக் கொண்ட தனி வழிப்பாதை உடைய தளபாடமிடப்பட்ட (TV அலுமாரி) இணைந்த குளியலறை கொண்ட அறை வாடகைக்கு உண்டு.
077 953 0496
(3691)

### வேலைவாய்ப்பு

யாழ். நகரில் நிறுவனம் ஒன்றிற்கு உதவிக் கணக்காளர் தேவை.
(அனுபவம் உடையவர், வயதெல்லை 30ற்கும் 45ற்கும் இடைப்பட்டவர்.)
077 105 6694
(3691)

### வீடு வாடகைக்கு

யாழ். நகர்ப்பகுதியில் மாடி வீடு வாடகைக்கு உண்டு.
(நிறுவனங்களுக்கு உகந்தது)
TEL : 071 856 7567
(3661)

### மணமகள் தேவை

அரசதுறையில் பணிபுரியும் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1977ம் ஆண்டு, கிரகபாவம் 56 1/2 உடைய மணமகனுக்கு அரசதுறையில் பணிபுரியும் மணமகள் தேவை.
TEL : 077 719 3173
(3661)

### விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS
வழமைபோல வெளிநாடுகளுக்கு பொதிகளை எமக்கூடாக அனுப்பிவைக்க முடியும்
எமது நேரடிக்கிளைகள்
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● கொடிகாமம் ● திருகோணமலை ● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● மானிப்பாய் ● மருதங்கேணி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
0768226240
(C-112)

### வேலையாட்கள் தேவை

முல்லைத்தீவு, கிளிநொச்சியில் புதிதாக இயங்க இருக்கும் நிறுவனம் ஒன்றிற்கு அதே இடங்களில் வசிக்கும் கணனி அறிவுள்ள பெண் வேலையாட்கள் தேவை.
தொடர்புகளுக்கு
077 266 6429, 076 700 1072
(3684)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

### றாஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.
தொடர்பு: றாஜ் - 077 679 6623
(3688)

புதிய பிரிவுகள் ஆரம்பம் - 31/8/2020 (Mon) 8.30 am
NVQ Courses ICT CAA
தகவல் தொடர்பாடல் தொழிநுட்பத்தில் NVQ தகைமை
Computer Applications Assistant
பதிவுகளை ஆகஸ்ட் 31ம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளவும்
[Full Time - 3Months]
DMI COMPUTER EDUCATION
மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட NVQ சான்றிதழ்களை வழங்கிவரும் வடமாகாணத்தில் ஒரேஒரு தனியார் கணினி நிறுவனம்
TVEC Reg.No.P25/0056
DMI COMPUTER EDUCATION
No113, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம் 021 222 4403
(சயன்ஸ் ஹோல் அருகாமை) 0777 240 707

### கண்ணீர் அஞ்சலி



செல்வி
திவ்வியா சரவணபவன்
மலர்வு 11.02.2005
உதிர்வு 25.08.2020
எமது பாடசாலை ஆசிரியர்
திரு. முருகையா சரவணபவன் (இணுவில்)
அவர்களின் அன்புப் புதல்வியின் மறைவால் துயரடைந்துள்ள குடும்பத்தினர் மற்றும் உறவினர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!
அதிபர், ஆசிரியர்கள், பாடசாலைச் சமூகம்
யா/வீமன்காமம் மகா வித்தியாலயம்
மாவிட்டபுரம், தெல்லிப்பளை.
(C-144)

மீண்டும்
### வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை

அசாதாரண சூழ்நிலை காரணமாக முடங்கியிருந்த எமது சேவை மீண்டும் வழமைபோல் அனைத்து நாடுகளுக்கும் 100% பாதுகாப்புடன் நடைபெறுகின்றது.
(C-113)
அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
இல.01, பிறவுண் வீதி, நாவலர் வீதிச் சந்தி, யாழ்ப்பாணம்
தொ.பே:- 021 222 6113
அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்
இல.10, புதிய மாநகர சபை கட்டிடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே:- 021 222 3536

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.08.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.